பக்கங்கள்: பதினாறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 8.00

www.uthayan.com

சுடர் 19 வள்ளுவர் ஆண்டு 2034 கார்த்திகை 16 செவ்வாய்க்கிழமை (02-12-2003) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:06

## ஆபிரிக்க தேசிய காங்கிரஸுடன் புலிகளின் அரசியல் குழு பேச்சு

தென்னாபிரிக்காவுக்கு விஜயம் செய்துள்ள விடுதலைப் புலிகளின் அரசியல் குழு நேற்று அங்கு ஆபிரிக்க தேசிய காங்கிரஸோடு விரிவான பேச்சுக்களை நடத்தவிருந்தது.

புலிகளின் சமாதானச் செயலகத்தின் செயலாளர் நாயகம் எஸ்.புலித்தேவன் தலைமையில் இரு பெண் போராளிகள் உட்பட ஏழு பேரைக் கொண்ட புலிகளின் அரசியல் குழு தென்னாபிரிக்காவுக்கு விஜயம் செய்திருப்பது தெரிந்ததே.

தென்னாபிரிக்காவில் சமாதானத் தீர்வுக்காக இடம்பெற்ற பல கட்சிப் பேச்சுக்கள் பற்றிய அனுபவத்தை இலங்கை சமாதான முயற்சிகளுக்குப் பயன்படுத்தும் விதத்தில் பகிர்ந்து கொள்வதற்காகவே புலிகளின் குழு தென்னாபிரிக்காவுக்கு விஜயம் செய்திருப்பதாக ஆபிரிக்க தேசிய காங்கிரஸின் செய்திக் குறிப்பு தெரிவித்தது.

முன்னாள் பல கட்சிப் பேச்சுக் குழுவின் பிரமுகர்களை நேற்று சந்திப்பதற்கு முன்னர் ஆபிரிக்க தேசிய காங்கிரஸின் செயலாளர் நாயகம், பிரதி செயலாளர் நாயகம், பொரு

(16ஆம் பக்கம் பாாக்க)



தென்னாபிரிக்கா சென்றுள்ள விடுதலைப் புலிகளின் அரசியல் குழுவினர்.

## தமிழகத்தில் யாழ். வாசி கைது!

சுமார் ஒன்றரை கோடி ரூபா பெறுமதியான ஹெரோயின் போதைப் பொருளை இந்தியாவிலிருந்து இலங்கைக்கு கடத்த முயன்றவர் எனக் கருதப்படும் யாழ். வாசியை திருச்சி பொலீஸார் கைதுசெய்துள்ளனர். இவருடன் தொடர்புடைய இலங்கையர்கள் இருவரைத் தேடிப் பொலீஸார் வலை விரித்துள்ளனர்.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சந்திர

(16ஆம் பக்கம் பாாக்க)

உள்ளே...

ஐந்தாம் தர புலமைப்பரிசில் பரீட்சைக்கான மாதிரி வினாத்தாள் வரிசையில் இறுதி வினாத்தாள் இன்றைய உதயனில் பிரசுரமாகிறது.

## திருமலை நிலைமை தொடர்பாக விசேட விவாதத்துக்கு ஏற்பாடு:

# பாதுகாப்பு விவகாரம் குறித்து இன்று நாடாளுமன்றத்தில் பதில் தருவது யார்?

## இன்னும் தெளிவான முடிவு இல்லை

கொழும்பு,டிசெம்பர்2

**திருகோணமலை மாவட்டத்தில் கடந்த சில தினங்களாக இடம்பெற்று வரும் வன்முறைச் சம்பவங்கள் குறித்து நாடாளுமன்றத்தில் இன்று ஒத்திவைப்பு வேளையில் விவாதம் ஒன்றை நடத்துவதற்கு சபாநாயகர் இணங்கியுள்ளார். ஆனால் பாதுகாப்புத் தொடர்பான இந்த விவாதத்தின்போது பாதுகாப்புத்துறைக்குப் பொறுப்பான அமைச்சர் என்ற முறையில் நாடாளுமன்றத்தில் பிரசன்னமாகிப் பதிலளிக்கப்போவது யார் என்ற கேள்விக்கு இன்னும் முடிவு கிட்டவில்லை.**

திருகோணமலை மாவட்டத்தில் வாழும் முஸ்லிம் மக்களுக்கு ஏற்பட்டுள்ள அவலநிலைக்கு யார் பொறுப்பு? ஜனாதிபதியா? இல்லை அரசும் புலிகளும் செய்து கொண்ட சமாதான ஒப்பந்தமா? என்ற சர்ச்சை நேற்று நாடாளுமன்றத்தில் இடம்பெற்றது.

ஜனாதிபதி, பிரதமர், பிரதம நீதியரசர் நாடாளுமன்றம் மற்றும் அப்பிரிவினருடன் தொடர்புடைய திணைக்களங்கள் ஆகியவற்றுக்கான நிதி ஒதுக்கீட்டுக் குழுநிலை விவாதத்தின் போதே இந்த சர்ச்சை எற்பட்டது.

திருகோணமலை மாவட்டத்தின் ஐ.தே.க. எம்.பியான சின்ன மஹ்ரூப், திருகோணமலை மாவட்டத்தில் இடம்பெற்ற 7 முஸ்லிம்களின் படு

(16ஆம் பக்கம் பாாக்க)

## மலிக்-தித்தவல பேச்சு தீர்வு ஏதுமின்றி முடிவு!

கொழும்பு,டிசெ.2

ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் இடையில் இணக்க நிலையை ஏற்படுத்துவது தொடர்பான படிமுறைகள் பற்றிப் பேச அமைக்கப்பட்ட மலிக சமரவிக்ரம - மனோ தித்தவல குழுவின் கூட்டம் நேற்று எந்த முடிவும் எடுக்கப்படாமலேயே நிறைவு பெற்றது.

இந்தக் கூட்டம் தொடர்பாக விடுக்கப்பட்டுள்ள கூட்டு அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

நேற்றுப் பகல் 10.30 மணிக்கு ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் மனோ தித்தவெல, ஐக்கிய தேசியக்கட்சியின் தவிசாளர் மலிக் சமரவிக்கிரம பிரதமரின் செயலாளர் பிரட்மன் வீரக்கோன் ஆகியோரை உள்ளடக்கிய குழு அலரிமாளிகை

(16ஆம் பக்கம் பாாக்க)

நாவாந்துறையில்

## பாதுகாப்பு வலயத்தில் ஒரு பகுதி படையினரால் நேற்று விடுவிப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.2

நாவாந்துறையில் கடற்கரைப் பகுதியை அண்டியதாக அமைந்திருந்த படையினரின் உயர்பாதுகாப்பு வலயப் பகுதியில் சுமார் ஒன்றரை சதுரக் கிலோ மீற்றர் நிலப்பரப்பு பொதுமக்களின் மீள்குடியமர்வுக்காக படையினரால் விடுவிக்கப்பட்டிருக்கின்றது.

இந்த நிலப்பரப்பினை நாவாந்துறை படைமுகாம் பொறுப்பதிகாரி மேஜர் உபாலி இந்து சமய கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரனிடம் நேற்று சம்பிரதாய பூர்வமாகக் கையளித்தார்.

கடந்த 8வருடங்களாக இப்பகுதியைப் பொதுமக்கள் பயன்படுத்த படையினர் தடைவிதித்திருந்தனர். இப்பகுதியில் மீளக்குடியமர்வதற்கு அனுமதிக்குமாறு இப்பகுதி பொதுமக்கள் கேட்டுக்கொண்ட

(16ஆம் பக்கம் பார்க்க)

## திருமலையில் குழப்பத்தைத் தூண்டும் சம்பவங்களின் பின்னணியில் தீயசக்திகள்

### அவற்றை இனங்காணவேண்டும் என்கிறார் புலிகளின் பிரமுகர்

கன்னியா,டிசெ.2

திருகோணமலையில் அண்மையில் இடம்பெற்ற சம்பவங்களுக்கு குழப்பத்தை ஏற்படுத்தும் தீய சக்திகளே காரணம். அவைதான் பின்னணியில் இருந்து கலவரத்தைத் தூண்டிவிடுகின்றன. இரண்டு சந்தர்ப்பங்களில் அவை இனங்காணப்பட்டுள்ளன. அவற்றுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கவேண்டும்.

புலிகளின் திருமலை மாவட்ட பொருண்மியப் பொறுப்பாளர் தருமன் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

பொலீஸ், இராணுவம், கண்காணிப்புக் குழு, சமாதானக் குழு, புலிகள் ஆகியவற்றின் பிரதிநிதிகள் நேற்று மாவட்ட கண்காணிப்புக் குழுவின் அலுவலகத்தில் கூடி நகரின் பதற்ற நிலை குறித்து ஆராய்ந்தனர்.

மாவட்ட போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் பிரதித் தலைவர் கோர்ட் தலைமையில் நடைபெற்ற இக்கலந்துரையாடலில் மாவட்ட பொலீஸ் அத்தியட்சகர்

(16ஆம் பக்கம் பாாக்க)

திருகோணமலையில் நேற்று

## ஓட்டோவில் கிரனேட் மீட்பு; மூன்று முஸ்லிம்கள் கைது!

திருகோணமலை,டிசெ.2

திருகோணமலையில் ஓட்டோ ஒன்றிலிருந்து இரு கிரனேட்டுகளை பொலீஸார் நேற்றுக் கைப்பற்றினர். இது தொடர்பாக அந்த ஓட்டோவில் இருந்த 3 முஸ்லிம்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். ஓட்டோவில் பயணித்த கிண்ணியா வாசிகளான அப்துல் நஸீம் அல்ஸார், முகமட் ஹனிபா சமருல்லா மற்றும் ஓட்டோ சாரதியான அமீர் ஹம்ஸா ஆகியோரே கைது செய்யப்பட்டவர்களாவர்.

இவர்கள் மூவரும் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

இதேவேளை, திருகோணமலை மற்றும் கிண்ணியா பிரதேச செயலாளர் பிரிவுகளில் நீக்கப்பட்டிருந்த ஊரடங்குச் சட்டம் நேற்றுத் திங்கட் கிழமை மீண்டும் நடைமுறைப்படுத்தப்பட்டது.

நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை பின்னிரவில் கிண்ணியாவிலிருந்து 2

(16ஆம் பக்கம் பாாக்க)

## கூட்டணி மத்திய செயற்குழுவின் அடுத்த கூட்டம் அம்பாறையில்!

கட்சியின் தலைமைப் பதவியில் வீ. ஆனந்தசங்கரி நீடிப்பதற்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வந்து சர்ச்சையில் சிக்கியிருக்கும் தமிழர் விடுதலைக் கூட்டணி, தனது அடுத்த மத்திய குழுக் கூட்டத்தை எதிர்வரும் 14ஆம் திகதி அம்பாறையில் நடத்தத் தீர்மானித்திருக்கிறது.

இது தொடர்பான கூட்ட அறிவித்தலை கட்சியின் நிர்வாகச் செயலாளர் என்.ரவிராஜ் எம்.பியும் செயலாளர் நாயகம் இரா.சம்பந்தன் எம்.பியும் ஒப்பமிட்டு அடுத்த ஓரிரு தினங்களில் உறுப்பினர்களுக்கு அனுப்பி வைக்கவிருக்கின்றனர் என்றும் தெரிய வந்தது.

நேற்றுமுன்தினம் கொழும்பில் நடைபெற்று முடிந்த மத்திய செயற்குழுக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் அடிப்படையில் வீ.ஆனந்தசங்கரி கட்சியின் தலைவராக நீடிக்க முடியாது என்றும் -

அதனால், அடுத்த மத்திய செயற்குழுக் கூட்டத்துக்கான கூட்ட அறிவித்

(16ஆம் பக்கம் பார்க்க)

## கட்சியின் தலைவர் பதவியை சங்கரி இழந்துவிட்டார் என்கிறார் சம்பந்தன்

கொழும்பு,டிசெ.2

தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவராக வீ.ஆனந்தசங்கரி செயற்படுவதில் நம்பிக்கையில்லை என்று கட்சியின் மத்திய குழு தீர்மானம் நிறைவேற்றியிருப்பதால் அவரை இனி கட்சியின் தலைவராகக் கணிக்கமுடியாது. அந்தப் பதவியை அவர் இழந்துவிட்டார்.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் இரா.சம்பந்தன்.

(16ஆம் பக்கம் பாாக்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# முஸ்லிம்களின் 3ஆம் தரப்புக் கோரிக்கையால் அரசு - புலிகள் சமாதானப் பேச்சு குழம்பலாம்!

## மட்டக்களப்பில் விநாயகமூர்த்தி எம்.பி. எச்சரிக்கை

கொழும்பு,டிசெ.2

முஸ்லிம்கள் மூன்றாம் தரப்பாகக் கலந்துகொண்டால், அரசுக்கும் புலிகளுக்கும் இடையிலான சமாதானப் பேச்சுக்கள் குழம்பக்கூடும்.

- இவ்வாறு தெரிவித்துள்ளார் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் தலைவரும் யாழ். மாவட்ட எம்.பியுமான அ.விநாயகமூர்த்தி.

தற்போதைய அரசியல் நிலை தொடர்பாக கட்சி உறுப்பினர்களுக்கு விளக்கமளிக்கும் காங்கிரஸின் மட்டக்களப்புக் கிளைக் கூட்டம் நேற்று முன்தினம் நடைபெற்றது.

மாவட்டக் கிளைத் தலைவர் இரா.தவராசா தலைமையில் 'லேக் வியூ இன்' விருந்தினர் மண்டபத்தில் நடைபெற்ற இக்கூட்டத்தில் விநாயகமூர்த்தி எம்.பி. மேலும் கூறியதாவது:-

முஸ்லிம் மக்களுக்கு உரிய உரிமைகள் வழங்கப்படவேண்டும். ஆனால், இரு தசாப்த காலப் போரின் பின் நடைபெறும் சமாதானப் பேச்சுக்களில் தாம் மூன்றாம் தரப்பாகக் கலந்துகொள்ளவேண்டும்; அதற்கு அனுமதி வழங்கவேண்டும் என்று முஸ்லிம்கள் அடம்பிடிப்பது ஆரோக்கியமான விடயம் அல்ல. அவ்வாறான ஒரு கோரிக்கை பேச்சுக்களைக் குழப்பிவிடலாம்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும், ஜே.வி.பிக்குமிடையில் ஒப்பந்தம் கைச்சாத்திடப்படுமானால், நாடு மீண்டும் ஒரு பொதுத் தேர்தலுக்கு முகம் கொடுக்கவேண்டிய நிலை உருவாகும். தற்போதைய சூழ்நிலையில் நெருக்கடிகளைத் தவிர்க்க ஜனாதிபதியும், பிரதமரும் இணைந்து விடுதலைப் புலிகளுடன் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிக்கவேண்டும்.

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் தனிப்பட்ட கட்சி நலன்களுக்காகச் செயற்படவில்லை. புலிகளின் தலைவர் பிரபாகரனே தமிழ் மக்களின் தேசியத் தலைவர். புலிகளே தமிழ் மக்களின் ஏகபிரதிநிதிகள். இதற்கமையவே நாம் எமது அரசியலை நடத்திவருகிறோம்.

புலிகளுக்காகப் பேசுவதற்கு பலர் அஞ்சிய காலத்தில் மாமனிதர் குமார் பொன்னம்பலம் புலிகளின் அரசியல் தலைமையை ஏற்று சமாதான முயற்சிகளுக்கு அடித்தளமிட்டார்.

விடுதலைப் புலிகளே ஏகபிரதிநிதிகள் என்று பிரசாரம் செய்து, தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தேர்தலில் போட்டியிட்டு வெற்றிபெற்றது. அந்தக் கோட்பாட்டிற்கு ஏற்ப கூட்டமைப்புத் தொடரவேண்டுமென்பதே எமது அவா.

தமிழர் விடுதலைக் கூட்டணியை எமது கட்சி அழிக்கப் பார்ப்பதாக தலைவர் ஆனந்தசங்கரி குற்றம் சுமத்துகிறார். இன்னொரு கட்சியை அழிக்கவேண்டிய தேவை எமக்கில்லை. இன்று அவர்களே தங்கள் கட்சியை அழித்துக் கொண்டிருக்கிறார்கள்.

வரவு - செலவுத் திட்டம் அமைச்சரவை தீர்மானத்திற்கு அமைய நவம்பர் 12ஆம் திகதி நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்படவிருந்தது. ஆனால், எமது அரசியல் வரலாற்றில் வரவு-செலவுத் திட்டம் முதன் முதலாக காரணம் கூறாது ஒத்திவைக்கப்பட்டது.

ஜனாதிபதி அமைச்சுக்களை பொறுப்பேற்பதற்கு ஓரிரு தினங்களுக்கு முன்னர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் என்னோடு தொடர்புகொண்டு நிலைமையைத் தெரிவித்து, சமாதான முயற்சிகளைத் தொடரும் ஐ.தே.க அரசுக்கு கூட்டமைப்பு உறுப்பினர்கள் 15 பேரும் ஆதரவளிப்பார்கள் என்று ஜனாதிபதிக்கும் ஊடகங்களுக்கும் தெரிவிக்குமாறு கேட்டார்.

நான் கூட்டணிச் செயலாளர் நாயகத்திடம் தொடர்புகொண்டு இதுபற்றிக் கூறியபோது பிரதமர் அவ்வாறு தம்மிடம் எதுவும் கேட்கவில்லை. என்று அவர் பதிலளித்தார்.

எனினும், அரசுக்கு ஆதரவளிப்பதாக நான் தெரிவித்ததையடுத்து மதில் மேல் பூனையாக நின்ற சிறுபான்மைக் கட்சிகள் மீண்டும் அரசின் பக்கம் சாய்ந்துவிட்டன. அரசுக்கு ஆதரவு என்று நாம் அறிக்கைவிடாது இருந்திருந்தால் நிலைமை தலைகீழாக மாறியிருக்கும்.

விடுதலைப் புலிகள் இடைக்கால நிர்வாகம் தொடர்பான பதில் வரைவை அரசிடம் கையளித்துள்ளார்கள். இப்போது பந்து தென்னிலங்கை தலைவர்களின் கைகளிலேயே உள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகள் ஜனநாயக அரசியல் கட்சிகளுக்கு அச்சுறுத்தலாக செயற்படுகின்றார்கள் எனக் கூறப்படுவதை நான் ஏற்கமாட்டேன். ஆயுதக் குழுவாகவுள்ள தமிழ் அரசியல் கட்சிகள் கூலிப்படையாக செயற்படப் போகிறார்களா அல்லது தமிழர் அபிலாஷைகளைப் பிரதிபலிக்கும் ஜனநாயக கட்சிகளாக செயற்படப் போகிறார்களா என்பதை முடிவாகத் தீர்மானிக்கவேண்டும். டகளஸ் தேவானந்தா போன்றவர்கள் மாதாந்தம் 35 லட்சம் ரூபா பணத்தைக் கூலியாக வாங்கி அரசியல் நடத்துவதை தமிழ்மக்கள் ஒரு போதும் அனுமதிக்கமாட்டார்கள்.

பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்குவதற்கு உரிய அழுத்தத்தை நாம் தொடர்ந்து கொடுப்போம்.

- இப்படி அவர் கூறினார்.

சிரேஷ்ட உபதலைவர் கலாநிதி ந.குமரகுருபரன் பேசுகையில் கூறியதாவது:-

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு நாம் பக்கபலமாக இருப்போம். எமது கட்சி உரிமைப் போராட்டத்திற்கு என்றுமே விசுவாசமாக இருக்கும்.

தேசியத் தலைவர் பிரபாகரன் சமாதானத்தின் மீதான பற்றுதலை மாவீரர்தின உரையில் பிரதிபலித்தார். இப்போது ஜனாதிபதியும் சமாதானப் பேச்சை முன்னெடுக்கும் நிலைப்பாட்டுக்கு தள்ளப்பட்டிருக்கிறார்.



சந்திரிகா ஆட்சியின் இறுதிக் காலத்தில் புலிகள் சமாதானத்தின் வேட்கையை வெளிப்படுத்தி ஒரு தலைப்பட்சமாக போர்நிறுத்தத்தை அறிவித்தும், அதனை நிராகரித்து இராணுவ நடவடிக்கையை மேற்கொண்டார் ஜனாதிபதி. இப்போது தீபாவளி நாளில் ஆர்ப்பாட்டம் செய்கிறார். இந்த நிலையில் தமிழ் மக்கள் மத்தியில் அவரே மீண்டும் நம்பிக்கையை ஏற்படுத்தவேண்டும்.

நாட்டைப் பிரிக்க வழிவகுக்கக் கூடாது என்று சிங்களத் தலைவர்களை இன்று நாம் அழைப்பது உரிமைப் போராட்டத்தை வலுப்படுத்தவே தவிர தனிப்பட்ட கட்சி நலனுக்காக அல்ல.

- இப்படி அவர் கூறினார்.

### கல்வியியல் கல்லூரி மாணவருக்கு!

யாழ். தேசிய கல்வியியல் கல்லூரியில் உள்ளகப் பயிற்சியை முடித்துக்கொண்ட மாணவர்களுக்கான கொடுப்பனவு நாளை புதன்கிழமை வழங்கப்படவுள்ளதாகப் பீடாதிபதி அறிவித்துள்ளார். (ஐ)

### வினா - விடை போட்டி மண்டபம் இடம்மாற்றம்

யாழ்ப்பாணம்,டிசெ.2

மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தால் யாழ். பல்கலைக்கழக நூலக கேட்போர் கூடத்தில் இன்று நடத்தப்படவிருந்த வினா - விடை மற்றும் பட்டி மண்டபப் போட்டிகள் தவிர்க்கமுடியாத காரணத்தினால் யாழ். தொழில்நுட்பக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறுமென யாழ்.அலுவலக செயற்றிட்ட அலுவலர் செல்வி வி.வேழினி தெரிவித்தார். (எ-7-5)

### உடற்கல்வி டிப்ளோமா சங்கத்தினருக்கு!

உடற்கல்வி டிப்ளோமாதாரிகள் சங்க உறுப்பினர்களுக்கான அவசர கலநதுரையாடல் இன்று செவ்வாய்க்கிழமை மதியம் 12 மணிக்கு நீராவியடி பிறைற்மன் கல்வி நிலையத்தில் இடம்பெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆசிரியர் நியமனம் தொடர்பாக இதில் கலந்துரையாடப்பட இருப்பதால் சங்கத்தில் பதிவுசெய்த அனைவரும் கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

### திருமறை கலாமன்ற ஆண்டு விழா

யாழ்ப்பாணம்,டிசெ.2

திருமறைக் கலாமன்றத்தின் 38 ஆவது ஆண்டு நிறைவு தின விழா நாளை புதன்கிழமை மறைக்கல்வி நடுநிலைய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதில் காலை 7 மணிக்கு இறைவழிபாடும் பிற்பகல் 4.30 மணிக்கு கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. பிற்பகல் நிகழ்வுகளாக நாடகம், நடனங்கள் மற்றும் நாட்டுக்கூத்து போன்றவற்றுடன் அண்மையில் திருமறைக் கலாமன்றத்தால் நடத்தப்பட்ட தென்மோடி நாட்டுக்கூத்துப் போட்டியில் வெற்றிபெற்ற குழுக்களுக்கான பரிசளிப்பு நிகழ்வும் இடம்பெறவுள்ளது.

திருமறைக் கலாமன்றத்தின் இசைத்துறைப் பொறுப்பாளர் ம.யேசுதாசன் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறை விரிவுரையாளர் கலாநிதி எஸ்சிவலிங்கராஜா கலந்துகொள்கிறார். (ஒ-9-4)

## பாதுகாப்பு ஜனாதிபதியின் கீழ் வந்தவுடன் ஏழு முஸ்லிம்கள் ஏழு நாள்களில் கொலை!

### திருமலை நிலைமை குறித்து சின்ன மஹ்ரூப் கண்ணீர் மல்க உரை

ஜனாதிபதி பாதுகாப்பு அமைச்சையும் உள்துறை அமைச்சையும் பொறுப்பேற்ற பின்னர் ஏழு நாள்களில் ஏழு பேர் கொல்லப்பட்டுள்ளனர். இக்கொலைகளுக்கு ஜனாதிபதியே பொறுப்பேற்கவேண்டும். இக்கொலைகளுக்கு தாங்கள் பொறுப்பல்ல என்று புலிகள் கைகழுவி விடமுடியாது.

திருமலை மாவட்ட ஐ.தே.க. எம்.பியான சின்ன மஹ்ரூப் நேற்று நாடாளுமன்றத்தில் பேசும்போது இவ்வாறு ஆவேசமாகக் கூறினார்.

சின்ன மஹ்ரூப் நாடாளுமன்றத்தில் நேற்று கண்ணீர் சிந்தியவாறு தொடர்ந்து பேசும்போது கூறியதன் விவரம் வருமாறு:-

இக்கொலைகளுக்கு விடுதலைப் புலிகளும் பொறுப்பேற்கவேண்டும். ஏழு முஸ்லிம்கள் கொல்லப்பட்ட நிலையிலும் ஒரு தமிழ் மகன் கூட பாதிப்புக்குள்ளாகவில்லை. நோன்புப் பெருநாளிற்கு இரண்டு நாள்கள் இருக்கும் போது 23ஆம் திகதி டைசர் நகரில் ஒருவர் கொல்லப்பட்டார்.

அதன் பின்னர் கச்சகொடித்தீவில் லொறியில் பெருநாளுக்கு காய்கறி வகைகள் மற்றும் குடும்பத்தினருக்கு புத்தாடைகளை வாங்கிக் கொண்டு வந்த ஐந்து முஸ்லிம்கள் மீது கைக்குண்டு வீசப்பட்டது. இதில் மூவர் கொல்லப்பட்டனர். நடுஊற்றுப்பகுதியில் மூன்று முஸ்லிம் விவசாயிகள் பின்னால் கைகள் கட்டப்பட்ட நிலையில் மிருகத்தனமாகக் கோடரியால் வெட்டிக் கொலை செய்யப்பட்டனர். இவர்களது சடலத்தை எடுத்துச்சென்ற - கொல்லப்பட்டவரின் மகனொருவருக்கு - சடலங்களுக்கு அப்பால் நின்றுகொண்டிருந்த இளைஞர்கள் சிலர் சாரத்தைக் தூக்கிக் காட்டி கழுத்துமாக நடந்து கொண்டுள்ளனர்.

இவ்வாறு திருகோணமலை மாவட்டதில் ஏழு முஸ்லிம்கள் கொல்லப்பட்டனர். எனவே, நாளை செவ்வாயன்று பாதுகாப்பு அமைச்சின் செயலாளர், உள்துறை அமைச்சின் செயலாளர் முப்படைத்தளபதிகள் ஆகியோரை நாடாளுமன்றத்துக்கு வரவழைக்க சபாநாயகர் நடவடிக்கை எடுக்கவேண்டும். அதேவேளை, திருமலை பாதுகாப்புக் குறித்து இச்சபை ஒத்திவைப்புவேளை பிரேரணை யொன்றையும் கொண்டுவரவுள்ளோம்.

இவ்வாறு அவர் கூறினார். (ஒ)

## படகுப் பாதைச் சேவைப் பொறுப்பு வீதி அபிவிருத்தி அதிகாரசபையிடம்

யாழ்ப்பாணம்,டிசெ.2

ஊர்காவற்றுறை - காரைநகர் படகுப் பாதைச் சேவையை வீதி அபிவிருத்தி அதிகார சபை நேற்று முதல் மீண்டும் பொறுப்பேற்றுள்ளது.

இதன்படி, காலை 7.30, 9.30 முற்பகல் 11.30, பிற்பகல் 1.30, 3.30, மாலை 5.00 மணி ஆகிய நேரங்களில் ஊர்காவற்றுறையில் இருந்தும் -

காலை 8.00, 10.30, மதியம் 12.00, பிற்பகல் 2.30, மாலை 4.30, 6.30 ஆகிய நேரங்களில் காரைநகரில் இருந்தும் படகுப் பாதைச் சேவை இடம்பெறவுள்ளது.

நேற்றுமுதல் மறு அறிவித்தல் வரையும் இந்த நேர அட்டவணைப் படியே இச்சேவை இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

ஒருவழிப் பயணத்துக்கு பயணி ஒருவருக்கு 2 ரூபாவும் சைக்கிள் ஒன்றுக்கு 3 ரூபாவும், மோட்டார் சைக்கிள் ஒன்றுக்கு 6 ரூபாவும் முச்சககர வண்டிக்கு 10 ரூபாவும் அறவிடப்படவுள்ளது என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-10)

### ஐஸ்கிறீம் வான் மோதி குடும்பஸ்தர் பலி!

யாழ்ப்பாணம்,டிசெ.2

கோப்பாய், இராச வீதி, கரந்தன் சந்திக்கு அண்மையில் நேற்றிரவு 7.30 மணியளவில் ஐஸ்கிறீம் விற்பனை வான் ஒன்றும் சைக்கிளும் மோதிக்கொண்டதில் சைக்கிளில் சென்றவர் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டார்.

கோப்பாய் தெற்கைச் சேர்ந்த இளையப்பு கோபாலசிங்கம் (வயது 57) என்பவரே இவ்விபத்தில் உயிரிழந்தவர் ஆவார்.

தெங்கு பனம்பொருள் சங்க ஊழியராக இவர், அலுவலகத்திலிருந்து வடு செல்கையிலேயே விபத்து நேர்ந்ததாகக் கூறப்பட்டது.

விபத்தை அடுத்து வான் நிறுத்தப்படாது சென்றுவிட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. இது தொடர்பாக கோப்பாய் பொலீஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது.

ஸ்தலத்திற்குச் சென்ற கோப்பாய் பொலீஸார் விபத்துத் தொடர்பான பூர்வாங்க விசாரணைகளை மேற்கொண்டனர். சடலம் யாழ். ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (ஒ-9-72)

### நுண்கலைத்துறை கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,டிசெ.2

யாழ். பல்கலைக்கழக கலைப் பீட நுண்கலைத்துறை மாணவர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று இன்று செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு நுண்கலைத்துறை வளாகத்தில் நடைபெறவுள்ளது.

இக்கலந்துரையாடலில் நுண்கலைத்துறை மாணவர்கள் அனைவரும் தவறாது கலந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (ஒ-4)

## காணாமற்போனோர் குறித்த இறுதிக்கட்ட விசாரணைக்கு சி.ஐ.டி. குழு வருகின்றது

யாழ்ப்பாணம்,டிசெ.2

குடாநாட்டில் கடந்த காலங்களில் காணமற்போனோர் தொடர்பான இறுதிக்கட்ட விசாரணைகளை மேற்கொள்வதற்கு விசேட குற்றப்புலனாய்வுப் பிரிவின் அதிகாரிகள் குழு ஒன்று அடுத்த வாரம் யாழ்ப்பாணம் வரவிருக்கின்றது.

இக்குழுவினர் யாழ். பொலீஸ் நிலையத்தில் இருவாரங்கள் தங்கியிருந்து மேற்படி விசாரணைகளை நடத்துவார்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விசாரணைகள் முடிவடைந்ததும்,காணாமற்போனோர் தொடர்பாக சி.ஐ.டியினரால் இதுவரை காலமும் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் அறிக்கைகள் தொகுக்கப்பட்டு இறுதி அறிக்கை தயாரிக்கப்படும் எனவும் -

அந்த இறுதி அறிக்கை பொலீஸ் தலைமைப்பீடம் மற்றும் குற்றப் புலனாய்வுப்பிரிவு பொறுப்பதிகாரி ஆகியோருக்கு அனுப்பி வைக்கப்படவிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இநத அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டதும் காணாமற்போன சம்பவங்களுடன் தொடர்புடைய படையினர்,பொலீஸ் மற்றும் சம்பந்தப்பட்ட ஏனைய தரப்பினரைக் கைதுசெய்வதற்கான விசேட உத்தரவு பொலீஸ் தலைமையகத்தினால் பிறப்பிக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுவதாகவும் சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் தெரிவித்திருக்கின்றன. (ம-4)

### ஒதியமலை கிராமத்தில்

## படுகொலையான 32 பேரின் நினைவுத் தூபி இன்று திறப்பு

நெடுங்கேணி ஒதியமலையில் 1984ஆம் ஆண்டு படையினரால் படுகொலைசெய்யப்பட்ட 32 பொதுமக்களின் நினைவாக அமைக்கப்பட்ட நினைவுத்தூபி இன்று செவ்வாய்க்கிழமை திறந்து வைக்கப்படவுள்ளது.

1984ஆம் ஆண்டு மார்ச் மாதம் 2ஆம் திகதி ஒதியமலைக் கிராமத்தில் படையினரால் 32 பொதுமக்கள் ஒதியமலை சனசமூக நிலையத்துக்குள் வைத்து படுகொலை செய்யப்பட்டனர்.

இதனையடுத்து அங்கிருந்து இடம்பெயர்ந்த மக்கள் பல்வேறு கிராமங்களிலும் வசித்து வந்தனர்.

சுமார் 20 ஆண்டுகளின் பின்னர் மீளக்குடியமரும் ஆரம்பக் கட்ட நடவடிக்கையில் ஈடுபட்ட ஒதியமலைக் கிராம மக்கள் படுகொலை செய்யப்பட்ட இடத்தில் நினைவுத் தூபி ஒன்றை அமைத்துள்ளனர் இதன் திறப்பு நிகழ்வும் கிராம அபிவிருத்திச் சங்க நிகழ்வும் கிராம அபிவிருத்திச் சங்க அங்குரார்ப்பண வைபவமும் இன்று நடைபெறவுள்ளன. (ஒ-9)

உலக அரங்கில்

# அமெரிக்கப் படையினருடன் கடும்சண்டை

# 54 ஈராக்கியர்கள் பலி! பதற்றம் நீடிக்கிறது!!

பக்தாத்,டிசெம்பர்2

**அமெரிக்கப் படையினருக்கும் சதாம் ஹுசைனின் ஆதரவாளர்களுக்கும் இடையில் நடந்த கடும் சண்டையில் 54 ஈராக்கியர்கள் கொல்லப்பட்டனர். 5 அமெரிக்கப்படையினர் காயமடைந்தனர். அங்கு பதற்றம் நீடிக்கிறது. சம்பவ இடத்தில் நூற்றுக்கணக்கான அமெரிக்கப்படையினர் குவிக்கப்பட்டுள்ளனர்.**

ஈராக்கின் வடபகுதி நகரான சமாராவில் நேற்றுமுன்தினம் இச்சம்பவம் நடந்தது.

அங்குள்ள இராணுவ முகாமில் இருந்து அமெரிக்காவின் நான்காவது படைப்பிரிவினர் ரோந்துப்பணிக்காக முகாமைவிட்டு வெளியேறியபோது சண்டை மூண்டது.

அப்பகுதியில் பதுங்கியிருந்த சதாம் ஆதரவு கெரில்லாக்கள் படையினர் மீது சரமாரியான துப்பாக்கிப் பிரயோகம் நடத்தினர்.

வீதியோரம் புதைத்திருந்த கண்ணி வெடிகளை வெடித்தும், கிரேனேட்டுகளை வீசியும் அமெரிக்கப்படை மீது நடந்த தாக்குதல் மூர்க்கமடைந்தது.

சம்பவ இடத்திற்கு உடனடியாக விரைந்த மேலதிக படையினர் கெரில்லாக்களை நோக்கி கடும் தாக்குதல் நடத்தினர். ஏவுகணைகளையும், பீரங்கிகளையும் படையினர் பயன்படுத்தி தாக்குதல் நடத்தினர்.

சண்டை நகர்ப்பகுதியில் நடைபெற்றதால் சிவிலியன்கள் பலர் காயமடைந்தனர் என்று சமரா வைத்திய சாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்தச் சண்டையில் 5 படையினரும், 18 சிவிலியன்களும் காயமடைந்தனர் என்று பக்தாத்திலுள்ள அமெரிக்கப்படைத் தலைமை தெரிவித்துள்ளது.

ஆனால், மேற்படி சண்டையில் 18 அமெரிக்கப்படையினர் காயமடைந்தனர் என்று பக்தாத்திலுள்ள நிருபர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

"சதாம் ஆதரவுப் படையினர் எட்டுப்பேரை சிறைபிடித்துள்ளோம். அவர்களிடமிருந்த பெருமளவிலான ஆயுதங்களையும் கைப்பற்றியுள்ளோம்."

- என்று அமெரிக்கப்படைத் தளபதி மெக் டொனால்ட் தெரிவித்துள்ளார்.


ஈராக்போர் முடிந்தபின்னர் அமெரிக்கப்படையினருக்கு எதிராக சதாம ஆதரவுப்படையினர் ஒன்று திரண்டு நடத்திய பாரிய பெரும் தாக்குதல் இது வாகும்.

இச்சம்பவத்தை அடுத்து சமரா நகர் முழுவதும் அமெரிக்கப்படையினர் ரோந்துப்பணியில் ஈடுபட்டுள்ளனர். ஹெலி கொப்டர்களும் ஆகாயத்தில் வட்டமிட்டபடி உள்ளன. மேலதிக அமெரிக்கப்படையினர் அங்கு விரைந்துள்ளனர். அவர்கள் குழுக்களாக இணைந்து தேடுதல்களையும் நடத்தி வருகின்றனர்.

"சண்டை நடைபெற்ற பகுதிக்குச் செல்ல எவரையும் படையினர் அனுமதிக்கவில்லை. அங்கு கடும் பாதுகாப்புப் போடப்பட்டுள்ளது" என்று அங்குள்ள பி.பி.ஸி. நிருபர் தெரிவித்துள்ளார்.

சண்டை நடைபெற்ற சமராநகரில் சாதாம் ஹுசைனுக்கு ஆதரவான சன்னி இன முஸ்லிம்கள் அதிகளவில் உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. அங்கு தொடர்ந்து பதற்றம் நீடிக்கிறது. (ஐ)





ஈராக்கில் நேற்று இடம்பெற்ற சண்டைகளினால் துப்பாக்கிச் சன்னம் துளைத்த வீடு ஒன்றின் கண்ணாடிகளுக்கு ஊடாக ஈராக்கியர் சிலர் மிரட்சியுடன் பார்த்துக்கொண்டிருப்பதையும் சம்பவத்தில் காயமடைந்த ஒருவருக்கு வைத்தியசாலையில் சிகிச்சை அளிக்கப்படுவதையும் படத்தில் காணலாம்.

# இரண்டு தென்கொரியர்கள் ஈராக்கில் சுட்டுக்கொலை!

சோல்,டிச.2

ஈராக்கின் தென்பகுதி நகரான திக்ரித்தில் இரண்டு தென்கொரியர்கள் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

நேற்றுமுன்தினம் நடந்த இச்சம்பவத்தில் மேலும் இரண்டு தென் கொரியர்கள் காயமடைந்தனர்.

திக்ரித்தில் இயங்கிவரும் அமெரிக்க தொழில்நுட்ப நிறுவனமொன்றின் மின்சாரப்பிரிவில் பணியாற்றிய தென் கொரியர்கள் மீதே தாக்குதல் நடத்தப்பட்டது.

கடமையில் ஈடுபட்டிருந்தபோதே இவர்கள் மீது துப்பாக்கிப்பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது என்று தென் கொரிய வெளியுறவு அமைச்சுத் தெரிவித்துள்ளது.

காயமடைந்த ஒருவரின் நிலை கவலைக்கிடமாக உள்ளது. இச்சம்பவத்தையடுத்து அங்குள்ள தென கொரிய தொழிநுட்ப வல்லுநர்களை மீண்டும் தாயகத்திற்கு அழைப்பது குறித்து தென்கொரிய வெளியுறவு அமைச்சு ஆலோசித்துவருகிறது.

ஈராக்கில் உள்ள வெளிநாட்டவர்கள் குறிவைக்கப்படும் சம்பவங்கள் அதிகரித்துவருவதால் அங்குள்ள பல்வேறு நாடுகளைச் சேர்ந்த தொழிலாளர்களின் பாதுகாப்பு கேள்விக் குறியாகியுள்ளது.

இதனையடுத்து ஈராக்கிற்கு ஒப்பந்த அடிப்படையில் தொழிலாளர்களை அனுப்ப முன்வந்த நாடுகள் அதற்கு பின்வாங்கியுள்ளன.

இது இவ்வாறு இருக்க, ஜப்பானிய இராஜதந்திரிகள் இருவர் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவத்தை அடுத்து ஈராக்கிற்கு, படை அனுப்பும் முடிவில் ஜப்பான் தடுமாற்றமடைந்துள்ளது.

எதிர்வரும் ஜுலை மாதம் ஜப்பான் நாடாளுமன்றத் தேர்தல் நடைபெறும். இந்நிலையில் ஈராக்கிற்கு படையினரை அனுப்பி அவர்கள் கெரில்லாக்களால் கொல்லப்பட்டால் தேர்தலில் பாதிப்பு ஏற்படும் என்று ஜப்பானிய பிரதமர் ஜுனிச்சிரோ கொய்சுமி கவலை தெரிவித்துள்ளார்.

# ஆப்கானிய ஜனாதிபதி பாகிஸ்தான் மீது சீற்றம்

காபூல்,டிசெ.2

பாகிஸ்தான் தீவிரவாதத்தை ஆதரித்து வருகிறது என்றும் ஆப்கானிய ஜனாதிபதி ஹமீத் கர்சாய் குற்றஞ் சாட்டியுள்ளார்.

தலிபான்களின் தலைவர் முல்லா ஓமர் பாகிஸ்தானில் உள்ள குவெட்டா மலைப்பகுதி நகரிலேயே ஒளிந்துள்ளார் என்றும் -

அவருக்கு பாகிஸ்தான் ஆதரவளித்துவருகிறது என்றும் ஜனாதிபதி ஹமீத் கர்சாய் கூறியுள்ளார்.

இது குறித்து லண்டன் பத்திரிகையொன்றிற்கு பேட்டியளித்த ஜனாதிபதி கர்சாய் -

எல்லைப்பகுதியில் நடந்துவரும் தீவிரவாதச் செயல்களுக்கு பாகிஸ்தான் ஆதரவளிக்கிறது. கடந்தவாரம் குவெட்டா மலைப்பகுதி நகரிலுள்ள மசூதி ஒன்றில் முல்லா ஓமர் தொழுகை நடத்தினார். இதற்கான தகவல்கள் கிடைத்துள்ளன.

இப்பகுதியில் உள்ள முஸ்லிம் அமைப்புகளுக்கு வழங்கிவரும் ஆதரவு மற்றும் நிதியுதவியை ஜனாதிபதி முஷாரப் உடனே நிறுத்தவேண்டும். அத்துடன், பாகிஸ்தானிலிருந்து ஆப்கானிஸ்தானுக்கு தீவிரவாதிகள் ஊடுருவுவதையும் தடுக்க வேண்டும் - என்றார்.

முல்லா ஓமரின் தலைக்கு, அமெரிக்கா 5கோடி ரூபா பரிசுத்தொகையை அறிவித்துள்ளது. ஒஸாமா பின்லேடன், சதாம் ஹுசைன் ஆகியோருக்கு அடுத்த படியாக முல்லா ஓமரின் தலைக்குத்தான் அமெரிக்கா இவ்வளவு பெரிய தொகையை பரிசாக அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இந்தியாவின் 4 மாநிலங்களில் நேற்று சட்டசபைத் தேர்தல்

புதுடில்லி,டிசெ.2

இந்தியத் தலைநகர் புதுடில்லி உட்பட நான்கு மாநிலங்களில் நேற்று சட்டசபைத் தேர்தல் நடைபெற்றது.

தேர்தலைக் கருத்திற்கொண்டு மேற்படி நான்கு மாநிலங்களிலும் பலத்த பாதுகாப்புப் போடப்பட்டிருந்தது.

அடுத்த ஆண்டு நடைபெறும் நாடாளுமன்றத் தேர்தலுக்கு இந்தத் தேர்தல் ஒரு முன்னோட்டம் என்று கருதப்படுவதால் மேற்படி நான்கு மாநிலங்களின் தேர்தல் பிரதானமாக கருதப்படுகிறது.

மத்திய பிரதேசம், ராஜஸ்தான், சதீஸ்கர், புதுடில்லி ஆகிய மாநிலங்களிலேயே தேர்தல் நடைபெற்றது.

தேர்தல் நடக்கும் நான்கு மாநிலங்களிலும் காங்கிரஸ் ஆட்சி நடந்து வருகிறது. அதனிடமிருந்து ஆட்சியைக் கைப்பற்ற பா.ஜ.க., தீவிரபிரசாரம் செய்தது.

பிரதமர் வாஜ்பாய், துணைத் தலைவர் அத்வானி, உள்ளிட்ட தலைவர்கள் தீவிரபிரசாரம் செய்தனர்.

தலைநகர் புதுடில்லியில் தேர்தல் நேரத்தில் தீவிரவாதிகள் ஊடுருவி குண்டு வைத்துவிடக்கூடாது என்பதற்காக பொலிஸாரும் படையினரும் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டனர். (ஐ)

# சீனாவில் பூமி அதிர்ச்சி பத்துப்பேர் உயிரிழப்பு!

சீனாவில் நேற்று ஏற்பட்ட பூமி அதிர்ச்சியில் பத்துக்கும்மேற்பட்டோர் கொல்லப்பட்டனர்; முப்பத்தி நான்கு பேர் காயமடைந்தனர்.

நேற்றுக்காலை சீனாவின் மேற்குப் பகுதி நகரான டானியல் ஷிங்யாங் என்ற நகரத்திலேயே பூமி அதிர்ச்சி ஏற்பட்டது.

கஸகஸ்தான் எல்லையில் இந்த நகரம் உள்ளது. 6.1ரிச்டர் அளவாகப் பதிவாகியுள்ள இந்தப் பூமி அதிர்ச்சியால் 700இற்கும் மேற்பட்ட வீடுகள் தரைமட்டமாகியுள்ளன என்று சீன ஊடகம் ஒன்று தெரிவித்தது.

உள்ளூர் நேரப்படி காலை 9.30 மணியளவில் ஏற்பட்ட இந்த பூமி அதிர்ச்சி பல கிலோமீற்றர் தூரத்திற்கு தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது என்று அந்த ஊடகம் தெரிவித்துள்ளது. (ஐ)

# புஷ் பயணித்த விமானத்தை நடுவானில் அடையாளங் கண்ட பிரிட்டிஷ் விமானி!

## புதிரைக் கிளப்புகிறது ஈராக் இரகசியப் பயணம்

லண்டன்,டிசெ.2

அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் ஈராக்கிற்கு மேற்கொண்ட இரகசியப் பயணம் பரபரப்பாக பேசப்படும் நிலையில், அவர் சென்ற விமானத்தை எதிரே வந்த பிரிட்டிஷ் விமானத்தின் விமானி பார்த்துள்ளார். ஆனால், இந்த விமானி யார் என்பது இன்னமும் கண்டுபிடிக்கப்படவில்லை.

ஈராக்கில் உள்ள அமெரிக்கப்படையினருக்கு நன்றி தெரிவிக்கும் முகமாக கடந்த வியாழக்கிழமை ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் முன்னறிவித்தல் ஏதுமின்றி - இரகசியமாக - பக்தாத்திற்குச் சென்றார்.

ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ்ஷின் பக்தாத் பயணம் இரகசியமாக இருந்ததால் அது மிகவும் சுவாரஸ்யமான விடயமாகப் பேசப்பட்டது. இருப்பினும், அவர் பயணித்த விமானத்தை நடுவானில் எதிரே வந்த பிரிட்டிஷ் விமானத்தின் விமானி அடையாளங்கண்டுள்ளார்.

இதனை வெள்ளைமாளிகை அதிகாரிகளே தற்போது தெரிவித்துள்ளனர். ஆனால், இந்த விமானி யார் என்பது குறித்து பிரிட்டிஷ் விமானசேவை நிறுவனம் மண்டையைக் குடைந்துவருகிறது.

இதுகுறித்து வெள்ளைமாளிகை மேலும் தெரிவித்திருப்பதாவது:-

ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் பயணித்த விமானம் அட்லாண்டிக் கடல் பகுதியில் சென்றுகொண்டிருந்தபோது, எதிரே வந்த பிரிட்டிஷ் விமானம், ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் பயணித்த விமானத்தை நெருங்கியது.

அந்த விமானத்தில் இருந்த விமானி, ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ்ஷின் விமானத்தை அடையாளம் கண்டுள்ளார். இதனையடுத்து, அமெரிக்க விமானத்தின் விமானியுடன் பிரிட்டிஷ் விமானி தொடர்புகொண்டு பேசினார்.

"அமெரிக்க ஜனாதிபதி பயணம் செய்யும் விமானத்தையா நான் பார்க்கிறேன்" - என்று பிரிட்டிஷ் விமானி கேட்டார்.

இதற்கு உடனடியாகப் பதிலளிக்கப்படவில்லை. ஆனால், சில நிமிடங்கள் கழித்து இல்லை, இது 'கல்ப்ஸ்ட்ரீம்ஸ்-5' விமானம் என்று பதிலளிக்கப்பட்டது.

இந்தப் பதிலையடுத்து, பிரிட்டிஷ் விமானம் அங்கிருந்து வேறு திசைநோக்கி சென்றுவிட்டது.

ஆனால், அமெரிக்க விமானத்தில் ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் பயணித்ததை பிரிட்டிஷ் விமானி அடையாளங் கண்டிருக்கிறார்.

இதனால், பயணத்தை ரத்துச் செய்து மீண்டும் அமெரிக்கா திரும்பிவிடலாம் என்று ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ்ஷின் உதவியாளர்கள் கூறினர். எனினும், ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் தனது பயணத்தை வெற்றிகரமாக முடித்துள்ளார் - என்று வெள்ளைமாளிகை மேலும் தெரிவித்துள்ளது.

இத்தகவலை ஜனாதிபதியுடன் சென்ற அவரது உதவியாளர் தெரிவித்தார் என்று வெள்ளைமாளிகை கூறியுள்ளது.

இந்த விடயம் ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ்ஷின் பயணம் முடிந்த மூன்று நாள்களின் பின்னரே வெள்ளை மாளிகை கூறியுள்ளது.

இந்த விடயம் ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ்ஷின் பயணம் முடிந்து மூன்று நாள்களின் பின்னரே வெளியில் கசிந்துள்ளது.

ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ்ஷின் விமானத்தை அடையாளம் கண்ட விமானி யார் என்பது குறித்து இன்னமும் கண்டுபிடிக்கப்படவில்லை.

இதுகுறித்து, பிரிட்டிஷ் விமானசேவை நிறுவனம் கூறியதாவது:-

எங்கள் விமானிகள் எதிரில் ஏதாவது வித்தியாசமான விமானங்களைப் பார்த்தால், அதுகுறித்து எமக்குத் தெரிவிப்பார்கள் இது பொதுவாகக் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. ஆனால், மேற்படி விடயத்தில் இதுவரை எந்த விமானியும் எதுவித தகவலையும் தெரிவிக்கவில்லை. இதனால், மேற்படி தகவலை உறுதி செய்துகொள்ள முடியவில்லை - என்றார்.

எனினும், பிரிட்டிஷ் விமானியை கண்டுபிடிக்கும் முயற்சியில் அமெரிக்க நிர்வாகம் தீவிரமாக உள்ளது.

# பாராட்டி வாழ்த்துகிறோம்



தொல்புரத்தைப் பிறப்பிடமாகவும் வட்டுக்கோட்டையை
வதிவிடமாகவும் கொண்ட

**உயர்திரு. இராசரத்தினம் ஸ்ரீதாமோதரராஜா (ஸ்ரீராஜ்)**

*(உரிமையாளர் - ஸ்ரீராஜ் தொலைத்தொடர்பகம்)*

அவர்கள் 06.11.2003 அன்று அகில இலங்கை சமாதான நீதிவானாகச் சத்தியப்பிரமாணம் செய்ததையிட்டு பெருமகிழ்ச்சி அடைவதுடன் இவரின் சமூகசேவை மேன்மேலும் வளர்ந்து நீண்டகாலம் சேவையாற்ற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

- நொச்சியம்பதி விநாயகர் ஆலய நிர்வாகத்தினரும் இளைஞர்களும்.

(C-31659)(12-14-25)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

**உயர்திரு. சிவத்தமிழ்வித்தகர் சிவமகாலிங்கம்**
(B.A. Dip.in.Edu. S.L.E.A.S.)

*(உதவிப் பணிப்பாளர் இந்துசமய விவகார அலுவல்கள் அமைச்சு)*

அவர்களின் ஆன்மீகப்பணி நயப்பு விழாக்கண்டு நாம் பெருமகிழ்ச்சி அடைவதுடன், இவரது சமயப்பணி, சமூகப்பணி தொடர அம்பாளை வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்.

**கொக்குவில் நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அம்பாள் ஆலய பரிபாலனசபையினர்.**

(சி-31655) (25-14)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

தோற்றம்
17
-
06
-
1914



மறைவு
02
-
11
-
2003

திருமதி

## இரத்தினம்மா கந்தையா

02.11.2003 அன்று இணுவில் மேற்கில் அமரத்துவம் அடைந்த எங்கள குடும்பத் தலைவியின் இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்டு சகல வழிகளிலும் உதவிபுரிந்தவர்களுக்கும் மரணச்செய்தி கேட்டு அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் எமது மனப்பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

அன்னாரின் ஆத்மசாந்திக்குப் பிரார்த்திக்கும்:
**அன்பு பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.**

"தனபதி",
இணுவில் மேற்கு,
இணுவில். (25271)(34-14-25)

# முதலாம் வருட சிரார்த்த தினம்

மண்ணிலே மலர்ந்தது
05
-
04
-
1926



விண்ணிலே கலந்தது
13
-
12
-
2002

நெடுந்தீவைப் பிறப்பிடமாகக் கொண்ட

**அமரர் தனுக்கோடி புண்ணியமூர்த்தி**

(இளைப்பாறிய மருந்துக்கலவையாளர். அராவைத்தியசாலை)

திதி: 02-12-2003

ஓராண்டு என்ன எத்தனை ஆண்டுகள் ஓடினாலும்
உங்களைத் தேடியே நாம் வாடுகின்றோம்!
அன்பு மொழி பேசி ஆனந்தமாயிருந்து
அனைவருக்கும் நோய் தீர்த்த இல்லமதில்
இருள் சூழ்ந்து ஒளியின்றி நாமிருக்க
ஓடோடி நீங்கள் சென்ற இடமறியோமே?
*எங்கிருந்தாலும் உங்கள் ஆத்மா சாந்தி பெறுக!*

19/1, மலர்மகள் வீதி,
அரியாலை,
யாழ்ப்பாணம். T.P-222 6232

மனைவி,
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(25278)(35-14)

## வருடாந்த ஒன்றுகூடல்

உடுவில் இந்து இளைஞர் மன்ற பாலர் பாடசாலையின் வருடாந்த ஒன்றுகூடல் நிகழ்வு எதிர்வரும் 6ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு உடுவில் மான்ஸ் மகா வித்தியாலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

யாழ். கல்வி வலய தமிழ்மொழி பாட உதவிக்கல்விப் பணிப்பாளர் கலைஞானகேசரி எம். எஸ். ஸ்ரீதயாளன் இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராகக் கலந்துகொள்வார்.

ஓய்வுபெற்ற இசை ஆசிரியை திருமதி நாங்கு மாரிசிவனேஸ்வரன், மகாஜனா கல்லூரி ஆரம்ப பிரிவு ஆசிரியை திருமதி க.அப்பாத்துரை ஆகியோர் சிறப்புவிருந்தினர்களாகவும் கலந்துகொள்வர். (எ-152)

## வெலிகம பகுதியில் பஸ் தீயிட்டு எரிப்பு

கொழும்பு,டிசெ.2

தெற்கில் நடைபெறும் தனியார் பஸ் வேலை நிறுத்தத்தின்போது சேவையில் ஈடுபட்ட ஒரு பஸ் இனந்தெரியாதோரால் தீயிட்டுக் கொளுத்தப்பட்டது.

வெலிகம, கல்அரம்ப பகுதியில வீதியோரத்தில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த பஸ்ஸே நேற்று அதிகாலை தீயிடப்பட்டு முற்றாக எரிந்துள்ளது.

தனியார் பஸ் வேலைநிறுத்தம் தொடருவதோடு சேவையில் ஈடுபடும் பஸ்கள் தாக்குதலுக்கு உள்ளாகும் சம்பவங்களும் நடைபெற்று வருகின்றன. (எ-152)

**SHAMROCK**
J/ஈச்சமோட்டை வீதி.
Gr. 3 முதல் O/L வரை
புதிய வகுப்புகள் ஆரம்பம்
03/12/2003 புதன் 3.30 P.m
(25288)(35)

ஆசிரியர் சேவை 3-II ஆள்சேர்ப்பு போட்டிப்பரீட்சை - 2003
விண்ணப்பப்படிவமும் அதன் முழு விவரமும் இங்கு கிடைக்கும்.
திகழ் பதிப்பகம்,
K.K.S.வீதி, இணுவில்.
(25291)(34)

படிவம்
செலான் வங்கி முகாமைத்துவப் பயிற்சியாளராவதற்கு விண்ணப்பிப்பதற்கான படிவம் உண்டு.
விண்ணப்ப முடிவுதிகதி:
20.12.2003
BARATHI PATHIPPAKAM,
Offset Printers,
430, K.K.S. Road, Jaffna.
(C/31657)(34)

"சாயிராம்"
முதியோர் பராமரிப்பு இல்லம்
கோப்பாய் தெற்கில் "சாயிராம்" முதியோர் பராமரிப்பு இல்லம் ஒன்றை ஆரம்பித்து நடத்துவதற்குத் தீர்மானித்துள்ளோம். இந்த முதியோர் இல்லத்தில் சேர விரும்புவோர் 03.12.2003 - 04.12.2003 வரை காலை 9.30 மணி முதல் மாலை 4.30 மணிவரை கீழ்க்காணும் முகவரியில் தொடர்பு கொள்ளலாம் என அறியத்தருகின்றோம்.
திருமதி அ.இராமலிங்கம்,
"சாயிராம்" முதியோர் இல்லம்,
விளையாட்டரங்க வீதி,
கோப்பாய் தெற்கு, கோப்பாய்.
(25-14) (25298)

# எட்டாவது வருட நினைவஞ்சலி

மண்ணில்
02
-
05
-
1948



விண்ணில்
02
-
12
-
1995

## திருமதி மாரிஸ் ரெல்லா செபஸ்ரியன்

(தவமணி)

எங்கள் நலனுக்காக உன்னையே அர்ப்பணித்த தவமணியே!
உங்கள் நினைவு எமது நெஞ்சங்களில் நீங்காது நிலைத்திருக்கும்!

இன்று (02.12.2003) செவ்வாய்க்கிழமை காலை 6.30 மணிக்கு யாழ். அருள் ஆச்சிரமத்தில் நடைபெறும் திருப்பலியில் பங்குகொண்டு ஆன்ம ஆறுதலுக்காக ஜெபிக்க வேண்டுகின்றோம்.

பிரிவால் துயருறும்:
**யூட்கொணரி, எதல் கரோலின், எல்விஸ் கிளமென்ற், றெக்ஸ், செபஸ்ரியன்.**

இல.215, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம். (25289)(34-14-25)

# மரண அறிவித்தல்

## செல்வி விஜயராஜா கமலாயினி

உரும்பிராய் வடக்கைப் பிறப்பிடமாகக் கொண்ட செல்வி விஜயராஜா கமலாயினி நேற்று (01-12-2003) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் மாரிமுத்து விஜயராஜா, கமலாதேவி தம்பதிகளின் அன்பு மகளும் விமலாயினி, பத்மாயினி, ரங்காயினி, நீலாயினி (யாழ். இராமநாதன் கல்லூரி ஆசிரியை), விஜயசேகரன், விஜயபாலன் (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரியும சிவபாலன், கேதீஸ்வரன் ஆகியோரின் அன்பு மைத்துனியும் நிதர்சன், நிருசன் ஆகியோரின் அன்புச் சித்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (01.12.2003) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பிற்பகல் 4.00 மணியளவில் எருளன் இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தகவல்:*
விஜயசேகரன் (சேகர் - தம்பி)
T.P 077 6007743

*உரும்பிராய் வடக்கு,*
*உரும்பிராய்.* (C/31658)(35-14-25)

# நீங்காத நினைவில் ஈரவிழிகளுடன்

முதலாம் ஆண்டு | பதின்மூன்றாம் ஆண்டு





அமரர்
**கனகன் சின்னக்குட்டி**

திருமதி
**சின்னக்குட்டி மகேஸ்வரி**

02-12-1937 ← உதயம் → 10-12-1939
13-12-2002 ← அஸ்தமனம் → 03-06-1990

திதி: 02-12-2003

பாசத்தின் வித்துக்களாய் பண்பின் உறைவிடங்களாய் பார் போற்றும்
உத்தமராய் வாழ்ந்து கண்ணை இமை காப்பது போல
எமைக் காத்து நம் வாழ்விற்கு ஒளியூட்டிய அன்புத்
தெய்வங்களே! காலமெல்லாம் உங்கள் நினைவில் வாழ்ந்திடுவோம்
உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.
*ஓம்சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

இன்று (02.12.2003) செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் நடைபெறுகின்ற ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*புத்தூர் வடக்கு,*
*புத்தூர்.* (25262) (26-14-25)

**- பிள்ளைகள்.**

உதயன்

## அஹிம்சைக் கட்சியில் அராஜகப் போக்கு

ஈழத் தமிழர்களின் பழம் பெரும் - மூத்த - தலைவர்கள் இணைந்து உருவாக்கிய தமிழர் விடுதலைக் கூட்டணியின் 'மானம்' கப்பலேறும் காட்சி, கடந்த ஞாயிறு இரவு தொலைக்காட்சிச் செய்திகளில் ஒளிபரப்பாகியது கண்டு கூட்டணியின் ஆதரவாளர்கள் பலரும் அதிர்ச்சியில் மூழ்கிப் போயிருக்கின்றார்கள்.

கட்சிக்குள் கருத்து வேறுபாடு வருவதும், ஜனநாயக முறைகளில் அது குறித்து விமர்சிப்பதும், கருத்துக் கூறுவதும், வாதப் பிரதிவாத மோதல்களில் ஈடுபடுவதும், காரசாரமாக வாதிப்பதும், ஜனநாயக வழிகளில் நடவடிக்கை எடுப்பதும் தவறானவையல்ல. ஆனால், காலங்காலமாக அஹிம்சை பேசிய கட்சியின் உறுப்பினர்கள் - கட்சி அலுவலக வாசலில் வைத்து - அநாகரிகமாக நடந்து கொண்ட முறைதான் மிகவும் கேவலமானது.

அதுவும் கட்சியின் தலைமை சம்பந்தமாகப் பரபரப்பான கூட்டம் ஒன்றின் முடிவில் - அது சம்பந்தமான செய்திகளைத் திரட்டுவதற்கு ஊடகவியலாளர்கள் கட்சியின் அலுவலக வாசலில் திரண்டிருக்கும் போது - அந்தச் சூழ்நிலையின் தாக்கத்தைத் தூசாகப் புறக்கணித்து விட்டு, அங்கு கட்சியின் மத்திய செயற்குழு உறுப்பினர்கள் என்று கூறப்படுவோரே காட்டுத்தர்பார் பாணியில் நடந்து கொண்ட விதம், தொலைக்காட்சியில் அதனைத் பார்த்த பொதுமக்களை அதிரவைக்கத் தவறவில்லை.

அஹிம்சை பேசிய கட்சியின் ஆழம் இதுதானா என்று அதன் ஆதரவாளர்கள் தங்களைத் தாங்களே நொந்து கொள்வதைத் தவிர வேறு வழியில்லை.

மூடிய அறைக்குள் மத்திய செயற்குழுக் கூட்டத்தில் நடந்தது சரியா, பிழையா, சட்டரீதியானதா, செல்லுபடியற்றதா என்ற விடயங்கள் எல்லாம் வேறு. அவற்றுக்குத் தீர்வுச் சொல்வது நமது பணியல்ல. ஆனால், கட்சியின் மத்திய குழுக் கூட்டத்தின் முடிவின் பின்னர், இத்தகைய பாரம்பரிய பெருமைமிக்க கட்சியின் உறுப்பினர்கள் நடந்து கொண்ட விதம் - பிரயோகித்த வார்த்தைகள் - காட்டிய 'சண்டித்தனம்' - போன்றவை சகிக்கத் தக்கவையல்ல. அவை நிச்சியம் கண்டிக்கப்பட வேண்டியவை.

தமக்கு எதிரான சில சக்கதிகளின் அழுத்தத்துக்குப் பயந்தே மத்திய குழு உறுப்பினர்கள் பலர் தமக்கு எதிராகக் கூட்டத்தில் செயற்பட்டனர் என்று - தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தை பெயர் சுட்டாமல் - குற்றம் சுமத்தி கருத்துக்களை வெளியிட்டு வருகின்றார் ஆனந்தசங்கரி எம்.பி.

அவர் கூறும் குற்றச்சாட்டை ஒரு வாதத்துக்கு உண்மை என்றே எடுத்துக்கொள்வோம். மத்திய குழுக் கூட்டத்தில் அவருக்கு மாறான செயற்பாடுகளை மேற்கொண்டவர்கள் எனக் கருதப்படும் பிரமுகர்களுக்கு எதிராக - அந்தப் பிரமுகர்களுக்குப் பாதுகாப்பு வழங்கும் ஆயுதம் தரித்த மெய்ப்பாதுகாவலர்கள் அவர்களைச் சூழ்ந்து நிற்கக்கூடியதாகவே - கூட்டணி அலுவலக வாசலில் காத்திருந்த ஒரு கும்பல், அவர்கள் மீது தாக்குதல் முயற்சியில் ஈடுபட்டிருக்கின்றது. அதுவும் மத்திய குழுக் கூட்டத்திலும் வெளியிலும் ஆனந்தசங்கரிக்கு தீவிரமான ஆதரவுப் போக்கைக் காட்டும் அவரது வலதுகைபோன்ற உதவியாளர்களே - இத்தாக்குதல் முயற்சிக்குத் தலைமை வகித்துச் சென்றமையையும் தொலைக்காட்சிச் செய்திகள் அம்பலப்படுத்தியுள்ளன.

அண்மையில் கொழும்பில் நடந்த தமிழ் - சிங்களக் கலைஞர்களின் ஒன்று கூடல் நிகழ்வில் புகுந்து தாக்குதல் நடத்திய சிங்களத் தீவிரவாதக் கும்பல்கள், அங்கு நடந்துகொண்ட விதத்தைத் தொலைக்காட்சியில் பார்த்தபோது ஏற்பட்ட அனுபவமே, கூட்டணி அலுவலக வாசலில் ஞாயிறன்று இடம்பெற்ற சம்பவங்களைத் தொலைக்காட்சியில் பார்த்தபோதும் தங்களுக்கு ஏற்பட்டதாக அதனைப் பார்த்தோர் கூறுகின்றார்கள்.

ஆனந்தசங்கரியின் கூற்றுப்படி விடுதலைப் புலிகளின் அழுத்தம் காரணமாகவே சிலர் இப்படி அவருக்கு எதிராக மத்திய குழுக் கூட்டத்தில் நடந்து கொண்டார்கள் என்றால் -

அவ்வாறு பெரும் இராணுவ சக்தியான புலிகளின் ஆதரவோடு செயற்படுபவர்களுக்கு எதிராக - பகிரங்கமாக - ஒரு கும்பல் இப்படி 'சண்டித்தனப் போக்கில்' நடந்து கொள்வதற்கு அந்தக் கும்பலுக்கு துணிவு - துணிச்சல் - எங்கிருந்து வந்தது? அதன் பின்புலம் என்ன? இந்த நடவடிக்கையும் சங்கரி கூறுவது போன்ற 'அச்சுறுத்தலுடன் கூடிய அழுத்தம்' என்ற வகைக்குள் வராதா?

அதுவும் தலைநகரில் பொலீஸாரும் பாதுகாவலரும் பார்த்திருக்க இவ்வாறு ஆக்ரோஷத்துடன் அஹிம்சைக்கு முரணான வகையில் - கூட்டணியினர் நடந்து கொள்வதை - ஒரு சிறிய விடயமாகப் புறந்தள்ளிவிட முடியாது.

இதன் ஆழ, அகலம் மற்றும் பின்புலம் போன்றவற்றைக் கூர்ந்து கவனிப்பது அவசியமானதாகும்.

# குடாநாட்டில் மாதாந்தம் 25 இற்கும் மேற்பட்ட சிறுவர் துஷ்பிரயோக சம்பவங்கள் நடக்கின்றன

## அவற்றில் இரண்டு பாலியல் ரீதியிலானவை

யாழ்ப்பாணம்,டிசெ.2

யாழ். குடாநாட்டில் மாதாந்தம் குறைந்தது 25இற்கும் மேற்பட்ட சிறுவர் துஷ்பிரயோக சம்பவங்கள் இடம்பெறுவதாக மாவட்ட சிறுவர் பாதுகாப்புக் குழுவினரின் பதிவுகளில் இருந்து தெரிய வருகின்றது. இவற்றில் மாதாந்தம் குறைந்தது இரு பாலியல் ரீதியிலான துஷ்பிரயோகக் குற்றச்சாட்டுக்களும் அடங்கியுள்ளன.

இந்த துஷ்பிரயோகச் சம்பவங்கள் அனைத்தும் மாவட்ட சிறுவர் பாதுகாப்புக் குழுவிடம் செய்யப்பட்ட முறைப்பாடுகளில் இருந்து தெரியவந்தவை. தெரியவராமல் இருக்கும் துஷ்பிரயோகச் சம்பவங்கள் இந்தப் புள்ளி விவரத்துக்குள் அடக்கப்படவில்லை என்று சிறுவர் பாதுகாப்புக் குழு அதிகாரியொருவர் தெரிவித்தார்.

உடலியல் ரீதியான துன்புறுத்தல், பெற்றோரால் உதாசீனம் செய்யப்படுதல், கல்வியில் உதாசீனப்படுத்தல், வறுமை, போஷாக்கு மற்றும் மருத்துவ ரீதியிலான உதாசீனம், பாலியல் துஷ்பிரயோகம் போன்ற வகைகளிலேயே சிறுவர் துஷ்பிரயோக முறைப்பாடுகள் குடாநாட்டில் கிடைக்கின்றன என்கின்றது மாவட்ட சிறுவர் பாதுகாப்புக் குழு.

கிடைக்கும் முறைப்பாடுகள் குறித்து உடனடியாக சிறுவர் பாதுகாப்புக்குழு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது. பாதிக்கப்பட்டவர்களைச் சந்தித்து நேரடியாக விசாரணைகளை நடத்துவதுடன், சம்பந்தப்பட்ட இடங்களுக்கும் சென்று குழு விசாரணைகளை நடத்துகின்றது. குற்றச்சாட்டுக்களில் உண்மை இருக்கும்பட்சத்தில் வேண்டிய சட்ட நடவடிக்கைகளுக்கும் குழு உதவிகளைச் செய்கின்றது.

பாதிக்கப்பட்டவர்கள் நேரிலோ அல்லது கடிதம் மூலமாகவோ தமது முறைப்பாடுகளை குழுவுக்குத் தெரியப்படுத்தலாம். அல்லது பாதிக்கப்பட்டவரின் உறவினர்கள், அயலவர்களும் முறைப்பாடுகளை அன்றேல் தகவல்களை குழுவுக்குச் சமர்ப்பிக்கமுடியும் என்று குழுவின் அதிகாரி ஒருவர் கூறினார். இந்த வருடத்தில் இதுவரை உதவிகள் தேவைப்பட்ட 598 சிறுவர்களுக்குத் தாம் உதவிகளை வழங்கி உள்ளனர் எனவும் அவர் தெரிவித்தார்.

சிறுவர் உரிமைகள் தொடர்பான விடயங்களில் மக்கள் மத்தியில் மேலும் விழிப்புணர்வு அதிகரிக்கப்படவேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார். (ம)

### பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவில் இணைக்கப்பட்டிருந்த

# 5 கிராம அலுவலர் பிரிவுகள் மீண்டும் மருதங்கேணி உதவி அரச அதிபர் பிரிவில்

வடமராட்சி கிழக்கு,டிசெ.2

பருத்தித்துறை பிரதேச செயலர் அலுவலகத்துடன் தற்காலிகமாக இணைக்கப்பட்டிருந்த 5 கிராம அலுவலர் பிரிவுகளும் மீண்டும் மருதங்கேணி உதவி அரச அதிபர் பிரிவுடன் இணைக்கப்படவுள்ளன.

குடத்தனை, மணற்காடு, பொற்பதி, குடத்தனை வடக்கு, அம்பன் ஆகிய கிராம அலுவலர் பிரிவுகள் கடந்த சில மாதங்களாக பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவுடன் இணைக்கப்பட்டிருந்தன.

கடந்த சனிக்கிழமை குடத்தனையில் இடம்பெற்ற நடமாடும் சேவையில், அப்பகுதி மக்கள், மேற்படி 5 கிராம சேவையாளர் பிரிவுகளையும் மீண்டும் மருதங்கேணி உதவி அரச அதிபர் பிரிவுடன் இணைத்துக்கொள்ளுமாறு யாழ்.அரச அதிபர் செ.பத்மநாதனிடம் வேண்டுகோள் விடுத்தனர்.

இதனையடுத்தே குறிப்பிட்ட கிராம அலுவலர் பிரிவுகளை மருதங்கேணி உதவி அரச அதிபர் பணிமனையுடன் இணைத்துக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்த நடமாடும் சேவையில் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம், மருதங்கேணி உதவி அரச அதிபர். வி.பி.வேலாயுதபிள்ளை, வடமராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் வே.தி.செல்வரத்தினம், மருதங்கேணி கோட்ட உதவிக் கல்விப்பணிப்பாளர் பா.இரகுநாதன் உட்பட திணைக்களத் தலைவர்களும் கலந்துகொண்டனர்.

இதற்கிடையில் - மேற்படி நடமாடும் சேவையில் கலந்து கொண்ட பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், மருதங்கேணிப் பிரதேசத்தின் கல்வி, வீதி, சுகாதாரம், விவசாயம், கடற்றொழில், மின்சாரம் ஆகியவற்றின் அபிவிருத்தி தொடர்பான மகஜர்களை அரச அதிபரிடம் கையளித்தனர். (எ-182)

## இந்தியப் படகோட்டிகள் 15 பேருக்கு எதிராக வழக்கு

யாழ்ப்பாணம்,டிசெ.2

இலங்கைக் கடற்பரப்பிற்குள் அத்துமீறி நுழைந்து மீன் பிடித்த படகோட்டிகள் 15 பேருக்கு எதிராக யாழ்.மேல் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பான விசாரணை நாளை புதன்கிழமை மேல்நீதிமன்ற நீதிபதி கே.பி.எஸ்.வரதராசா முன்னிலையில் நடைபெறவுள்ளது.

இலங்கைக் கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்டு வந்த மீனவர்களும், படகோட்டிகளும் இலங்கைக் கடற்படையினரால் அண்மைக் காலங்களில் கைதுசெய்யப்பட்டிருந்தனர். அவர்களில் மீனவர்கள் விடுதலை செய்யப்பட்டனர். படகோட்டிகள் மேலதிக விசாரணைக்காகத் தொடர்ந்து தடுத்து வைக்கப்பட்டிருந்தனர். தற்போது அவர்கள் மீதே வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மீனவர்களின் நலன்களைக் கவனிப்பதற்கென சட்டத்தரணி மு.திருநாவுக்கரசு, சட்டமா அதிபர் திணைக்களத்தினால் நியமிக்கப்பட்டுள்ளார். (ம-8)

**நாளை**

கார்த்திகை 17
புதன்கிழமை
(03.12.2003)
திதி : தசமி
பிற்பகல் 5.26 வரை.
நட்சத்திரம்:உத்தரட்டாதி
பிற்பகல் 5.14 வரை.
சுபநேரம்: 4.45-6.15
ராகுகாலம்: 12.15-1.45
(பழைய நேரப்படி)

**உதயவாக்கு**

அவசியமற்றதை அகற்றுவதே அழகு. அவசியமானதைத் தேடுவதே சிறப்பு.

## பருத்தித்துறை தாக்குதல் சம்பவம்: படையினருக்குத் தொடர்பில்லையாம்!

யாழ்ப்பாணம்,டிசெ.2

பருத்தித்துறை, வல்லிபுரக் கோயில் பகுதியில் முயல்பிடிக்கச் சென்றவர்கள் தாக்கப்பட்ட சம்பவத்துக்கும் தமக்கும் தொடர்பு எதுவும் கிடையாது என வடமராட்சிப் பகுதி படை அதிகாரி ஒருவர் தெரிவித்திருக்கிறார்.


வல்லிபுரம் பகுதிக்கு முயல் பிடிக்கச் சென்ற சமயம் படையினரால் தாக்கப்பட்டதாகக் கூறப்படும் இருவர் வடமராட்சி மந்திகை மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இச்சம்பவம் தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்வதற்காக மனித உரிமைகள் ஆணைக்குழு அதிகாரி நுவான் சந்திரசேகர நேற்றுமுன்தினம் வடமராட்சி சென்றிருந்தார். அங்கு படைத் தரப்புடன் பேச்சு நடத்தியபோதே படை அதிகாரி ஒருவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

துப்பாக்கிச் சூட்டினையோ அல்லது நபர்கள் மீதான தாக்குதலையோ படையினர் எவரும் மேற்கொள்ளவில்லை என்று படை அதிகாரிகள் தம்மிடம் தெரிவித்ததாக நுவான் சந்திரசேகரா தெரிவித்தார்.

இதேவேளை -

இச்சம்பவத்தில் காயமடைந்து சிகிச்சைபெற்று வரும் இருவரையும் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அதிகாரி நுவான் சந்திரசேகரா ஆஸ்பத்திரிக்குச் சென்று பார்வையிட்டு அவர்களிடம் இருந்து வாக்கு மூலங்களையும் பதிவு செய்து கொண்டார். (ஜ-9-70-தி)


## யார் இந்த மீனா?

மீனா பிள்ளைகளின் குறிப்பாகப் பெண்பிள்ளைகளின் உரிமைகளுடன் சம்பந்தப்பட்டவள். பெண்பிள்ளைகளுக்குக் காட்டப்படும் பாரபட்சம், இழைக்கப்படும் அநீதிகள் என்பவற்றை எடுத்துக் காட்டுகின்றாள். பெண்பிள்ளைகளின் கல்வி, ஆரோக்கிய கவனிப்பு, போசாக்கு, இளமைத் திருமணம், சீதனக் கொடுமை, ஆண்பிள்ளைகளுக்கு அளிக்கப்படும் முக்கியத்துவம், பெண்களைக் கேலிசெய்தல், பெண்பிள்ளைகளிடம் இருந்து அதிகளவு வேலைவாங்குதல் என்பன பற்றி எடுத்துக்காட்டுகின்றாள்.

★ ஆண்பிள்ளைகளைப் போன்றே பெண்பிள்ளைகளுக்கும் கல்விகற்கும் உரிமை உண்டு.
★ பாடசாலைக் கல்வி பெண்பிள்ளைகளுக்கு நல்ல வருங்காலத்தினைக் கொடுக்கிறது.
★ கல்விகற்பது பிள்ளையின் வாழ்க்கையை வளப்படுத்துவதோடு, அவர்களைச் சூழவுள்ள மக்களுக்கு நன்மை பயக்கிறது.
★ பிரச்சினைகளுக்கு அடிபணிவதனைவிட அவற்றை கையாள்வதற்கான வழிகளைக் கண்டுகொள்வது சிறந்தது.



அனுசரணை:

unicef

(சி-31660) 125-12-17)

உங்கள் தொடர்புகளுக்கான எங்கள் முகவரி:
மாவட்ட சிறுவர் பாதுகாப்புக் குழு
அறை எண் 30,
யாழ். போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்.

## ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் சுவாமி கோவில்
## திருப்பாவை ஓதுதல் போட்டி - 2003

எமது கோவிலில் வருடாவருடம் நடைபெறும் மேற்படி போட்டி இவ்வருடமும் நடைபெறவுள்ளது. இதில் பாடசாலை மாணவர்கள் கலந்துகொள்ளலாம்.

**போட்டி பற்றிய அறிவுறுத்தல்கள்**

1. திருப்பாவையின் முதற் பத்துப் பாடல்களில் திருவுளச் சீட்டின் மூலம் தெரிவுசெய்யும் மூன்று பாடல்களைப் பண்ணுடன் பாடுதல்.
2. கீழ்ப்பிரிவு - தரம் 6,7<br>மத்தியபிரிவு - தரம் 8,9<br>மேற்பிரிவு - தரம் 10,11,12
3. விண்ணப்ப முடிவு திகதி: **20.12.2003**
4. போட்டித் திகதி: **21.12.2003** காலை **10.00** மணி
5. விண்ணப்பங்கள் பாடசாலை அதிபர் அவர்களால் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.
6. விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி:

செயலாளர்,<br>அறங்காவலர் சபை,<br>ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் சுவாமி கோவில்<br>(சி-31665) *துன்னாலை வடக்கு, புலோலி.* (25-14-12)

## மோட்டார் சைக்கிள் விபத்தில் இளைஞர் காயம்!

யாழ்ப்பாணம்,டிசெ.2

நாய் குறுக்கே பாய்ந்து இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் ஒருவர் படுகாயமடைந்தார்.

கோண்டாவில் கிழக்கில் கடந்த சனியிரவு இடம்பெற்ற இச்சம்பவத்தில் அவ்விடத்தைச் சேர்ந்தவரும், மோட்டார் சைக்கிளை செலுத்திச் சென்றவருமான சுதாகரன் சுமணலதன் (வயது 18) என்பவரே படுகாயமடைந்தவராவார்.

படுகாயமடைந்தவர் யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

(எ-15)

### வீட்டுப்பணிப்பெண் தேவை

வெளிநாட்டு நிறுவனம் ஒன்றுக்கு வீட்டுப்பணிப்பெண் தேவை. நேர்முகத் தேர்வு 03.12.2003 மாலை 3.00 மணி முதல் 6.00 மணி வரை. சம்பளம் பற்றி நேரில் பேசித் தீர்மானிக்கப்படும். வயது 23-40 வரை. ஓரளவுக்கு ஆங்கிலம் தெரிந்திருக்க வேண்டும்.

தொடர்பு:<br>இல.6, கடைச்சாமி வீதி,<br>நாவலர் வீதி,<br>யாழ்ப்பாணம்.

(25295)

## முக்கிய அறிவித்தல்

### மானிப்பாய் கோவில்பற்று ப.நோ.கூட்டுறவுச் சங்கம் (வ-து)

**கிளைக்குழுத் தெரிவு**

**கிளையின் பெயரும் இலக்கமும் : சாவற்கட்டு - 19**

மேற்படி ப.நோ.கூ.சங்கத்தின் சகல கிளைகளுக்கான கிளைக்குழுக்கள் தெரிவுகள் 26.10.2003 இல் நடத்தப்பட்டன. இருந்தும் மேற்குறித்த சாவற்கட்டு கிளையின் தெரிவு, நிறைவெண் போதாமையால் நடைபெறவில்லை. எனவே, மீண்டும ஒரு சந்தர்ப்பம் வழங்கும் முகமாக, இக்கிளையின் கிளைக்குழுத தெரிவு எதிர்வரும் 05.12.2003 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு, என்னால் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரின் தலைமையில் கீழ்குறிப்பிட்ட இடத்தில் நடத்தப்படும்.

கிளைக்குழுத் தெரிவு நடைபெறும் இடம்:-


**மகாத்மா சனசமூக நிலையம், சாவற்கட்டு.**

இக்கிளைப் பொதுச்சபையின் தகுதியுள்ள உறுப்பினர்கள் தவறாது சமுகமளிக்கவும்.

கூ.அ.ஆணையாளர்,<br>யாழ்ப்பாணம்.

(C31576)(34-12-14)


# சுற்றுச் சூழலை தொழில்நுட்ப ரீதியில் பாதுகாப்போம்



பின்பக்கம் என்ஜின் கொண்டமைந்த பஜாஜ் RE முச்சக்கரவண்டி, ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் இந்தியா போன்ற நாடுகளின் தன்னியக்க புகை வெளியிடும் தரப்படுத்தலிற்கமைய அதி நவீன 2 ஸ்ரோக் என்ஜின் தொழ்ல்நுட்ப முறையில் உருவாக்கப்பட்டதாகும்.

| புகைவெளியிடும் மாதிரி | CO g/Km | HC g/Km | $NO_x$ g/Km |
|---|---|---|---|
| ஐரோப்பிய ஒன்றியத்தின் கோட்பாடு EURO II | 7.0 | 1.5 | 0.4 |
| TUV வண்டி பரிசோதனை நிபந்தனைகள் | 0.77 | 1.14 | 0.05 |

● சூழலிற்கு ஏற்புடையது ● நிறைக்கேற்ப ஆற்றல் கொண்டமைந்தது<br>● திறமையான எரிபொருள் பாவனை ● சிக்கனத்தை பேணக்கூடியது



எதிர்கால சந்ததியினருக்காக<br>எமது சூழலைப் பாதுகாப்போம்



டேவிட் பீரிஸ் மோட்டார் கம்பனி லிமிட்டட்

Tradlanka Advertising

# இடம்பெயர்ந்தவர்களில் 30 வீதமானோரே சமாதானத்தின் பின் மீளக்குடியமர்ந்துள்ளனர்

அரசு - புலிகள் இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்யப்பட்டு ஒன்றரை ஆண்டுகள் கடந்துவிட்ட போதும் தமிழர் பகுதியில் போர் நின்றதைத் தவிர வேறு ஏதாவது முன்னேற்றங்கள் இருக்கின்றனவா என்பது பற்றிய அலசல் இந்தப் பகுதியில் தொடர்ந்து கொண்டிருக்கிறது.

இதுவரை செவ்வி வழங்கியவர்களின் கருத்துக்களின்படி புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் சொல்லப்பட்டதன் படியான மக்களின் இயல்பு வாழ்க்கை தமிழர் தாயகப் பகுதியில் ஏற்படவில்லை என்பது வலியுறுத்தப்பட்டுள்ளது. ஒப்பந்தத்தில் சொல்லப்பட்ட பல விடயங்கள் இதுவரை நடைமுறைப்படுத்தப்படவில்லை என்பது செவ்விகள் மூலம் தெளிவுபடுத்தப்பட்டுள்ளன.

அந்தவகையில், தமிழர் புனர்வாழ்வுக்கழக நிறைவேற்றுப் பணிப்பாளர் கே.பி.ரெஜியின் செவ்வி இன்று வெளிவருகின்றது.

*கேள்வி:* புரிந்துணர்வு உடன்படிக்கை நடைமுறைக்கு வந்து 20 மாதங்கள் ஆகிவிட்டன. இக்காலப் பகுதியில் மக்களின் வாழ்க்கை நிலையில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதா?

*பதில்:* புரிந்துணர்வு உடன்பாட்டுக்குப் பிற்பாடு, மக்கள் சில இடங்களில் தாங்களாகவே மீளக்குடியமரும் சந்தர்ப்பங்கள் இருந்தாலும், பல்வேறு காரணங்கள் அவர்கள் சொந்த இடங்களுக்குச் செல்வதற்குத் தடையாக இருக்கின்றன.

ஒன்று - உயர்பாதுகாப்பு வலயங்கள்; பல பகுதிகளுக்குச் செல்ல இராணுவம் அனுமதிக்கின்றது இல்லை. இராணுவம் அனுமதித்த இடங்களுக்குச் செல்ல மக்கள் அஞ்சும் நிலையும் காணப்படுகின்றது.

இரண்டாவது - கண்ணிவெடிகள்; வெடிபொருள்கள் மக்களின் மீள்குடியமர்வுக்குத் தடையாக இருக்கின்றன.

உயர்பாதுகாப்பு வலயப் பிரச்சினை தீர்வு காணமுடியாத பிரச்சினையாகத் தொடர்கின்றது. கண்ணிவெடிகளைப் பொறுத்தவரையில், விடுதலைப் புலிகளின் பிரதேசத்தில் தனியான கண்ணிவெடி அகற்றும் பிரிவொன்றை நாம் அமைத்து அதை வெற்றிகரமாக மேற்கொண்டு வருகிறோம்.

புலிகளின் பிரதேசத்தில் 2006ஆம் ஆண்டுக்குமுன், பத்துலட்சத்து 50 ஆயிரம் கண்ணி மற்றும் வெடிபொருள்களை அகற்றும் இலக்குடன் நாம் செயற்பட்டுவருகின்றோம். இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியிலும் கண்ணி அகற்றும் பணி இடம் பெறுகின்றது. ஆனால், அங்கு முழுவீச்சில் அந்தப் பணி இடம்பெறவில்லை. இதன்காரணமாக மக்கள் தங்கள் சொந்த இடங்களுக்குப் போகமுடியாத நிலை நீடிக்கின்றது.

முப்பது வீதமான மக்கள் தான் இதுவரை தமது சொந்த இடங்களில மீளக்குடியமர்ந்துள்ளனர். மீதியானவர்கள் வேறு இடங்களில் வாழ்கின்றனர். இது ஒரு பிரச்சினை.

மற்றுமொரு முக்கிய பிரச்சினை, மக்கள் தமது நிவாரணங்களைப் பெற முடியாத நிலையில் உள்ளனர். புரிந்துணர்வு உடன்படிக்கையின் பின் நிவாரணமாக 25ஆயிரம் ரூபா முற்கொடுப்பனவாகவும், 75ஆயிரம் ரூபா வீட்டுக் கொடுப்பனவாகவும் மக்களுக்கு வழங்குவது என நாடாளுமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. ஆனால், இக்கொடுப்பனவுகள் இன்னமும் ஒழுங்காக வழங்கப்படவில்லை. இந்தக் கொடுப்பனவை வழங்கப் பல தடைகள் உள்ளன.

இந்தக் கொடுப்பனவை வழங்க சில நிபந்தனைகள் போடப்பட்டுள்ளன. மக்கள் தமது சொந்தக் காணியில் மீளக்குடியமர்ந்தால் மட்டுமே இக்கொடுப்பனவு வழங்கப்படும் என அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

மக்கள தமது சொந்த இடத்துக்குப் போகமுடியாத பிரச்சினை, அவ்வாறு சொந்த இடத்துக்குப் போகாவிட்டால் நிவாரணம் எடுக்க முடியாது. இதன் காரணமாக மக்கள் தமது கொடுப்பனவுகளை உரிய காலத்தில் பெறமுடியாது அவதிப்படுகின்றனர்.

75ஆயிரம் ரூபா கொடுப்பனவு எவருக்கும் இதுவரை வழங்கப்படவில்லை. 25ஆயிரம் ரூபா கொடுப்பனவும் முழுமையாக இன்னமும் வழங்கப்பட்டு முடிக்கப்படவில்லை.

வாழ்வாதார அடிப்படைப் பிரச்சினைகளும் மக்களுக்கு முக்கிய பிரச்சினைகளாக எழுந்துள்ளன. கல்வி, சுகாதாரம், போக்குவரத்து போன்ற மக்களின் அடிப்படைத் தேவைகள் கூட இன்னமும் பூர்த்தி செய்யப்படவில்லை. அதற்குத் திட்டங்கள் ஏதும் நடைமுறைப்படுத்தப்படவில்லை.

மக்களின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்திசெய்ய, பேச்சுக்களில் இணக்கம் காணப்பட்டபடி உருவாக்கப்பட்ட 'சிரான்' அமைப்பு செயலிழந்து கிடக்கின்றது. ஒஸ்லோவில் இணக்கம் காணப்பட்ட 'நேவ்' என்ற அமைப்பும் செயலிழந்து போயுள்ளது. அதன்பின் இடைக்கால நிர்வாகசபை பற்றிப் பேசப்பட்டது. அதுவும் இழுபறி நிலையில் உள்ளது.

மற்றொரு பக்கம் பார்க்கும் போது மக்கள் சுதந்திரமாகத் தொழில் செய்ய முடியாதுள்ளனர். கடற்றொழிலை எடுத்துக் கொண்டால், மக்கள் முழுமையாக கடல் வளத்தைப் பயன்படுத்த முடியாதநிலை காணப்படுகின்றது. அந்தத் தொழிலை மேற்கொள்ள வசதிகளும் இல்லை. இராணுவ நெருக்குவாரங்களும் அதிகரித்துவருகின்றன.

விவசாயத்தைப் பொறுத்தமட்டில், மக்கள் கடன்பட்டு விவசாயத்தை மேற்கொண்டாலும், அவர்களின் உற்பத்திப் பொருள்களை சந்தைப்படுத்த வாய்ப்பு இல்லை. இதனால் அவர்கள நஷ்டம் அடைகின்றனர். இதன் காரணமாக இத்தடவை நூற்றுக்கு 70 வீதமான மக்கள் விவசாயத்தில் ஈடுபடவில்லை.

ஒட்டுமொத்தமாக மக்களின் இயல்வு வாழ்க்கை என்று கூறுவதிலும் பார்க்க, தமது அத்தியாவசிய தேவைகளைக் கூட பூர்த்திசெய்ய முடியாத நிலையே மக்களுககு இன்றுள்ளது என்பது தெளிவானது.

...யப்பட்டுள்ள இடைக்கால நிர்வாக சபை வந்தால், மக்களுக்கான நிவாரணப் பணிகளை விரைவாக மேற்கொள்ள வாய்ப்புக்கிட்டும்.

*கேள்வி:* தமிழர் புனர்வாழ்வுக் கழகம் மூலம் மக்கள் பிரச்சினைக்கு என்னவகையில் தீர்வுகளைக் கண்டுள்ளீர்கள்?

*பதில்:* முதலாவதாக கண்ணி அகற்றும் பணியை வெற்றிகரமாகச் செய்து வருகிறோம். 1999ஆம் ஆண்டு 150 பேருடன் ஆரம்பித்த இந்தப் பிரிவு இன்று 800 பேருடன் விஸ்தரிக்கப்பட்டுள்ளது. இதனால், கண்ணிகள் அகற்றப்பட்டமையால், சுமார் 30 ஆயிரம் மக்கள் தமது சொந்த இடங் களுக்குச் செல்ல வாய்ப்புக்கிட்டியது.

...காணப்பட்ட நிதி உதவிகள் இருக்கின்றன. அந்நிதி மூலம் மக்களுக்கு இயல்பு வாழ்க்கை ஏற்பட உருப்படியான கட்டமைப்பு வேண்டும்.

விடுதலைப் புலிகளால் முன்மொழி... நிதியைப் பெற்று பணிகளை முன்னெடுக்கிறோம். உண்மையில், மக்களுக்கு அதுதான் ஆதாரமாக இருக்கின்றது.

புனர்வாழ்வுப் பணிகளை மேற்கொள்ளத் தடையாக இருக்கும் ஆள...

...புனர்வாழ்வுக் கழகத்துக்கு வழங்கப்பட்டன. அவை நிறைவேற்றப்பட்டனவா?

*பதில்:* 'சிரான்' அமைப்பால் திட்டங்கள் தரப்பட்டன என்பதற்கு பதிலாக எம்மால் வழங்கப்பட்ட திட்டங்கள் அங்கீகரிக்கப்பட்டன என்றுதான் கூற வேண்டும். அதற்குரிய நிதி எமக்குக் கிடைக்கவில்லை. நிதி கிடைக்கக் கூடிய வழிமுறை ஏதும் இல்லை.

எமக்கு வழங்கப்பட்ட திட்டங்கள் எல்லாம் அடிக்கல் நட்டதுடன் நிற்கின்றது. எந்தத் திட்டமும் முன்னெடுக்கப்படவில்லை.

*கேள்வி:* வன்னியில் அரசசார்பற்ற நிறுவனங்களின் பங்களிப்பு எப்படி உள்ளது?

*பதில்:* அரசசார்பற்ற நிறுவனங்களின் பங்களிப்பு முழுமையாக இல்லாவிட்டாலும் அவ்வப்போது கிடைக்கின்ற நிதியைக் கொண்டு குறிப்பிட்ட சில வேலைகளைச் செய்து கொண்டிருக்கின்றன. ஐநா. அமைப்பு சார்ந்தவை கணிசமான வேலைத்திட்டங்களை முன்னெடுத்துள்ளன. அந்த அமைப்புக்களுக்கிடையில் இணைப்புத்தான் இல்லை.




**ம**க்களின் மீள்குடியமர்வுக்கு உயர்பாதுகாப்பு வலயம், கண்ணிவெடிகள் என்பன தடையாக உள்ளன. விடுதலைப் புலிகளின் பிரதேசத்தில் 2006 ஆம் ஆண்டுக்கு முன்னர் பத்து லட்சத்து 50 ஆயிரம் கண்ணிகள் மற்றும் வெடிபொருள்கள் என்பவற்றை அகற்றத் திட்டமிடப்பட்டுள்ளது.

போரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடி நிவாரணமாக 25 ஆயிரம் ரூபாவும் வீட்டுக்கட்டுமானத்துக்காக 75 ஆயிரம் ரூபாவும் வழங்க நாடாளுமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அதில் 25 ஆயிரம் ரூபா சிறு எண்ணிக்கையானவர்களுக்கே வழங்கப்பட்டது. 75 ஆயிரம் ரூபா இதுவரை எவருக்கும் வழங்கப்படவில்லை.

ஆனால், நாம் (ரி.ஆர்.ஓ.) துரிதப்படுத்தப்பட்ட புனர்வாழ்வு, புனரமைப்புத் திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்துகின்றோம். 30 கோடிரூபா செலவில் இத்திட்டம் மேற்கொள்ளப்படுகின்றது. இத்திட்டத்துக்கு 50 சதவீதமான நிதியை அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஒன்றிய நாடுகளில் உள்ள புலம் பெயர்ந்த தமிழர்கள் வழங்கியிருந்தனர்.

யாழ்ப்பாணம் உட்பட இராணுவக்கட்டுப்பாட்டுப் பகுதியில் எமது நிறுவனத்தின் பணிகளை மேற்கொள்ள சந்திரிகா அரசிடம் ஐந்து தடவைகள் அனுமதி கோரியிருந்தோம். ஆனால், அனுமதி வழங்கப்படவில்லை.

புரிந்துணர்வு உடன்படிக்கை நடைமுறைக்கு வந்தபின் ரணில் அரசிடம் அனுமதி கோரினோம். அனுமதி வழங்கப்பட்டதுடன் உதவிகளும் வழங்கப்பட்டன.

## நிவாரண உதவிகளும் ஒழுங்கில்லை என்கிறார் தமிழர் புனர்வாழ்வுக் கழகத் தலைவர்

மற்றொரு பக்கம் பார்த்தால், 'நியாப்', 'நிகொட்' என்று பாரிய திட்டங்கள் நடக்கின்றன. அத்திட்டங்கள் கூட முற்றுமுழுதாக நிறைவேறவில்லை. அதற்குப் பல்வேறு காரணங்கள் உள்ளன.

உதாரணத்துக்கு, பாடசாலைக் கட்டடம் அமைக்கப்படவேண்டுமாயின், அந்தப்பாடசாலைப் பிரதேசத்தில் கண்ணிகள் அகற்றப்பட வேண்டும் மக்கள் அங்கு போகவேண்டும். மக்கள் இல்லாமல் பாடசாலைக்கு கட்டடம் அமைந்துப் பயன் இல்லை.

பாடசாலையையோ, வைத்திய சாலையையோ, கட்டினாலும், அங்கு பணிபுரிய ஆளணி இல்லை.

கடந்த 20 மாதங்களில் மக்களின் அடிப்படைப் பிரச்சினை எதுவும் தீர்க்கப்படவில்லை. மக்கள் எல்லா இடங்களுக்கும் போகிறார்கள், வருகிறார்கள். ஆனால், அந்த மக்களின் பிரச்சினைகள் உள்ளார்ந்தமாகத் தீர்க்கப்படவேயில்லை.

*கேள்வி:* 'சிரான்' அமைப்புக்குப் பதிலாக இடைக்கால நிர்வாக சபை கொண்டுவரப்படும் பட்சத்தில் இந்தப் பிரச்சினைகளுக்கு தீர்வு கிட்டும் எனக் கருதுகிறீர்களா?

*பதில்:* மக்களின் அடிப் படைப் பிரச்சினைக்கு நிவாரணப் பணிகளைச் செய்வதற்கு ஒரு வழிமுறை தேவை. ஏற்கனவே இணக்கம்...

இரண்டாவது, மக்களுக்குத் தேவையான நிவாரணப் பணிகளைச் செய்கிறோம் இந்தியா மற்றும் ஏனைய பகுதிகளில் இருந்து வரும் மக்களுக்கு போக்குவரத்து மற்றும் நிவாரணங்களை வழங்குகின்றோம்.

வீட்டுத் திட்டங்களைச் செய்து கொடுக்கிறோம் மலசல கூடம், கிணறு ஆகியவற்றை அமைக்கிறோம்.

இந்தப்பணிகள் எல்லாம் வெளிநாட்டில் புலம் பெயர்ந்து இருக்கும் எமது மக்களின் உதவிகள் மூலமே செய்யப்படுகின்றன. சர்வதேச அமைப்புகளும் ஓரளவு உதவிகளை வழங்குகின்றன.

வீட்டுத்திட்டங்களை எமது நிறுவனத்தின் அமெரிக்கக் கிளை மூலமாகவும் நிகொட் மூலமாகக் கிடைக்கும் நிதியில் மேற்கொள்கின்றோம். டெனிஸ் அகதிகள் நிறுவனம், ஐநா.அமைப்புக்கள் ஊடாகக் கிடைக்கும் நிதியினாலும் மலசல கூடங்களை அமைக்கிறோம்.

தமிழர் புனர்வாழ்வுக் கழகம், ஓர் அரசசார்பற்ற நிறுவனம் என்ற வகையில், வேறு நிறுவனங்களிடம் இருந்து நிதியைப் பெற்று பணிகளை முன்னெடுக்கிறோம்...

...ணியை உருவாக்க பயிற்சித்திட்டங்களை மேற்கொண்டுள்ளோம். சில சிறு கைத்தொழில்களை அறிமுகம் செய்துள்ளோம். ஓட்டுத் தொழிற்சாலை, சிமெந்து தூண்கள் செய்யும் தொழிற்சாலை ஆகியவற்றை அமைத்துள்ளோம்

தற்சமயம் புதிய கைத்தொழில் ஒன்றை ஆரம்பித்துள்ளோம்.

குடிதண்ணீர் போத்தலில் அடைக்கப்பட்டு தென்னிலங்கையில் இருந்து இங்கு வருகின்றது. 'வன்னி ஊற்று' என்ற பெயரில் குடிதண்ணரைப் போத்தலில் அடைக்கும் கைத்தொழிலை ஆரம்பித்துள்ளோம். இங்கு உற்பத்தியாகும் 'வன்னி ஊற்று' என்ற குடிதண்ணீர் போத்தல்கள் அடுத்தவாரம் முதல சந்தைக்க வருகின்றன. அவற்றை குறைந்த விலையில் விற்பனை செய்யவிருக்கின்றோம். இதனால் பலருக்கு வேலை வாய்ப்பும் கிட்டும்.

நாம் சிறு அளவில்தான் கைத்தொழில்களை ஆரம்பிக்கின்றோம். பெரிய அளவில் செய்ய வெளிநாட்டு உதவிகளே தேவை.

மற்றொரு பாரிய பிரச்சினை இங்கு நிலவுகின்றது. 40 ஆயிரம் சிறுவர்கள் பாடசாலைக்குப் போகாமல் இருக்கிறார்கள். அவர்கள் பாடசாலைக்கு செல்ல உதவ வேண்டும். இது ஒரு நீண்டகாலத்திட்டம் முன்பள்ளிகள் மூலமாக இத்திட்டத்தை நடைமுறைப் படுத்தவுள்ளோம். 3 வயதுக்கும் 5வயதுக்கும் இடைப்பட்ட சகல பிள்ளைகளும் கல்வி கற்க இத்திட்டம் வழிகோலும்.

*கேள்வி:* 'சிரான்' அமைப்பு ஊடாக மேற்கொள்ள சில திட்டங்கள் தமிழர்...

*கேள்வி:* அரசு நிதி எந்த வகையில் கிடைக்கின்றது?

*பதில்:* அரசு நிதி என்று பெரிய அளவில் நிதி வருவதில்லை. அமைச்சுக்கள் ஊடாக, வரவு செலவுத்திட்ட ஒதுக்கீடு ஊடாக மட்டும் நிதி கிடைக்கிறது அதுவும் பெரிய அளவில் வருவதில்லை. 'நியாப்' 'நிக்கொட்' 'றீப்' போன்ற திட்டங்கள் ஓரளவு இடம் பெறுகின்றன.

**பேட்டி கண்டவர்**
**குகா**

*கேள்வி:* புதிதாக என்ன திட்டங்களை முன்வைக்கப் போகிறீர்கள்?

*பதில்:* 2005ஆண்டு வரையும் புதிய திட்டம் ஒன்றை அறிமுகப்படுத்தியுள்ளோம். துரித பருவ ஆண்டு அபிவிருத்தித் திட்டத்தை நடைமுறைப்படுத்தி வந்தோம். இத்திட்டத்தை 2002ஆம் ஆண்டுடன் நிறுத்திவிட்டு மீள் குடியமர்வு புனர்வாழ்வு துரிதப்படுத்தும் திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்தி வருகின்றோம். மீள் குடியமர்வு, சிறு வீதிகள் புனரமைத்தல், பயிற்சி வழங்கல் போன்றவற்றை மேற்கொண்டு வருகின்றோம்.

வெளிநாடுகளில் இருந்து எமது மக்களின் நிதி உதவியுடன் மருத்துவ உபகரணங்கள், மருந்து வகைகளைப் பெற்றுக்கொடுத்துள்ளோம். வெளிநாட்டு ஆஸ்பத்திரியில் இருந்து இந்த

(11ஆம் பக்கம் பார்க்க)

## தரம்-5 புலமைப் பரிசில் பரீட்சை-2003
## மாதிரி வினாத்தாள் இல-08

வினாத்தாள்-I நேரம் : 45 நிமிடங்கள்

● தடித்த எழுத்திலுள்ள சொற்களுக்குப் பொருத்தமான கருத்துடைய சொற்களைக் கொண்ட விடையின் கீழ்க் கோடிடுக.

01. மாணவர்களின் **எதிர்காலம்** அவர்களின் **ஆற்றலில்** தங்கியுள்ளது.
(1) வருங்காலம், படிப்பு (2) நிகழ்காலம், திறமை
(3) இறந்தகாலம், முயற்சி (4) வருங்காலம், திறமை


02. மக்களின் **கோரிக்கை** நிறைவேறியதால் அவர்கள் **குதூகலம்** அடைந்தனர்.
(1) நிபந்தனை, மகிழ்ச்சி (2) வேண்டுகோள், மகிழ்ச்சி
(3) கட்டளை, . இன்பம் (4) வேடிக்கை, ஆனந்தம்

● சரியான விடையின் கீழ்க் கோடிடுக.

03. கண்ணன் பாடசாலைக்கு ஒழுங்காகச் செல்வதில்லை. தன் வயதினரோடு சண்டை போடுவான். வீதிகளில் நின்று வேடிக்கை பார்ப்பான். தன்னுடன் படிக்கும் மாணவர்களுக்குத் தொல்லை கொடுப்பான். அவனைக் குறிப்பிடத்தக்க பொருத்தமான கூற்று.
(1) விளையாட்டுப்பிள்ளை (2) வீரன்
(3) நோயாளி (4) ஒழுக்கமில்லாதவன்

04. சஞ்சுதா என்ற மாணவி வீதியால் செல்லும்போது 1000 ரூபாவை கண்டெடுத்தாள். அதனை வகுப்பாசிரியர் மூலம் உரியவரிடம் சமர்ப்பித்தாள். சஞ்சுதாவைக் குறிப்பிடப் பொருத்தமான கூற்று.
(1) நேர்மையற்றவள் (2) புகழ்விரும்பி
(3) திறமையானவள் (4) நேர்மையானவள்


● 05-06 வரையுள்ள வினாக்களில் உள்ள படங்களைக் குறித்த ஓர் ஒழுங்கில் வரிசைப்படுத்தினால் நடுவில் வரும் உருவின் இலக்கத்தைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.

05. 
(1) (2) (3) (4) (5) (........)

06. 
(1) (2) (3) (4) (5) (........)

● சரியான விடையின் கீழ்க் கோடிடுக.

07. கமலாட்சனின் வீட்டிற்கும் மைதானத்திற்கும் இடையே பல்வேறு வகைத் தாவரங்கள் உள்ள இடத்தினைப் படம் காட்டுகிறது.




கமலாட்சன் தனது வீட்டிலிருந்து மைதானத்திற்குக் காட்டிய ஒற்றையடிப் பாதை வழியே நடந்து சென்றான். அவன் எந்த ஒழுங்கில் தாவரங்களைக் கடந்து சென்றிருப்பான்?
(1) புல், தென்னை, பலா, முந்திரிகை, மா
(2) முந்திரிகை, புல், தென்னை, பலா, மா
(3) மா, பலா, தென்னை, புல், முந்திரிகை
(4) முந்திரிகை, மா, புல், தென்னை, பலா

08. ஒரு மனிதனிடம் எப்போதும் இருக்க வேண்டியது.
(1) ஒழுக்கம் (2) பேனை (3) பணம் (4) வெட்கம்


09. ஒரு கமக்காரனிடம் எப்போதும் இருக்கவேண்டியது.
(1) மாடு (2) நிலம் (3) பணம் (4) கலப்பை

10. பஸ் வண்டியில் அளவுக்கு மேலாகப் பிரயாணிகளை ஏற்றாமல் இருப்பது.
(1) அரசாங்கத்திற்கு வீணே அதிக பணம் சேர்ந்துவிடும் என்பதற்காக.
(2) பல இடங்களில் பிரயாணிகளை ஏற்றி இறக்கிவிடவேண்டும் என்பதற்காக.
(3) பிரயாணிகள் சௌக்கியமாக பயணம் செய்வதற்காக.
(4) எரிபொருள் முடிந்துவிடும் என்பதற்காக.

11. கிருஷாந் தனது காணியில் பயறோ அல்லது உழுந்தோ அல்லது கடலையோ விதைத்திருக்கின்றான். அவனுடைய தம்பி அங்கு கடலை விதைக்கவில்லை என்று கூறுகின்றான். ஆகவே அக்காணிக்குள்
(1) பயறு விதைக்கப்பட்டிருக்கிறது.
(2) உழுந்து விதைக்கப்பட்டிருக்கிறது.
(3) பயறும் உழுந்தும் விதைக்கப்பட்டிருக்கிறது.
(4) பயறு அல்லது உழுந்து விதைக்கப்பட்டிருக்கிறது.

12. பின்வருவனவற்றுள் முறைப்படி ஒழுங்குபடுத்தப்பட்ட செயற்பாடுகளைக் கொண்ட விடை எது?
(1) விதைத்தல், மிதித்தல், உழுதல், களையெடுத்தல், வெட்டல்
(2) உழுதல், விதைத்தல், களையெடுத்தல், வெட்டல், மிதித்தல்
(3) உழுதல், களையெடுத்தல், விதைத்தல், வெட்டல், மிதித்தல்

● கீழே முதலில் தரப்பட்ட கடிகார முகம்காட்டும் நேரத்தினை அடிப்படையாகக் கொண்டு ஏனைய நாள்கு கடிகாரங்களுக்கும் தரவுகளின் படி நேரங்களைக் கண்டுபிடித்து அதன் கீழுள்ள வினாக்களுக்குரிய விடையின் கீழ்க் கோடிடுக.






முதலாவது கடிகாரத்தைவிட 2ஆவது கடிகாரம் 45 நிமிடம் பிந்திக் காட்டுகிறது. முதலாவது கடிகாரத்தை விட 4ஆவது கடிகாரம் 30 நிமிடம் முந்திக் காட்டுகிறது. இரண்டாவது கடிகாரத்தைவிட மூன்றாவது கடிகாரம் 15 நிமிடம் முந்திக் காட்டுகிறது.

13. மூன்றாவது கடிகாரம் காட்டும் நேரம் யாது?
(1) 9.15 (2) 8.15 (3) 8.30 (4) 9.30

14. ஆக முந்தி நேரத்தைக் காட்டும் கடிகாரம் எது?
(1) 1 (2) 2 (3) 3 (4) 4

● வெற்றிடத்திற்குப் பொருத்தமான எண்ணை எழுதுக

15. 


16. 


● எழுத்துப் பிழையில்லாத வசனங்களைத் தெரிந்து அதன் கீழ் கீறிடுக.

17. (1) கமலா அழகாக நடனம் ஆடினால்.
(2) நான் கடக்கரைக்குப் சென்றேன்.
(3) நிமலன் கோயிலுக்குப் போனான்.
(4) எங்கள் வீட்டில் சவுக்காரம் இல்லை.

18. (1) மாடுகள் புட்கள் மேய்ந்தன.
(2) வாணத்தில் காகம் பறந்தது.
(3) பறவைகளின் அளகு உணவு உண்ணப்பயன்படும்.
(4) தொழிலாளர்கள் வேலை செய்தனர்.

● சரியான விடையின் கீழ்க் கோடிடுக.


19. TODVJL ஆகிய எழுத்துக்களை முகம் பார்க்கும் கண்ணாடி முன்காட்டினால் . மாறுபட்டுத் தெரியும் எழுத்துக்கள் எல்லாவற்றையும் கொண்டவை எது?
(!) TOV (2) DVJ (3) DJL (4) TLV

20. ஆண்களுக்கான ஓட்டநிகழ்வில் வெற்றி பெறுபவரை வீரன் என அழைப்பார்கள் அவ்வாறு பெண்களில் வெற்றி பெற்றவரை எவ்வாறு அழைப்பர்?
(1) வீரன்கள் (2) வீரள் (3) வீராங்கனை (4) வீராங்கி

21. எழுபத்தைந்தாவது ஆண்டில் எடுக்கப்படும் விழா
(1) எழுவை விழா (2) பவள விழா
(3) மணி விழா (4) பொன்விழா

22. எதற்கும் அஞ்சி நடுங்கும் இயல்புடையவன்
(1) கயவன் (2) கோழை (3) மேதை (4) பேதை

● கீழே சில குறியீடுகளும் அதற்குரிய விளக்கங்களும் தரப்பட்டுள்ளன . அவற்றை அவதானித்து வினாக்களுக்குரிய விடையின் கீழ்க் கீறிடுக.




23. அதிகமழையும், கடுங்காற்றும் உள்ள இடம் எது?
(1) யாழ்ப்பாணம் (2) நுவரேலியா
(3) கொழும்பு (4) திருகோணமலை

24. பனி இல்லாத இடம் எது?
(1) யாழ்ப்பாணம் (2) நுவரேலியா
(3) கொழும்பு (4) திருகோணமலை

25. கடுங்காற்றுகு இல்லாது பனியும் அதிகமழையும் உள்ள இடம் எது?
(1) யாழ்ப்பாணம் (2) நுவரேலியா
(3) கொழும்பு (4) திருகோணமலை

● பொருத்தமான விடையின் இலக்கத்தை அடைப்புக்குள் எழுதுக.

26. நாம் தினமும் குளிப்பதற்குக் காரணம்.
(1) தினமும் குளித்தால் நோய் வராது.
(2) உடலை அழகாய் வைத்திருக்க.
(3) தண்ணீர் இலவசமாய்க் கிடைப்பதால்.
(4) உடலைச் சுத்தமாக வைத்திருப்பதற்கு. ( )

27. நாம் ஏன் தினமும் நித்திரை செய்கின்றோம்.
(1) உடலுக்குப் பூரண ஓய்வு தருவதால்.
(2) நித்திரை செய்வது மகிழ்ச்சியைத் தருவதால்.
(3) இரவில், ஒரு வேலையும் செய்யமுடியாததால்.
(4) விடியற் காலையில் எழும்ப வேண்டியிருப்பதால்.( )

28. தேங்காய் நிலத்தில் விழுவதற்குக் காரணம்.
(1) தேங்காய் பறிக்கப்படுவதால்.
(2) தேங்காய்க்கு தும்பு இரு
(3) புவியீர்ப்பு சக்தியால்.
(4) மேலே போகச் சிறகு இ

29. நாளைய தினம சூரிய வெயில் எது நடந்திட அதிக வாய்ப்
(1) தொடர்ந்து 24 மணி நே
(2) தொடர்ந்து இருட்டாக இ
(3) மக்கள் தொடர்ந்து நித்
(4) சிறுவர்கள் வெளியே ஓ

● சரியான விடையின் கீ

30. எல்லாப் பூனைகளுக்கும் வா வால் உள்ள ஒரு பிராணி உ
(1) ஒரு பூனையாகும் (2
(3) கூறமுடியாது

31. தகப்பனின் வயதுடன் செல் 72 வருடங்களாகும். தகப்பனி இரு மடங்கெனில் தகப்பனி
(1) 36 வருடங்கள் (2
(3) 72 வருடங்கள் (4

32. கமலாவிலும் பார்க்க விமலா விமலாவிலும் விட சுசீலாவிட மூவரிலும் கூடிய பணம் வை
(1) கமலா (2
(3) சுசீலா (4

33. பரீட்சை ஒன்றில் ஒரு பாடத் புள்ளிப்படி மொத்தம் 100 பு ஒரு மாணவன் அப்பரீட்சையி தால் அவன் எத்தனை வின அளித்திருப்பான்.
(1) 30 (2) 25 (3

34. ஈருடக வாழியா இருப்பது.


(1) (2)


35. எதிரொலியைப் பயன்படுத்து



(1) (2)

36. பூக்களின் தேனைக் சேமிக்



(1) (2)

37. பின்வருவனவற்றில் சமமான உருவம் எது?



(1)
(3)


38. 
(1) 92 (2) 142 (3

39. கீழே காணப்படுவது ஒரு ச மடிக்கபபட்டு அதில் ஒரு ப தோற்றமாகும்.




இக்கடதாசியை விரித்தால்


(1) (2) (3

40. 


இதனடிப்படையில் பின்வருவன கும். அது எது எனத்தெரி




## வினாத்த

● கீழ்வரும் கடிதத்தினை வ வினாக்களுக்கு விடை எழுது

அன்புள்ள அப்பா,
நான் நல்ல சுகமாக இருக்கின்றேன்.

பு இருப்பதால்.
பால்.
றகு இல்லாமையால். ( )
வெயில் இல்லாவிடில், பின்வருவனவற்றுள்
வாய்ப்பு உள்ளது.
ணி நேரம் மின்விளக்கு எரியும்.
ாக இருக்கும்.
நு நித்திரை செய்வார்கள்.
யே ஒரு போதும் வரமாட்டார்கள்.
( )

ன் கீழ்க் கீறிடுக.
தும் வால் உண்டு. எமது வீட்டில்
ாணி உண்டு. அதன் படி அப்பிராணி.
(2) ஒரு பூனையல்ல

கனின் வயதைக் கூட்டவருவது
தகப்பனின் வயது மகனின் வயதின்
கப்பனின் வயது யாது?
(2) 48 வருடங்கள்
(4) 24 வருடங்கள்

விமலாவிடம் அதிக பணம் உண்டு.
லாவிடம் குறைவான பணம் உண்டு.
ம் வைத்திருப்பவர் யார்?
(2) விமலா
(4) கூறமுடியாது

பாடத்தில் 40 வினாக்களுக்கு சம
100 புள்ளியாகக் கணிக்கப்படுகிறது.
ட்சையில் 65 புள்ளிகள் எடுத்திருந்
ன வினாக்களுக்குச் சரியான விடை

(3) 26 (4) 32

ப்பது.



(3) (4)

படுத்தும் பிராணி.




(3). (4)

சேமிக்கும் பிராணி.




(3) (4)


சமமான பகுதிகளாகப்பிரிக்கப்பட்ட



(2)



(4)




= 192 எனின்

= இதன் பெருமதி


(3) 144 (4) 96

ஒரு சதுரவடிவமான கடதாசியானது
ஒரு பகுதி வெட்டி நீக்கப்பட்டுள்ள





தால் எவ்வாறு தோற்றமளிக்கும்.





வருவனவற்றுள் ஒன்று உண்மையா
த்தெரிக.
(2) △ + 3 = 11
(4) ○ + △ = 17

## த்தாள்-2 1மணி 15 நிமிடங்கள்

னை வாசித்து அதன் கீழ் உள்ள
எழுதுக.

'அன்பகம்'
வளர்மதி வீதி
மட்டுவில் தெற்கு
சாவகச்சேரி
25.11.2003

ன்றேன். அதுபோல உங்கள் சுகத்தை

அறிய ஆவலாக உள்ளேன். அப்பா, நான் நன்றாகப் படிக்கின்றேன். ஒழுங்காகப் பாடசாலைக்குச் சென்று வருகின்றேன். தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையில் சிறந்த பெறுபேற்றைப் பெறுவேன். என்ற நம்பக்கை எனக்குண்டு. அப்பா, நான் பரீட்சையில் சித்தியடைந்தால், எனக்குத் துவிச்சக்கரவண்டி ஒன்று வாங்கித் தரவேண்டும். பரீட்சை நெருங்கிவிட்டதால் அதிகம் எழுதமுடியவில்லை. பரீட்சை முடிந்ததும் நீண்ட கடிதம் எழுதுகின்றேன்.

பி.கு: கொழும்பிலிருந்து எப்போது வருவீர்கள்?

இப்படிக்கு
அன்புமகன்
பா. அருணிகன்

01. கடிதத்தில் சில முக்கிய குறியீடுகள் தவறவிடப்பட்டுள்ளன. அவற்றை குறித்துக் காட்டுக.
02. இக்கடிதம் யாரால் யாருக்கு எழுதப்பட்டது?
................................ ..............................................
03. இக்கடிதத்தை பதிவுத்தபாலில் அனுப்புவதாயின் ஒட்டப்பட வேண்டிய முத்திரைகளின் பெறுமதி யாது? ......ரூபா......சதம்
04. 'பி.கு' என்னும் சுருக்கம் குறிக்கும் கருத்து யாது?..........................
05. அருணன் தபாற்கந்தோருக்குச் சென்று ரூபா2.00 பெறுமதியான 8 முத்திரைகளையும், ரூபா 4.50 பெறுமதியான 4 முத்திரைகளையும் ரூபா 10.00 பெறுமதியுள்ள 6 முத்திரைகளையும் வாங்கினான். எனவே அவன் வாங்கிய முத்திரைகளின் மொத்தப் பெறுமதி யாது? .............ரூபா........சதம்
06. அவன் அவற்றை வாங்கி யன்னல் உள்ள தாள்க்காசினைக் கொடுத்தால் அவனுக்கு கிடைக்கும் மீதிப்பணம் எவ்வளவு? ..........ரூபா ...............சதம்

● ஆங்கிலச் சொற்களை எழுதுக.

07. அப்பா ..................... 08. நான் .....................
09. பாடசாலை ..................... 10. மகன் .....................

● கீழ்வரும் ஆங்கிலச் சொற்களுக்குரிய தமிழ்ச் சொற்களைக் கடிதத்தில் இருந்து எழுதுக.

11. Road ..................... 12. Your .....................
13. Grade ..................... 14. Letter .....................

● "அ" பகுதிக்கு பொருத்தமான விடைகளை "ஆ" பகுதியிலிருந்து தெரிந்து அதன் இலக்கத்தை அடைப்புக்குள் எழுதுக.

| அ | | ஆ |
|---|---|---|
| 15. கண்டி | ( ) | 1. வடமாகாணம் |
| 16. காலி | ( ) | 2. மேல்மாகாணம் |
| 17. கொழும்பு | ( ) | 3. கிழக்கு மாகாணம் |
| 18. திருகோணமலை | ( ) | 4. தென்மாகாணம் |
| 19. யாழ்ப்பாணம் | ( ) | 5. மத்தியமாகாணம் |

● பின்வரும் கூற்றுக்கள் சரியாயின் (✓) எனவும் பிழையாயின் (✗) எனவும் அடைப்பிற்குள் எழுதுக.

20. ஒரு துணியின் ஓரத்தை மடித்துத் தைப்பதற்கு சங்கிலித் தையல் பயன்படுகின்றது. ( )
21. வயலின் ஒரு தோற்கருவி ஆகும். ( )
22. தேனீ பயிர்களுக்குப் பாதிப்பை ஏற்படுத்தாத பிராணியாகும். ( )
23. 'றெஜிபோம்' நீரில் மிதக்கும். ( )
24. பெற்றோலை விட விரைவாக மண்ணெண்ணெய் ஆவியாகும். ( )

● அச்சுப்பதித்தலின் 4 சந்தர்ப்பங்கள் கீழே உள்ளன. எனினும் அவை சரியான் ஒழுங்கில் இல்லை. அவை ஒழுங்காக இருப்பதற்கு எதிரேயுள்ள அடைப்புக் குறிக்குள் 1,2,3,4 ஆகிய எண்களை இடுக.

25.
★ செய்த அச்சில் சாயம் இட்டு வெள்ளைக்கடதாசி மீது வைத்து அழுத்துக. ( )
★ மென் பலகைத் துண்டை எடுக்கவும். ( )
★ தட்டையான மேற்பரப்பிலே அச்சு ஒன்றை வெட்டுக. ( )
★ அதன் ஒரு பக்கத்தில் தட்டையான மேற்பரப்பைச செய்க. ( )

● கீழ்வரும் பாடலை வாசித்துக் கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடைகளைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.

"தலைவாரிப் பூச்சூடி உன்னைப் பாட
சாலைக்குப் போ என்று சொன்னார் உன் அன்னை!
சிலை போல ஏனங்கு நின்றாய் - நீ
சிந்தாத கண்ணீரை ஏன் சிந்துகின்றாய்?

26. இப்பாடல் ஓர் ஆண் பிள்ளையை நோக்கியா அல்லது பெண் பிள்ளையை நோக்கியா பாடப்படுகின்றது?.........................
27. பாடசாலைக்குச் செல்ல விருப்பாத பிள்ளை நின்ற காட்சி எதற்கு ஒப்பாகும்?..........................................
28. பாடசாலை செல்வதற்குப் பிள்ளையை ஆயத்தப்படுத்தியவர் யார்?..........................................
29. பாடலில் உள்ள முன்னிலைப் பெயர்ச் சொல் யாது?.....................
30. பாடலில் உள்ள முன்னிலை வினைச் சொல் யாது?.....................
31. பாடலில் உள்ள வினாச்சொல் எது?.....................
32. பாடலில் உள்ள சினைப் பெயர் யாது?.....................

● எதிர்க்கருத்துள்ள சொல் எழுதுக.

33. போ - ..................... 34. உன்னை - .....................

● ஒத்த கருத்துள்ள சொல் எழுதுக.

35. தலை - ..................... 36. கண் - .....................

● பன்மைச் சொல் எழுதுக.

37. அன்னை - ..................... 38. பூ - .....................
39. நீ - ..................... 40. பாடசாலைக்கு.....................

● பின்வரும் தமிழ்ச் சொற்களுக்குரிய ஆங்கிலச் சொற்களை சிறிய ஆங்கில எழுத்துக்களில் (Small Letters) எழுதுக.

41. தலை - ..................... 42. பூ - .....................
43. கண் - ..................... 44. நீ - .....................

● சிக்னல் பற்பசைக்குரிய விளம்பரம் கீழே தரப்பட்டுள்ளது.

> உங்கள் பற்கள் பிரகாசமாக இருக்க
> உங்கள் வாய் நறுமணத்துடன் இருக்க
> உங்கள் வாழ்வு வளமாய் இருக்க
> "சிக்னல்" பற்பசையைப் பாவியுங்கள்

இதனைப் பயன்படுத்திப் பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.


45. மேலே குறிப்பிட்ட விளம்பரங்களை அறிய உதவும் விளம்பர சாதனங்கள் மூன்று எழுதுக? (1) ............................ (2) ............................ (3) ............................
46. பற்கள் பிரகாசம் அடைய என்ன செய்யவேண்டும் எனக் கூறப்பட்டுள்ளது? ............................
47. சிறுவரில் காணப்படும் 20 பற்களை எவ்வாறு அழைப்பர்?
............................
48. வளர்ந்தோருக்குப் பொதுவாக எத்தனை பற்கள் காணப்படும்?
............................
49. நீர் காணும் 'சிக்னல்' பெட்டி எவ்வகைத் திண்ம வடிவம்?
............................
50. அதற்கு உச்சிகள் எத்தனை?............................
விளிம்புகள் எத்தனை?............................
51. பற்களினால் நாம் பெறும் முக்கிய பயன் யாது?..................
52. ஒரு சிக்னல் பெட்டியின் நிறை 175 கிராம் ஆகும். அவ்வாறான 14 சிக்னல் பெட்டிகளின் மொத்த நிறை யாது?
............................
53. ஒரு சிக்னல் பெட்டியின் விலை ரூபா 47.50 ஆகும். இரண்டு சிக்னல் பெட்டிகளை வாங்கி ரூபா 100 ஐக் கடைக்காரரிடம் கொடுத்தால் கிடைக்கும் மீதிப் பணம் எவ்வளவு?
............................

● நாதன் கடையில் வாங்கிய பொருட்களின் சிட்டை விவரம் கீழே உள்ளது. அவ்விவரத்தைக் கொண்டு அதன் கீழுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.


| பொருள் | அளவு | விலை |
|---|---|---|
| மா | 3kg | 63.00 |
| அரிசி | 2½kg | 75.00 |
| சீனி | 750g | 22.50 |
| பருப்பு | 500g | 25.50 |

54. ஒரு கிலோக்கிராம் அரிசியின் விலை யாது?.....................
55. சீனி 1½ கிலோக்கிராம், பருப்பு 750 கிராமும் வாங்க எவ்வளவு பணம் வேண்டும்? ...............ரூபா .............சதம்
56. நாதன் மேலுள்ள அட்டவணையில் உள்ள பொருட்களை வாங்கிக் கொண்டு 200 ரூபாத்தாள் ஒன்றைக் கொடுத்தால் மீதியாக எவ்வளவு கிடைக்கும். ............ரூபா ..........சதம்
57. 100g பருப்பின் விலை யாது? ............ரூபா .............சதம்
58. 2kg அரிசியும் 150g சீனியும் 250g பருப்பும் வாங்க எவ்வளவு பணம் வேண்டும்?............ரூபா .............சதம்

● பின்வரும் படங்களின் சிங்களச் சொல்லை தொடர்பு படுத்துக.

59.  පැන
60.  පොත
61.  ඔරලෝසුව
62.  කෙසෙල්
63.  පිහිය

● சரியான விடைகளைக் கணித்து எழுதுக.

64.  நிறந்தீட்டப்படாத பகுதியை தசம எண்ணாகக் காட்டுங்கள்.............................
65.  இங்கு காட்டப்படும் எண் யாது? ............................
66. 



இந்த உருவின் சுற்றளவு யாது?
............................
67. ஒருவருடத்தின் கடைசி மாதத்தில் எத்தனை நாள்கள் உள்ளன? ............................
68. 2810 இந்த எண்ணில் இலக்கம் 2இன் பெறுமானம்?..........

● தகவல் தொடர்பு சாதனங்கள்... என்னும் தலைப்பின் கீழ் சரியான எழுவாய் பயனிலைகளுடன் ஆறுவாக்கியங்கள் எழுதுக.

69. ..........................................................
70. ..........................................................
71. ..........................................................
72. ..........................................................
73. ..........................................................
74. ..........................................................

*அரச பரீட்சையில் சித்தியடைய வாழ்த்துகின்றோம்.*

**தயாரிப்பு: ஆசிரியர் திரு.வேலுப்பிள்ளை அன்பழகன்.**

# மக்களின் ஆணையை சங்கரி மீறினார் என்கின்றார் சம்பந்தன்

கொழும்பு,டிசெ.2

நமது மக்கள் கடந்த பொதுத் தேர்தலில் எமக்கு வழங்கிய ஆணைக்கு எதிராக ஆனந்தசங்கரி செயற்பட்டார். அதனால்தான் இந்த முடிவை எடுக்க வேண்டிய நிலைக்கு நாம் தள்ளப் பட்டோம்- இவ்வாறு தெரிவித்திருக்கின் றார் கூட்டணியின் செயலாளர் நாய கம் இரா.சம்பந்தன்.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற கட்சியின் மத்திய குழுக் கூட்டம் குறித்து அவர் மேலும் தெரிவித்த தாவது:-

தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் என்ற வகையிலும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரதிநிதி என்ற வகையிலும், மக்களால் கடந்த பொதுத்தேர்தலில் தமக்கு வழங்கப் பட்ட ஆணையை நிறைவு செய்வதற்கு- அதன்படி செயற்படுவதற்கு - ஆனந்த சங்கரி தவறிவிட்டார் என்பதே ஒவ் வொரு மாவட்டத்திலிருந்தும் இந்தக் கூட்டத்துக்கு வந்தவர்கள் கூறிய கருத்தாகும்.

தமிழீழ விடுதலைப் புலிகளுடன் ஒரு புரிந்துணர்வு ஏற்பட்டு, தமிழ்த் தேசியப் பிரச்சினைக்கு ஒரு நிரந்தர மான - நியாயமான - தீர்வைக் காண வேண்டிய கட்டாய நிலையில் நாம் இருக்கின்றபோது அவரது செயற்பாடு களும் கூற்றுக்களும் மக்களினால் வழங்கப்பட்ட ஆணைக்கு மாறாக அமைவதால் நாம் அவர் மது எமக்கு நம்பிக்கையில்லை என்ற முடிவை எடுத்தோம்.

அவர் தமிழ்த்தேசியக் கூட்டமைப புடன் சேர்ந்து செயற்படவில்லை. சென்ற நாடாளுமன்றத் தேர்தலில் நாங்கள் நான்கு கட்சிகள் ஒன்றாகச் சேர்ந்து ஒரு பொதுத்தேர்தல் விஞ் ஞாபனத்தை முன்வைத்து மக்களு டைய ஆணையைக் கேட்டோம். அந் தக் கூட்டமைப்பை வலுப்பெற வைப் பதற்கு அவர் செயற்படவில்லை. அதற்கு மாறாக அது பலவீனமடையக் கூடிய வகையில் அவரின் கூற்றுக்களும் செயற்பாடுகளும் அமைந்துள்ளன.

தமிழீழ விடுதலைப் புலிகளை பேச்சுக்களில் ஈடுபடுத்தி பேச்சுக்களில் அவர்கள்தான் ஈடுபடவேண்டும் என்று நாம் எடுத்த முடிவுக்கும் கொடுத்த முக்கியத்துவத்துக்கும் மாறாக அவரு டைய கூற்றுக்களும் செயற்பாடுகளும் அமைந்துள்ளன. இந்தக் காரணத்தின் நிமித்தம் இந்த மத்திய செயற்குழு விற்கு அவர் மீது தொடர்ந்து நம் பிக்கை வைக்கமுடியாது என்பது தான் தீர்மானம்.

சிரேஷ்ட உபதலைவர், செயலாளர் நாயகம், பொருளாளர், நிர்வாகத் தலைவர், நிர்வாகச் செயலாளர் மற் றும் ஒவ்வொரு மாவட்டத்திலிருந்து வந்த பலரும் இந்தத் தீர்மானத்தை ஆதரிக்கின்றார்கள். பல கிளைகள் தீர்மானம் நிறைவேற்றியிருக்கின்றன. இந்த விடயத்தில் எந்தவித அழுத் தமும் இருக்கவில்லை.

இப்பிரச்சினையை நாங்கள் சம ரசமாகத் தீர்ப்பதற்கு கடும் முயற்சி எடுத்தோம். அவரிடம் ஒத்துழைப்பை எதிர்பார்த்தோம். ஆனால், அவர் ஒத்துழைப்பு வழங்கவில்லை. அதன் பின்புதான் நாம் இந்த நிலைக்குத் தள்ளப்பட்டோம் - என்றார் இரா. சம் பந்தன் எம்.பி. (எ)

# சு.க.-ஜே.வி.பி. உத்தேச கூட்டு குறித்து பொ.ஐ.மு.கட்சிகளின் கருத்தறிய முடிவு

## வியாழனன்று தலைவர்களின் கூட்டம்

கொழும்பு,டிசெ.2

சுதந்திரக் கட்சிக்கும் ஜே.வி.பிக்கு மிடையே ஏற்படுத்தப்படவிருக்கும் கூட்டு குறித்து பொ.ஐ.முன்னணியில் அங்கம வகிக்கும் ஏனைய கட்சிகளினதும் கருத் துக்கள் அறியப்படவிருக்கின்றன.

இதற்கென உத்தேச கூட்டு குறித்து அக்கட்சிகளின் தலைவர்களிடம் விளக கிக் கூறும் கூட்டமொன்று எதிர்வரும 4ஆம் திகதி நடைபெறுமென பொ.ஐ. முன்னணியின் பொதுச் செயலாளரான டி.எம்.ஜயரத்ன தெரிவித்திருக்கிறார்.

கடந்த வியாழக்கிழமை ஜனாதி பதி சந்திரிகா குமாரதுங்க தலைமை யில் ஜனாதிபதி மாளிகையில் நடைபெற்ற கூட்டத்தில் உத்தேச கூட்டு குறித்து விளக்கப்பட்டதை யடுத்தே பொ.ஐ. முன்னணிக் கட்சி களின் கருத்துக்களை அறிவதெனத் தீர்மானிக்கப்பட்டது.

பொ.ஐ.முன்னணியில் அங்கம் வகிக்கும் சகல கட்சிகளின் தலை வர்களும் வியாழனன்று நடைபெறும் கூட்டத்தில் கலந்துகொள்வர்.

# 60 பேருடன் இத்தாலிக்குப் பயணமான ட்ரோலர் நடுக் கடலில் பிடிபட்டது!

சட்டவிரோதமாக இத்தாலிக்குச் செல்லவிருந்த 60 பேருடனான மீன் பிடி ட்ரோலரொன்றை கடற்படையினர் நீர்கொழும்பு கடற்பகுதியில் வைத்து மடக்கிப் பிடித்தனர்.

ட்ரோலரிலிருந்த 60 பேரில் 47 பேர் தமிழர்களென்றும் எஞ்சிய 13 பேரும் சிங்களவர்களென்றும் கடற் படை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

நேற்றுமுன்தினம் அதிகாலை 2 மணியளவில் இந்த ட்ரோலர் நீர் கொழும்புக்கு அப்பால் 20 கடல் மைல் தூரத்தில்வைத்து கடற்படை யினரால் கைப்பற்றப்பட்டது.

ட்ரோலரில் பயணம் செய்த 60 பேரும் நேற்றுமுன்தினம் கொழும்பு கடற்படை முகாமுக்கு கொண்டு வரப்பட்டனர்.

# புத்தளத்திற்கு சனியன்று பிரதமர் ரணில் விஜயம்

## உடப்பு தமிழ்க் கிராமத்துக்கும் செல்கிறார்

புத்தளம்,டிசெ.2

நாடளாவிய ரீதியில் மக்களை சந்திக்கும் பிரதமர் ரணிலின் தொடர் நிகழ்வில் ஓர் அங்கமாக எதிர்வரும் சனிக்கிழமை அவர் புத்தளத்துக்கு விஜயம் செய்கிறார்.

நாடாளுமன்ற விவகார அமைச்சா ஏ.எச்.எம்.அஸ்வர், புத்தளம் தொகுதி ஐக்கிய தேசியக்கட்சி அமைப்பாளர் எம்.ஐ.வி.ஹாபி ஆகியோரின் அழைப்பை ஏற்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க புத்தளம் தொகுதிக்கான இந்த விஜயத்தை மேற்கொள்கிறார்.

அன்றையதினம் காலை 10 மணி முதல் 11மணி வரை புத்தளம் மஸ்ஜித் வீதியிலும் பகல் 12மணிமுதல் ஒரு மணிவரை வண்ணாத்திவில்லு கிராமத்திலும் பிற்பகல் 2மணி முதல் 3 மணிவரை கற்பிட்டி நகரிலும் மாலை 4மணி முதல் 5மணிவரை உடப்பிலும் பிரதமர் மக்களைச் சந்திப்பார் என அமைச்சர் அஸ்வர் தெரிவித்தார்.

உடப்பு தமிழ்க் கிராமத்துக்கு நாடடின் பிரதமரொருவர் விஜயம் செய்வது இதுவே முதல் தடவை என்று அமைப்பாளர் ஹாபி தெரிவித்தார்.

# மன்னாரில் மழை வெள்ளத்தில் 500 வீடுகள் அமிழ்ந்தன!

மன்னாரில் கடும் மழை காரணமாக வெள்ளம் ஏற்பட்டிருக் கிறது. இதனால் சுமார் 500 வீடுகள் நீரில் அமிழ்ந்திருக் கின்றன என்று தெ விக்கப்படுகிறது.

பள்ளிமுனையில 100 வீடுகளும், உப்புக்குளத்தில் 25 வீடுகளும், சாந்திபுரத்தில் 275 வீடுகளும், எமில்புரத்தில் 100 வீடுகளும் வெள்ளத்தில் அமிழ்ந்திருக்கின்றன என்று அரச அதிபர் தெரிவித்திருக்கிறார்.

சமூக சேவைகள் திணைக்களம் வெள்ளத்தால் பாதிக் கப்பட்டு அகதிகளானோருக்கு நிவாரணம் வழங்க நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

## காலத்தின் பதிவு



வாழ்க்கை வாழ்வதற்குத்தானே... படம்: தீபன்

# டென்மார்க்கில் மாவீரர் தினம் உணர்வுபூர்வமாக அனுஷ்டிப்பு

கொழும்பு,டிசெ.2

மாவீரர் நாள் நிகழ்வுகள் டென் மார்க்கில் கடந்த சனியன்று புலம் பெயர்ந்த தமிழ் மக்களால் உணர்வு பூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டன. நிகழ வின் சிறப்பம்சமாக புலிகளின் மதியுரை ஞர் அன்ரன் பாலசிங்கம் எழுதிய 'விடுதலை' நூல் வெளியிட்டு வைக் கப்பட்டது. நூலைவெளியிட்டு வைத்த புலிகளின் மன்னார் மாவட்ட அரசியல துறைப் பொறுப்பாளர் அமிர்தாப் அங்கு சிறப்புரையாற்றினார்.

டென்மார்க் கேரினிங் கொங் கிரஸ் சென்டர் என்ற - சுமார் 2000 இருக்கைகளைக் கொண்ட மண்டபத் தில் நிகழ்வுகள் நடைபெற்றன.

மண்டபம் மக்கள் கூட்டத்தால் நிறைந்து வழிந்தது; சிவப்பு, மஞ்சள் கொடிகளால் அலங்கரிக்கப்பட்டிருந் தது. அங்கு மாவீரர்களுக்கான நினை வுத்தூபிகள் அழகாக அமைக்கப்பட் டிருந்தன.

மாலை 4.30 மணிக்கு நிகழ்வுகள ஆரம்பமாகின. முதல் கட்டமாக தேசி யக்கொடி ஏற்றல், அக வணக்கம், மாவீரர் தூபிகளுக்கான அஞ்சலிகள் ஆகிய நிகழ்வுகள் நடைபெற்றன. மாவீரர் குடும்பங்கள் வரிசையாக வந்து விளக்கேற்ற அதைத் தொடர்ந்து பொது மக்கள் விளக்கேற்றி மலர்வைத்து அஞ்சலி செலுத்தும் நிகழ்வு நடை பெற்றது.

அதைத் தொடர்ந்து கேர்னிங், ஈக்காஸ்ற் மாணவிகளின் நடன நிகழ்ச்சி இடம்பெற்றது. புலிகளின் மதியுரை ஞர் அன்ரன் பாலசிங்கம் எழுதிய 'விடுதலை' என்ற நூலை அமிர்தாப், வைபவரீதியாக வெளியிட அதைக் காரியாலய உறுப்பினர் நடனபாதம் பெற்றுக்கொண்டார். அதன் பின்னா அமிர்தாப், ஒன்றரை மணி நேரம் சிறப்புரையாற்றினார்.

நிறைவாக 'நம்புங்கள் தமிழீழம் நாளை மலரும்' என்ற பாடல் இசைக் கப்பட்டது. அமிர்தாப் தேசியக் கொடியை இறக்கிவைக்க நிகழ் வுகள் இரவு 10.30 மணியளவில் நிறைவுற்றன.

# இயல்பு வாழ்க்கை வெள்ளத்தால் பாதிப்பு

வரணி டிசெ.2

கடந்த ஒருவாரமாகப் பெய்த மழையினால் வரணி வடக்கு கறுக்காய், சிமிழும்மன் கோவிலடி, மாசேரி, கரம் பைக்குறிச்சி ஆகிய பிரதேசங்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. மக்களின வீடுகளைச் சுற்றி வெள்ளம் நிற்ப தனால் - இயல்பு வாழ்க்கை பாதிக் கப்பட்டுள்ளது. மழை தொடரும் பட்சத்தில் பெருமளவு மக்கள் இடம் பெயரும் அபாயம் உள்ளது.

(ஒ-170)

# சீர்மிய ஆசிரியர்களுக்கான இறுதிக்கட்ட செயலமர்வு

## சாந்தியகம் மண்டபத்தில் நடைபெறும்

வடக்கு - கிழக்கு மாகாணங் களில் இருந்து தெரிவுசெய்யப்பட்ட 35 சர்மிய ஆசிரியர்களுக்கான இறுதி செயலமர்வுகள் எதிர்வரும் 5ஆம் திகதி வெள்ளிக்கிழமை தொடக்கம் இம் மாதம் 21ஆம் திகதிவரை நடைபெற வுள்ளன.

ஜி.ரி.இசற் நிறுவனம், வலிகாமம் கல்விவலயம், யாழ். பல்கலைக்கழக புறநிலைப்படிப்புகள் அலகு என்பவற றின் அனுசரணையுடன், யாழ்.சாந்தி யகத்தின் விரிவுரை மண்டபத்தில் இந்தச் செயலமர்வு நடைபெறவுள்ளது.

செயலமர்வின் இறுதியில் நடை பெறும் பரீட்சையில் சித்தியடைபவர் களுக்கு இந்த மாதம் 21ஆம் திகதி யாழ்.பல்கலைக்கழக நூலக கேட்போர் கூடத்தில் வைத்து சான்றிதழ்கள் வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

கடந்த வருடம் இதேபோன்று ஒரு தொகுதி ஆசிரியர்கள் பயிற்சி பெற்று சித்தியடைந்த பின்னர், பாடசாலை களில் பணியாற்றி வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (எ-152)

# கண்காணிப்புக் குழுவினருடன் பாதுகாப்பு அமைச்சு செயலர் பேச்சு

கொழும்பு,டிசெ.2

அரசின் சமாதான செயலகத்துடன இணைந்து யுத்தநிறுத்தத்தைக் கண காணிக்கும்படி கண்காணிப்புக் குழுவின் பிரதிநிதிகளை பாதுகாப்பு அமைச்சின் செயலர் சிறில் ஹேரத் அறிவுறுத்தி யுள்ளார்.

பாதுகாப்பு அமைச்சை ஜனாதிபதி பொறுப்பேற்ற பின்னர் அமைச்சின் பிரதிநிதிக்கும் கண்காணிப்புக் குழுப் பிரதிநிதிகளுக்கும் இடையில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற இந்த முதலாவது சந்திப்பில், கண்காணிப் புக்குழு சார்பில் அதன் பதில் தலை வர் ஹேறாக்லண்ட் கலந்துகொண் டார்.

இந்தச் சந்திப்பின் பின்னர் ஹேறாக் லண்ட் தெரிவிக்கையில்:-

"அமைச்சின் புதிய செயலர் என்ற வகையில் கண்காணிப்புக் குழுவின் நிலைகுறித்து அவருக்கு நாம் எடுத் துக் கூறியுள்ளோம்" - என்றார்.

இதேவேளை -

கண்காணிப்புக் குழுவுக்கு மிக விரைவில் ஒரு தலைவரை நியமிக்கும படி ஏற்பாட்டாளர்களான நோர்வேயைக கண்காணிப்புக் குழு கேட்டுள்ளது.

யுத்தநிறுத்தக் கண்காணிப்புப் பணி களை நாம் மேற்கொள்வதாயின் அதற்கு எமது தலைவர் இங்கே இருக்க வேண்டும்; நோர்வேயில் அல்ல என்றும் -

ஏற்பாட்டாளராக நோர்வே இன்னும் பணியில் உள்ளது. ஆகவே, கண்கா ணிப்புக்குழு அதனிடம்தான் முறைப் பாடு செய்துவருகிறது என்றும் - பதில தலைவர் ஹொக்லண்ட் தெரிவித் தார்.

(ஐ)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

முதிரைப்பலகையாலான அலுமாரி, சோக்கேஸ், மெலோடிக்கா (யப்பான் உற்பத்தி), விறகுக்கேற்ற பூவரச மரங்கள், மாட்டுத்தொட்டில் என்பன விற்பனைக்குண்டு. தொடர்பு: T.கந்தராசா, கனகரத்தினம் வீதி, வட்டுக்கோட்டை (துபாற்கந்தோர் அருகில் உள்ள ஒழுங்கை) (மாலை 3.00 மணிக்குப் பின்பு பார்வையிடலாம்). (நல்ல காவலுக்குரிய ஆண், பெண் நாய்க் குட்டிகள் இலவசம்).(25304)

## வீடு விற்பனைக்கு/ வாடகைக்கு

யாழ்ப்பாணம் சின்னக்கடை வீதியில் மின்சாரம், தண்ணீர் வசதிகளுடன் கூடிய மாடிவீடு விற்பனைக்குண்டு அல்லது வாடகைக்கு உண்டு. தொடர்பு திருமதி ஜெயராணி குலேந்திரன், இல.24, சின்னக்கடை வீதி, யாழ்ப்பாணம். (இந்த வீடு காரியாலயப் பாவனைக்கும் உகந்தது).(25293)

## தவறிவிட்டது

கரிக்கோட்டுக்குளம், பூநகரி என்னும் முகவரியைச் சேர்ந்த சுந்தரலிங்கம் சுரேந்திரன் என்பவரது தேசிய அ.அட்டை (840103331V), பாஸ் என்பன அடங்கிய 'பேர்ஸ்' 30.11.2003 அன்று யாழ்ப்பாணத்துக்கும் கச்சேரிக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் குலம் ஸ்ரோர்ஸ், இளங்கலைஞர் மன்றம் அருகில், சட்டநாதர் வீதி, நல்லூர். (T.P.: 2892) என்ற முகவரியில் ஒப்படைத்துதவவும். (25286)

## வீடு விற்பனைக்கு

திருநெல்வேலியில் யாழ். பல்கலைக்கழகத்துக்கு அருகில் 2¼ பரப்புக் காணியுடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு. தொடர்பு: 214/5, இராமநாதன் வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம். (25275)

## தவறிவிட்டது

கல்லாரை மல்லாகத்தைச் சேர்ந்த சிற்றம்பலம் பிரேமினி என்பவருடைய தேசிய அ.அ. (இல. 848572403V). விசேட அ.அ. (இல.0907001509) வங்கிப் புத்தகம் மணிக்கூடு என்பன கைப்பையுடன் யாழ்ப்பாணத்துக்கும் சுன்னாகத்துக்கும் இடையில் பிரயாணத்தின் போது தவறிவிட்டன. இதைக் கண்டெடுத்தவர்கள் கீழுள்ள முகவரியுடன் தொடர்புகொள்ளவும்.

**திருமதி சிறிபாலஸ்கரன் பாலாம்பிகை,**
**7 ஆம் கட்டை ஒழுங்கை,**
**மல்லாகம்.**
**T.P.No.: 070-212350.**

## வீடு விற்பனைக்கு

கோப்பாய் இராசவீதி கண்ணன் ஒழுங்கையில் மூன்று பரப்புக் காணியில் அமைந்துள்ள வீடும் கிணறும் விற்பனைக்கு உண்டு. இவ்வீடு மூன்று அறைகளும் ஹோல், சமையல் அறை என்பவற்றுடன் வசதியாக அமைக்கப்பட்டுள்ளது.

தொடர்புகொள்ளவேண்டிய முகவரி:
**சீனிவாசகம் மகாலிங்கம்**
**(இராசன்)**
தில்லையம்பதி,
கோண்டாவில்.
(25305) (26)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

எமது பந்தியின் செயலாளரான சகோதரன்

**இராயப்பு அலெக்ஸ் அமலரட்ணம்**

அவர்கள் நேற்றையதினம் (01.12.2003) யாழ்.மாவட்ட சமாதான நீதிவானாகச் சத்தியப்பிரமாணம் எடுத்துக்கொண்டமைக்காக அவரை உள்ளன்புடன் பாராட்டி வாழ்த்துகின்றோம். அவர் பணிசிறக்க இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆன்ம ஆலோசகரும், தலைவரும்,
சகல சகோதர சகோதரிகளும்.

புனித நுசையப்பர் பந்தி.
புனித வின்சன்ற் டீ போல் சபை.
புனித மரியன்னை பேராலயம்.
யாழ்ப்பாணம்.
(25303)(34)


**Operator உடன் வாடகைக்கு உண்டு**




கட்டடம் உடைத்து
அப்புறப்படுத்த,
காணி துப்பரவு செய்ய,
கிடங்குகள் மற்றும்
கிணறு கிண்ட,
அத்திவாரங்களை
அகற்ற மற்றும் கிண்ட,
கனரக பொருட்களை இறக்க, ஏற்ற தொடர்பு கொள்ளுங்கள்...

திரு.பாலசுந்தரம் 021 2223867, வாசுகி 0777291636


# மரண அறிவித்தல்

## திருமதி கந்தையா சிதம்பரம்

இடைக்காட்டைப் பிறப்பிடமாகவும் ஆத்தியடி, பருத்தித்துறையை வதிவிடமாகவும் கொண்ட திருமதி கந்தையா சிதம்பரம் 30.11.2003 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராமலிங்கம் கந்தையாவின் அன்பு மனைவியும் இராசரத்தினம் (கனடா), உதயநாயகி (கனடா), செல்வரத்தினம் (வீதி அபிவிருத்தித் திணைக்களம், பருத்தித்துறை), நவரத்தினராசா (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும் சிவேஸ்வரி, காலஞ்சென்ற சுந்தரவேல், சீதாலட்சுமி, மீனலோசனி ஆகியோரின் மாமியாரும் நாகநந்தினி, நாகநளினி, நாகநிமலினி, அகிலன், நகுலன், சுமதி, நிசாந்திக்கா, நிசாந்தன், விசாகன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.12.2003) செவ்வாய்க்கிழமை காலை 8.00 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
க.செல்வரத்தினம்
(மகன்).

*ஆத்தியடி,*
*பருத்தித்துறை.*
(24308)(34-21-14-26)

# இடம் பெயர்ந்தவர்களில்....

(ஏழாம் பக்கத் தொடர்ச்சி)

உதவிகளைப் பெற்று வழங்கியுள்ளோம்

வலுவிழந்தோருக்கு தனியான திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்தி, போரினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவி செய்து வருகின்றோம்.

இந்த வகையில், 30ரகமான திட்டங்களை நடைமுறைப்படுத்துகின்றோம். இத்திட்டங்கள் 2005ஆம் ஆண்டை இலக்காகக் கொண்டு நடைமுறைப்படுத்தப்படுகின்றன. 30 கோடி ரூபா செலவில் இவை மேற்கொள்ளப்படுகின்றன.

*கேள்வி:* இந்த நிதி எவ்வாறு கிடைக்கின்றது?

*பதில்:* உள்ளூரில் 'நிக்கொட்' நிறுவனம் ஊடாக நிதி கிடைக்கின்றது. ஐநா.நிறுவனங்களும் வழங்குகின்றன. 50 சதவீதமான நிதி வெளிநாட்டில் இருந்து எமது புலம் பெயர்ந்த மக்களால் வழங்கப்படுகின்றது. அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஒன்றிய நாடுகளில் இருந்து இந்த நிதியை சேகரித்துள்ளோம்.

*கேள்வி:* யாழ்ப்பாணத்தில் ஏதாவது திட்டம் நடைமுறைப்படுத்துகிறீர்களா?

*பதில்:* 'நிகொட்' உதவியுடன் வீடமைப்புத்திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்துகின்றோம். மலசல கூடங்கள் அமைத்தல் போன்ற திட்டங்களையும் மேற்கொள்கின்றோம்.

முன்பள்ளி பணிகளை முன்னெடுக்கவிருக்கின்றோம். 3 வயதுக்கும் 5வயதுக்கும் இடைப்பட்ட பிள்ளைகளுக்கு கல்வி ஊட்டுவதற்கான திட்டங்களுக்கு முன் உரிமை வழங்குகின்றோம்.

*கேள்வி:* விடுதலைப் புலிகள் சாராத தனியான அரசசார்பற்ற நிறுவனம் எனக் கூறுகிறீர்கள். அப்படியிருக்கும் போது புரிந்துணர்வு உடன்பாட்டுக்கு முன் ஏன் யாழ்ப்பாணத்தில் பணியாற்றவில்லை?

*பதில்:* சந்திரிகா அரசு இருந்த போது யாழ்ப்பாணத்தில் நாம் பணியாற்ற 5தடவைகள் விண்ணப்பித்தோம். ஆனால், எமக்கு அனுமதி வழங்கப்படவில்லை, யாழ்ப்பாணத்தில் மட்டுமல்ல, இராணுவக் கட்டுப்பாட்டு பகுதியில் பணிபுரிய சந்திரிகா அரசு எமக்கு அனுமதி வழங்கவில்லை. தற்சமயம் ரணில் அரசு யாழ்ப்பாணம் உள்ளிட்ட இராணுவக் கட்டுப்பாட்டுப்பகுதியில் பணிபுரிய அனுமதி வழங்கியுள்ளது. அத்துடன் இதற்குத் தேவையான உதவிகளையும் வழங்கிவருகிறது.

அத்துடன், தேசிய புனர்வாழ்வுக் குழுவில் எமக்கு அங்கத்துவம் வழங்கப்பட்டுள்ளது. அரசின் புனர்வாழ்வு, புனரமைப்புத்திட்டத்திலும் அங்கத்துவம் கிடைத்துள்ளது.

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் இயங்கும்போது அவர்களின் ஆதரவையும் ஒத்துழைப்பையும் பெற்றுக்கொள்கின்றோம். அவர்களின் ஆலோசனைகளையும் கட்டுப்பாடுகளையும் ஏற்றுக் கொள்ளவேண்டும். அப்போது தான் பணியாற்ற முடியும். இல்லாவிட்டால் அங்கு இயங்குவது கஷ்டம்.

அதேபோல அரச கட்டுப்பாட்டுப் பகுதியில் பணியாற்றும் போது, அரசின கட்டுப்பாடுகளையும் ஆதரவையும் பெற்றுக்கொள்ள வேண்டும்.

இருதரப்புக்களின் ஆதரவும் ஒத்துழைப்பும் கிடைப்பதால் எந்த வித பிரச்சினைகளும் இன்றிச் செயற்பட முடிகின்றது.

கொழும்பிலும் அரசின் கட்டுப்பாடுகளை ஏற்று செயற்பட்டு வருகின்றோம் ஏனைய அரசசார்பற்ற அமைப்புக்கள் இயங்கும் விதமே நாமும் பணியாற்றுகின்றோம்.

மலையகத்தில் பதுளை மாவட்டத்தில் சில திட்டங்களை நடைமுறைப்படுத்துகின்றோம். கணனிப்பயிற்சி நிலையம் ஆரம்பித்துள்ளோம். சிறுவர் இல்லங்களுக்கு உதவுகிறோம். நிவாரணப்பணிகளை மேற்பார்வை செய்கிறோம்.

அநுராதபுரம், பொலன்நறுவை, மணலாறு எல்லைப்பகுதியில் உள்ள மக்களும் எமது நிறுவனத்தின் உதவியைக் கேட்டுள்ளனர். அங்கு அலுவலகம் அமைக்கும்படி கேட்கிறார்கள் அங்கு பணிபுரிய அனுமதிதந்தால் எமது செயற்பாட்டை அங்கும் விஸ்தரிப்போம்.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



**கந்தசாமி முருகையா J.P.**

வவுனியா நீதி நிர்வாக மாவட்டத்திற்கான சமாதான நீதிவானாக **திரு.கந்தசாமி முருகையா** அவர்கள் 27.11.2003 வவுனியா மாவட்ட நீதிபதி உயர்திரு.எம். இளஞ்செழியன முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

இவர் அநுராதபுரம், வவுனியா முன்னாள் பிரபல வர்த்தகரும் வடமராட்சியைச் சேர்ந்த (தும்பளை, பருத்தித்துறை) அமரர் சி.மு.கந்தசாமி J.Pயின் மகனுமாவார்.

இவர் தனது ஆரம்பக் கல்வியை யா/தும்பளை சிவப்பிரகாச மகா வித்தியாலயத்திலும், இடைநிலைக்கல்வியை யா/வேலாயுதம் மகா வித்தியாலயத்திலும், உயர்கல்வியை யாழ். பரியோவான் கல்லூரியிலும் பயின்றார். இவர் கல்லூரியின் மாணவத் தலைவராகவும், கல்லூரி வரலாற்று அரசியற்றுறை மன்றங்களின் தலைவராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டு செயலாற்றினார்.

தற்போது சமயப்பணிகளிலும், பொதுத்துறையிலும் ஈடுபாடு கொண்டதினால் வவுனியா ஸ்ரீகந்தசுவாமி கோவில் தர்மகர்த்தா சபையின் பொருளாளராகவும், வவுனியா சுத்தானந்தா இந்து இளைஞர் சங்கத்தின் துணைத்தலைவராகவும் அநுராதபுரம் ஸ்ரீ கதிரேசன் கோவில் தானேசர் சபையின் ஆயுள் நிர்வாகியாகவும் பணியாற்றிவருகிறார்.

இவர் வவுனியா சுதன் அச்சக உரிமையாளரும், வவுனியா ஸ்ரீ முருகன் படமாளிகையின் பங்காளருமாவார்.

இவரின் சமய சமூகப் பணிகள் நல்வழியில் தொடரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

தர்மகர்த்தா சபை.
வவுனியா ஸ்ரீ கந்தசுவாமி கோவில். தானேசர் சபை.
அநுராதபுரம் ஸ்ரீ கதிரேசன் கோவில்.

*வவுனியா.*

# முதலாம் ஆண்டு நினைவலைகள்

| உதிப்பு | உதிர்வு |
|---|---|
| 05 | 13 |
| 03 | 12 |
| 1923 | 2002 |



# கந்தையா துரைராசா

(கோவிற்குடியிருப்பு, சாவகச்சேரி)

திதி: 02.12.2003

*மனிதருள் மாணிக்கமாய் மாநிலத்தில் திகழ்ந்து*
*தாய்மையின் சின்னமாய் வெண்னிற ஆடையுடுத்தி*
*கனிவான பார்வையினாலே எமையெல்லாம் கவர்ந்திருந்து*
*அரவணைத்து பார்போற்ற உயர்த்திய*
*எம் அன்புருவே உமை இனிநாம் காணும் நாள்தான் வாராதோ?*


உங்கள் ஆத்மா சாந்தியடைய ஆண்டவனைப் பிரார்த்திக்கும்:

பாசமிகு மனைவி,
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

'பூர்ணிமா'
தாமோதரம்பிள்ளை வீதி,
சாவகச்சேரி.

(சி-31575) (25-14-21-26)

"வியாபாரம் சுலபமாகும் வரவும்,
சேமிப்பும் அதிகமாகும்!"




கீர்த்தி கருணாநாயக்க வியாபாரி
சிட்டி கொமியூனிகேஷன், பிலிமதலாவ.

Byk

# இவர் உண்மையில் மோட்டார் சைக்கிள் ஒன்றின் பாவனையாளர்.

"நான் பத்து வருடகாலமாக மோட்டார் சைக்கிளைப் பயன்படுத்திவருகிறேன். முன்னர் என்னிடமிருந்த மோட்டார் சைக்கிளால் பெரும் அவதியுற்றேன். அதைத் தினமும் பழுது பார்க்கவும், பெற்றோலுக்கும் நிறையவே செலவானது.

Byk மோட்டார் சைக்கிளை வாங்கியதற்குப் பின்னர் இந்தப் பிரச்சினைக்கு ஒரு விமோசனம் வந்துவிட்டது. வீட்டிலிருந்து கொமியூனிகேஷனுக்குப் போவதற்குச் செலவாகும் பணமும் மிகுதியானது.

வியாபாரத்தைத் தவிர ஒரு இசைக் குழுவிலும் பணியாற்றுகிறேன். அச் சந்தர்ப்பங்களில் எனது Byk யைத் தான் பயன்படுத்திவருகிறேன். Byk யின் துணையுடன், எனது துணைவியோடு ஜோடியாகச் செல்லலாம், வீட்டு வேலைகளையும் மிக எளிதாக முடித்திடலாம். Byk வரவினால், வரவுக்கு வரவுமாச்சு.

Byk மோட்டார் சைக்கிளின் மிக வசதியான அம்சம் என்னவெனில், அதன் பெற்றோல் செலவு மிகக் குறைவு என்பது தான். MFR ஹெட் லைட் இருப்பதால் இரவிலும் பாதுகாப்புடன் ஓட்டிச் செல்லலாம். Byk மோட்டார் சைக்கிளை வாங்கிய நாள் முதல் பிரச்சினைகள் விடைபெற்றுக்கொண்டன.

எனது நண்பர்கள் பலரும் பஜாஜ் மோட்டார் சைக்கிளைத் தான் பயன்படுத்துகிறார்கள். டேவிட் பீரிஸ் மோட்டார் கம்பனி லிமிட்டட்டின் சேவை, மற்றும் மேலதிக உதிரிப்பாக விற்பனை வலையமைப்பினர் எமதருகாமையிலேயே இருப்பதால் எவ்வித பயமுமில்லை."

"ஏனையோரைவிட மோட்டார் சைக்கிளின் பெருமையையும், பெறுமதியையும் நன்குணர்ந்தவர்கள், அதைப் பாவித்துப் பயனடையும் நாம் மட்டுமே."

**பஜாஜ்** இலங்கையில் முன்னணியாக விற்பனையாகும் மோட்டார் சைக்கிள்.

DPMC

**டேவிட் பீரிஸ் மோட்டார் கம்பனி லிமிட்டட்.**

75, ஹைட் பார்க் கோனர், கொழும்பு - 2. தொலைபேசி : 4700600 தொலைநகல் : 4700677, 2687175
மோட்டார் சைக்கிள் பற்றிய விபரங்களுக்கான அவசர அழைப்பு : 4715050
இணைய தளம் : http://www.dpmco.com

பிராந்திய அலுவலகங்கள்: கண்டி, மாத்தறை, அம்பாறை, தெஹியத்தகண்டிய, அநுராதபுரம், இரத்தினபுரி, புத்தளம், நுவரெலியா, பக்கலை, பதுளை, திருகோணமலை, மத்துகமை.
சகல பிராந்திய அலுவலகங்களினதும் பொதுவான தொலைபேசி எண்கள்: 4700600.

mel ads 3/10/2594

# பாற்பொருள் உற்பத்திகளுக்கு மக்கள் ஊக்குவிப்பு தேவை

**திருநெல்வேலி பாற்பண்ணை என்று சொன்னால் அநேகமாகத் தெரியாதவர்கள் இல்லை என்றுதான் சொல்லவேண்டும். அந்த அளவுக்கு அதன் சேவை குடாநாட்டில் வியாபித்துள்ளது. பாற்பண்ணை என்ற சொல்லை உச்சரிக்காதவர்கள் குடாநாட்டில் மிகவும் குறைவாகவே இருப்பார்கள். பாற்பண்ணை என்று அனைவராலும் அழைக்கப்படுகின்ற யாழ்.மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் உருவாக்கம் அதன் தொழிற்பாடுகளும் பற்றி இன்றைய 'கமமும் புலமும்' பகுதியில் பார்ப்போம்.**

திருநெல்வேலி கிழக்கில் அமைந்துள்ள யாழ்மாவட்ட அபிவிருத திக் கூட்டுறவுச் சங்கம் 1963ஆம் ஆண்டில் யாழ்ப்பாணம் பால் பொருள உற்பத்தியாளர், பாவனையாளர் கூட டுறவுச்.சங்கம் என்ற பெயரில் உதய மாகியது. 13 வருடங்கள் இதேபெய ரில் இயங்கிவந்த சங்கத்தை 110 அங்கத்தவர்களுடன் 1976ஆம் ஆண்டு மேமாதம் 12ஆம் திகதி அரசு பொறுப பேற்றுக் கொண்டது.

பொறுப்பேற்றுக் கொண்டதுடன் மட்டும் நின்றுவிடாது, யாழ்ப்பாணம் பால்பொருள் உற்பத்தியாளர், பாவனை யாளர், கூட்டுறவுச் சங்கம் என்ற பெயரை மாற்றி, 'நல்லூர் தேர்தல் தொகுதி அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் என்ற பெயரையும் பதிவு செய்து கொண்டது. இந்தப் பெயருடன் இயங்கிவந்த சங்கம், 1985ஆம் ஆண்டி லேயே தற்போதுள்ள 'யாழ்.மாவட்ட அபிவிருததிக் கூட்டுறவுச் சங்கம்' என்ற பெயருடன் இயங்க ஆரம்பித்தது.


மேற்படி சங்கமானது குடாநாட்டில உள்ள கால்நடை வளர்ப்போரிடமிருந்து பாலைக் கொள்வனவுசெய்து அதனை மக்களுக்கு விநியோகிக்கும பணியை மேற்கொண்டு வருகின்றது. அத்துடன், பாற்பொருள்களையும் உற்பத்தி செய்து சந்தைப்படுத்தி வருகின்றது. இதனால் குடாநாட்டில் உள்ள கணிசமான அளவு மக்களின் போஷாக்கு மேம்பாட்டுக்கு இச்சங்கம உதவுகின்றது என்று கூறினால் அது மிகையல்ல. பாலைக் கொள்வனவு செய்வதற்கும், அதனை விநியோகிப் பதற்கும் குடாநாட்டில் 18 கொள்வனவு, விற்பனவுக் கிளைகள் உள்ளன என சங்கத்தின் தலைவர் மகதிரவமநாதன தெரிவித்தார். இந்தக் கிளைகள் மூலம் கொள்வனவு செய்யப்படும் பால் மக்களுக்கு விநியோகிக்கப் பட்டு வருகின்றது என்றும் அவர் கூறினார்.



அத்துடன், இங்கு பாலில் இருந்து ஜோகட், ஐஸ்கிறீம், பட்டர், சுவை யூட்டியபால், தயிர், மோர், மில்க்

## மாவட்ட அபிவிருத்தி கூட்டுறவு சங்கம் வேண்டி நிற்கின்றது

ஜோலி, நெய் மற்றும் ஆடை நீக்கிய பால் என்பன தயாரிக்கப்படுகின்றன. இந்த 'ஜோகட்' ஒன்றை எடுத்து நாமும் சுவைத்துப் பார்த்தோம். உண்மையிலேயே மிகவும் சுவையாக இருந்தது. என்னதான் இருந்தாலும் எமது மண்ணில் உற்பத்தி செய்யப் படுகின்ற பொருள்களின் சுவையே தனிதான். அதற்கு, நிகர் எதுவும் இல்லை. இனி வரும் காலங்களில் நாம் அனைவரும் உள்ளூர்த் தயாரிப புக்களுக்கே முதலிடம் கொடுக்க வேண்டும். இந்த விடயத்தில் மட்டும் நாம் அந்நிய நாட்டவர்களின் பழக் கத்தை கைவிட்டுக்கொள்ள வேண்டும். அவர்கள் என்றுமே தமது நாட்டின் உற்பத்திப் பொருள்களைத்தான் விரும்பிச் சுவைப்பார்கள்!



பொதுவாகவே இந்தப் பாற்பொருள களுக்கு குடாநாட்டில் வரவேற்பு இருப்பதாகத் தெரிவித்த தலைவரும், கணக்காளரும் ஜோகட்டுக்கு தனியான மவுசு இருப்பதாக ஏகோ பித்த குரலில் தெரிவித்தனர். இந்தச் செய்தியைக் கேட்டதும் எமது உள்ள மும் பூரித்தது. மண்ணின் உற்பத்திப பொருள்களுக்கு மக்கள் வரவேற்புக கொடுக்கின்றார்கள் என்றால் அது மகிழ்ச்சியான செய்திதானே.

அச்சுவேலியில் உள்ள கோழிப் பண்ணையும் மேற்படி சங்கத்தினா லேயே தற்பொழுது நிர்வகிக்கப்பட்டு வருகிறது. இங்கு கோழித்தீவன உற பத்தி மேற்கொள்ளப்பட்டு வருவதுடன் கோழிக்குஞ்சுகள், மருந்துகள் என் பனவும் விநியோகிக்கப்பட்டு வருவ தாகவும் தெரிவிக்கப்பட்டது. இதே வேளை - திருநெல்வேலியில் உள்ள மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தில் எதிர்காலத்தில் அநேக மாக அடுந்த ஆண்டின் நடுப்பகுதியில பால் பதனிடலும் ஆரம்பிக்கப்படவுள ளது. இதற்கென ஐ.நா.அபிவிருத்தித திட்டம் உதவிட முன்வந்துள்ளதாகவும், இதற்கு யாழ்.மாவட்ட அரச அதிபர் தம்மாலான பங்களிப்பை வழங்கி வருகின்றார் என்றும் - கூறப்பட்டது.

73பேர் பணியாற்றி வருகின்ற இந்தச் சங்கத்தில் 2ஆயிரத்து 500பேர் அங்கத்தவர்களாக உள்ளனர். 3வரு டங்களுக்கு ஒருமுறை இதற்கான பணிப்பாளர் சபை தெரிவுசெய்யப் படுகின்றது. இந்தப் பணிப்பாளர் சபையின் தலைவர் உட்பட மூவர் ஆண்டு தோறும் தெரிவுசெய்யப்படு கின்றனர். இந்த மூவரும் அரச அதி பரின் சிபாரிசுடன், கூட்டுறவு அபி விருத்தி ஆணையாளரால் தெரிவு செய்யப்படுகின்றனர். பணிப்பாளர் சபை தான் இந்தச் சங்கத்தை நிர்வகித்து வருகிறது.

1976முதல் 1990ஆம் ஆண்டு வரை யான காலப்பகுதியில் சங்கத்துக்கு 25லட்சத்து 38ஆயிரத்து 74ரூபா நஷ்டம் ஏற்பட்டது. ஆயினும் அடுத்து வந்த காலப்பகுதியில் சங் கம் பெருமளவு முன்னேற்றம் கண்டு இலாபத்தைச் சம்பாதித்தமையால் அனைத்தும் நிவர்த்தி செய்யப்பட்டுத தற்பொழுது 2002ஆம் ஆண்டு இறுதி வரையில் சங்கம் 3லட்சத்து 23ஆயி ரத்து 350ரூபாவை இலாபமாகச் சம்பாதித்துள்ளது.

தினமும் 90ஆயிரம் லீற்றர் பால் கொள்வனவு செய்யப்படுவதாகவும். இவற்றில் அதிகளவு பால் வலி.கிழக்கு மற்றும் வலி.தெற்கு பிரதேசங்களில் கொள்வனவு செய்யப்படுவதாகவும் கூறிய சங்க நிர்வாகிகள், சங்க ஊழி யர்களின் அயராத உழைப்பும், அரச அதிபரின் மூலம் அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் வழங்குகின்ற உதவிகளும் சங்கத்தின் இயக்கத் துக்குப் பெரிதும் துணை புரிவதாக வும் தெரிவித்தனர்.

இவ்வாறு குடாநாட்டில் சேவையாற்றி வருகின்ற சங்கத்தின் செயற்பாடு களைக் கேட்டறிந்த திருப்தியுடன் நாமும் விடைபெற்றோம். ★




தொகுப்பு - வைஷாலி



# செயற்கைமுறை சினைப்படுத்தல் பயிற்சிநெறி கிளிநொச்சியில்

கால்நடைகளுக்கான செயற்கை முறைச் சினைப்படுத்தல் தொடர்பான பயிற்சிநெறி ஒன்று கடந்த மாதம் 10ஆம் திகதி தொடக்கம் 16ஆம் திகதி வரை கிளிநொச்சியில் நடை பெற்றுள்ளது.

ஐ.நா. அபிவிருத்தித் திட்டத்தின் நிதியுதவியுடனும் கிளிநொச்சி பொருண்மிய மதியுரைக் கழகத்தின் அனுசரணையுடனும் நடைபெற்ற இப் பயிற்சி நெறியில் மன்னார், கிளி நொச்சி, முல்லைத்தீவு ஆகிய மூன்று மாவட்டங்களையும் சேர்ந்த சுமார் 20 பயிற்சியாளர்கள் கலந்து கொண் டனர்.

இப்பயிற்சிநெறி தொடர்பாக திரு நெல்வேலி செயற்கை முறைச் சினைப் படுத்தல் நிலையத்தின் அதிகாரி டாக் டர் இஞானசேகரன் தெரிவித்ததாவது:-

கிளிநொச்சியில் செயற்கை முறை சினைப்படுத்தல் நிலையம் கடந்த ஜன வரி மாதம் ஆரம்பித்து வைக்கப்பட் டது. தற்போது அதில் குறைந்தளவு அதிகாரிகளே கடமையாற்றி வருகின் றனர்.

செயற்கைமுறை சினைப்படுத்தல் முறையினை கிளிநொச்சியில் மேலும் விருத்தி செய்யும் வகையிலேயே ஐ.நா. அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் மேற்படி பயிற்சிநெறி நடைபெற்றுள்ளது.

இவர்களுக்கான மேலதிக பயிற்சி கள் கிளிநொச்சி செயற்கை முறைச் சினைப்படுத்தல் நிலையத்தின் பொறுப் பதிகாரி எஸ்.மகாதேவன் தலைமையில் பொலன்றுவையில் அடுத்த வருட முற் பகுதியில் நடைபெறவுள்ளன.

பின்னர் அவர்கள் தொடர்ச்சியாக கிளிநொச்சி செயற்கைமுறைச் சினைப் படுத்தல் நிலையத்தில் கடமையாற்ற வுள்ளனர் என்று தெரிவித்தார்.(ம-4-6)

### கட்டாய இடமாற்றம் பெற்ற அலுவலர்கள்

# கடமையை பொறுப்பேற்காதவரின் வேதனம் உடனடியாக நிறுத்தப்படும்

## பொது நிர்வாக அமைச்சு செயலர் அறிவிப்பு

வடக்கு - கிழக்கில் கட்டாய இட மாற்றம் வழங்கப்பட்ட அரச அலுவலர் கள் அனைவரும் எதிர்வரும் ஜனவரி மாதம் முதலாம் திகதி புதிய சேவை நிலையங்களில் கடமையைப் பொறுப் பேற்றுக்கொள்ள வேண்டும் என்றும்-

அவ்வாறு, கடமையைப் பொறுப் பேற்றுக்கொள்ளாத அலுவலர்களின் பெப்ரவரி மாத வேதனம் எதுவித காரண மும் இன்றி இடைநிறுத்தப்பட வேண் டும் என்றும் -

மாகாண பொது நிர்வாக, உள்ளூ ராட்சி, கூட்டுறவு அமைச்சின் செயலா ளர் திருமதி கமலா சிவசிதம்பரம் திணைக்களத் தலைவர்களுக்கு அறிவித்துள்ளார்.

இது விடயமாக, அமைச்சின் செய லாளர், அலுவலகங்களுக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட் டிருப்பதாவது:-

இடமாற்றம் செய்யப்பட்ட சகல அரச அலுவலர்களும் கடமையைப் பொறுப் பேற்றல் - கடமையைக் கையளித்தல் விவகாரத்தில் சகல திணைக்களத் தலைவர்களும் கடிதப் பரிமாற்றங்களை முழுமையாக மேற்கொள்ளவேண்டும்.

புதிய சேவை நிலையத்தில் கட மையைப் பொறுப்பேற்க மறுப்பவர்களது வேதனம் எவ்வித காரணமும் இன்றி இடைநிறுத்தப்பட வேண்டும்.

அதேவேளை - இவ்வாறு வேதனம் இடை நிறுத்தப்படுபவர்களின் விபரங் கள் உடனடியாக பொதுநிர்வாக அமைச்சுக்கு அறிவிக்கப்படவேண்டும் - என்று அவர் அறிவித்துள்ளார்.

இதேவேளை - இடமாற்றம் தொடர் பாக பொருத்தமான காரணங்கள், அத் தாட்சிப்பத்திரங்கள் மற்றும் விசேட அத்தாட்சிகள் இன்றி மீள்பரிசீலனைக் கென அனுப்பிவைக்கப்பட்ட கடிதங்கள் மேற்படி அமைச்சினால் நிராகரிக்கப்பட் டுள்ளதாகவும் - கூறப்பட்டது.(எ-185)

# மரண அறிவித்தல்கள்

## நாகமுத்தர் பரராஜசிங்கம்

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த நாகமுத்தர் பரராஜசிங்கம் அவர்கள் 30.11.2003 ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் நாகமுத்தர்-முத்துப்பிள்ளை ஆகியோரின் அன்பு மகனும் பூமணியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற நாகவல்லி, குமாரசாமி (பொலீஸ் உத்தியோகத்தர்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் லயன்செந்தில் செல்வன் (இலங்கை மின்சார சபை), சூரியகலாவதி, சுதாகரன் (கனடா), கண்ணதாஸ் (நோயாளர் நலன்புரிச்சங்கம், இணைப்பாளர் கிளிநொச்சி) ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்ற சூரியநாயகி மற்றும் தெய்வேந்திரம் (அச்சுவேலி தோப்பு), திரவியம் (அச்சுவேலி தோப்பு), இராசாலட்சுமி பாலசிங்கம், பேரின்பநாதன் ஆகியோரின் உடன்பிறவாச் சகோதரனும் இராஜலட்சுமி, கதிரமலைநாதன் (யாழ். போதனா வைத்தியசாலை - நீர் வழங்கல் பகுதி உத்தியோகத்தர்), தர்மினி (கனடா), சுதாஜினி (சுமதி) ஆகியோரின் அன்பு மாமனாரும் றொசாணி, அகிலாஜினி, சஞ்சீவன், ஆனந்தர்சிகா, சகானா, சபீனா, அபிசன், பரவினா, நிவேதிகா, கஜனிதா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரது பூதவுடல் தகனக்கிரியைக்காக இன்று (02.12.2003) செவ்வாய்க் கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் இருந்து துண்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*98,கொழும்புத்துறை வீதி,*
*யாழ்ப்பாணம்.* (24321)(16-18)

தகவல்:
**மனைவி, பிள்ளைகள்.**

## கந்தையா திரவியம்

இல.164, பருத்தித்துறை வீதி,யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் இல.31, வேங்கடேசன் வீதியை (பெருமாள் கோயிலடி) வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா திரவியம் அவர்கள் நேற்று (01.12.2003) திங்கட்கிழமை காலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - சின்னம்மா ஆகியோரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான கந்தையா - கண்மணி ஆகியோரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற சிவபோகம் அவர்களின் அன்புக் கணவரும் ரவீந்திரன் (பிரான்ஸ்), யோகேந்திரன் (இந்தியா), வனிதா (பிரான்ஸ்), மனோகரன், சசிகலா ஆகியோரின் அன்புத் தந்தையாரும் காலஞ்சென்ற பாக்கியம், சின்னமணி, அட்டத்துரை, தம்பிராசா, பாலாமணி ஆகியோரின் அருமைச் சகோதரரும் காலஞ்சென்ற பொன்னுத்துரை மற்றும் கனகம்மா, நேசம்மா, பூமணி, காலஞ்சென்ற விஜயரட்ணம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் காலஞ்சென்ற நா.த. செல்லத்துரை, நா. தம்பிமுத்து மற்றும் புஸ்பராணி, ஆறுமுகம், அன்னபூரணம் ஆகியோரின் சகலனும் புஸ்பராணி, சிவஞானம் ஆகியோரின் அன்பு மாமனாரும் அபிலாஷ், அபிநயா, அனுஷ்கா, கீர்த்தனா, நிருசன், சங்கீத் ஆகியோரின் அருமைப் பேரனாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (2.12.2003) செவ்வாய்க் கிழமை முற்பகல் பத்து மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக வில்லூன்றி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*31,வேங்கடேசன் வீதி,*
*பெருமாள் கோயிலடி,*
*யாழ்ப்பாணம்.*
*T.P-222-2484, 222-5666*

தகவல்:
மனோகரன்
(மகன்)
(25327) (16-18)

# மனித உரிமைக்குழுவின் செயற்பாட்டில் பாதுகாவலர் சங்கத்தினருக்கு அதிருப்தி!

## செய்தியாளர் சந்திப்பில் தெரிவிப்பு

வடபகுதியில் படையினரால் கைது செய்யப்பட்டு காணாமற்போனோர் விவகாரத்தில் மனித உரிமைகள் ஆணைக் குழுவின் செயற்பாடுகள் தமக்கு ஏமாற்றத்தைத்தந்துள்ளதுடன், அதிருப்தி நிலையைத் தோற்றுவித்துள்ளதென காணாமற்போனோர் பாதுகாவலர் சங்கப்பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர்.

வடபகுதியில் படையினரால் கைது செய்யப்பட்டு காணாமற்போனோர் பாதுகாவலர் சங்கத்தின் செய்தியாளர் மாநாடு நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக் கிழமை அன்னையர் முன்னணி தலைவியின் இல்லத்தில் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்ட சங்கத்தின் பிரதிநிதிகள் மேற்படி தமது அதிருப்தியை வெளிப்படுத்தினர்.

வடபகுதியில் காணாமற்போனோர் தொடர்பாக இராணுவ உயர் அதிகாரிகளைச் சந்திக்க முடியாத மனித உரிமைகள் ஆணைக்குழு எதற்காக எமது மண்ணில் தொடர்ந்து செயற்பாட்டை மேற்கொள்ள வேண்டும் - என்றும் அவர்கள் கேள்வி எழுப்பினர்.

பாதுகாவலர் சங்கத் தலைவி பி.செல்வராசா தலைமையில் நடைபெற்ற இந்தச் சந்திப்பில் சங்கத்தின் செயலாளர் சி.சற்குணம் காணாமற்போனோர் பெற்றோர் குடும்ப அங்கத்தவர் அமைப்பின் வடமாகாண செயலாளர் சிதம்பரம் மோகன் உட்பட பல உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். செய்தியாளர் சந்திப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:-

1996 - 1997ஆம் ஆண்டு காலப் பகுதியில் வடபகுதியில் கைது செய்யப்பட்டு காணாமற்போனோர் தொடர்பாக பல வருடங்களாக விசாரணைகளை மேற்கொண்ட மனித உரிமை ஆணைக்குழுவின் விசாரணைக்குழு தமது அறிக்கையை அண்மையில் கொழும்பில் வெளியிட்டுள்ளது. அந்த அறிக்கையில் காணாமற்போனோர் தொடர்பான சம்பவத்துடன் தொடர்புடைய இராணுவ உயர் அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு விசாரணைகளை மேற்கொள்ளமுடியவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட இந்த ஆணைக்குழுக் குழுவினால் உயர் இராணுவ அதிகாரிகளைச் சந்திக்க முடியவில்லை என்றால் ஏன் இந்த அமைப்பு உருவாக்கப்பட்டது. எம்மையும் சர்வதேச சமூகத்தையும் ஏமாற்றுவதற்காகவே இந்த அமைப்பை உருவாக்கியுள்ளனர் என்றே கருத வேண்டியுள்ளது.

காணாமற்போனோர் தொடர்பாக அவர்களுடைய பெற்றோர் மற்றும் உறவினர்களிடமும் தமிழில் வாக்குமூலங்களை பெற்ற விசாரணைக்குழு, தமது அறிக்கையை, ஆங்கிலத்தில் வெளியிட்டமையையும் நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம். அத்துடன், அந்த அறிக்கைக்கு ஆட்சேபம் தெரிவித்து எதிர்வரும் 10ஆம் திகதி மனித உரிமைகள் ஆணைக்குழுவின கொழும்பில் உள்ள தலைமையகம் மற்றும் யாழ்.அலுவலகம் என்பவற்றின் முன்பாக மறியற்போராட்டம் ஒன்றையும் நாம் நடத்தவுள்ளோம்.

வடபகுதியில் கைது செய்யப்பட்டோர் தொடர்பாக ஜனாதிபதியும், பிரதமரும் இதுவரை எந்தவித ஆக்கபூர்வமான நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவில்லை. கிழக்கிலங்கையில் சில முஸ்லிம் இளைஞர்கள் காணமற்போனவுடன் நாட்டின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுவிட்டது என்று கூறி, அரசின் முக்கிய மூன்று பொறுப்புக்களை தம்வசம் எடுத்துக்கொண்ட ஜனாதிபதி, வடபகுதியில் ஆயிரத்துக்கும் அதிகமான தமிழ் இளைஞர், யுவதிகள் படையினரால் கைது செய்யப்பட்டு காணாமற்போனமை தொடர்பாக எதுவித நடவடிக்கையும் எடுக்கவில்லை - என்று மேலும் தெரிவிக்கப்பட்டது.

# கண்ணீர் அஞ்சலி

எமது அலுவலக உத்தியோகத்தர்
**திரு.பொ.சுந்தரலிங்கம்**
அவர்களின் அன்புத் தாயார்
**திருமதி பொன்னுத்துரை மாணிக்கம்**
அவர்கள் 2003.11.30ஆம் திகதி இயற்கை எய்தியமையையிட்டு அவர்களின் இழப்பால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்கின்றோம்.

நலன்புரிச் சங்கம், பிரதேச செயலகம்,
தெல்லிப்பழை.
(25319) (32-17-18)

# மரண அறிவித்தல்

## கிளமென்ற் திருச்செல்வம்

கிளமென்ற் திருச்செல்வம் அவர்கள் நேற்று (01.12.2003) திங்கட் கிழமை மலேஷியாவில் காலமானார்.


அன்னார் நாகேஸ்வரியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற கஷ்மீர் தியாகராஜா, காலஞ்சென்ற எலிசத்துரை, காலஞ்சென்ற சேனாதிராஜா லோறன்ஸ், காலஞ்சென்ற எமிலி, அல்பிரட் இராசநாயகம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் சோமசுந்தரம், அன்ரைத்தினம், சிவசோதி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் இன்று (02.12.2003) செவ்வாய்க்கிழமை மலேஷியாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**திருமதி திருச்செல்வம் நாகேஸ்வரி (மனைவி),**
**Dr. ஆனந்தராஜா லோறன்ஸ்**
**(பெருமான்)**

*கொக்குவில் மேற்கு,*
*கொக்குவில்.* (24326)(17-18)

உலகப் புகழ் பெற்ற L.G
குளிர்சாதனப் பெட்டிகள்
Abans நிறுவனத்தின்
உத்தரவாதத்துடன்
இலவச விநியோக
சேவையில் பெற்றிட

LG
Digitally yours

JAFFNA ELECTRICALS
Authorised Dealer For
Abans
141, POWER HOUSE ROAD, JAFFNA
TEL: 021-222-5766
(C-31531)



புத்தாண்டை முன்னிட்டு சிறப்புத் தள்ளுபடி

இணைப்புக்களுடனான மேசைத்தொலைபேசி
விசேட கழிவில் விற்பனைக்கு

பவர் செலூலர்

24 மணிநேரத்தில் பக்கேஜ் இணைப்புக்களுடனான
மேசைத்தொலைபேசி எப்பிரதேசத்திற்கும் பொருத்தித்தரப்படும்.

உள்வரும் அழைப்பு முற்றிலும் இலவசம்

வாகன சேவை
0712 522889

உத்தரவாதம் உண்டு

IDD இணைப்புக்கள்
சிறிலங்கா ரெலிகொம்முடன்
இணைக்கப்பட்டுள்ளது.

எமது சேவை கேபிள் இணைப்புக்கள் இல்லாமல்
எப்பிரதேசத்திற்கும் இயங்கக்கூடிய
சேவை என அறியத்தருகின்றோம்.
அத்துடன் அன்ரனா மூலம் இயங்குகின்றது.
மேலதிக விவரங்களுக்கு:-



HAND PHONE UNLOCK
செய்து தரப்படும்

HAND PHONE
பழுதுபார்க்கப்படும்

பவர் செலூலர்
T.P 021-2227070
0712-399220
0712-384624
0777-242416

கையிருப்பு முடியும்வரை மட்டுமே.

மாபெரும் சிறப்புத்தள்ளுபடி.

185 (முதலாம் மாடி) கஸ்தூரியார் வீதி,
(ராஜா தியேட்டருக்கு அருகில்) யாழ்ப்பாணம்.


# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 02 | 13 |
| 02 | 12 |
| 1934 | 2002 |

**திருமதி கனகம்மா பொன்னையா**

**திதி: 02.12.2003**

உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

\- குடும்பத்தினர்.

*நிரந்தர முகவரி:*
*ஆளியவளை, தாளையடி.*

தற்காலிக முகவரி:
எல்லை றோட்,
தும்பளை, பருத்தித்துறை.
(25323) (32-17-18)

## இரண்டாவது வருட நினைவஞ்சலி



தோற்றம் 04 - 03 - 1923

மறைவு 24 - 11 - 2001

### திருமதி சின்னத்தங்கம் வைரமுத்து

ஆண்டுகள் இரண்டு சென்றாலும் ஆறவில்லை - உம் துயரம் என்றும் உங்கள் நினைவுடன் வாழும்......

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்
வ.சிவகணேசதாசன்
உரிமையாளர் சர்மிளா டிரேடர்ஸ்,
உரும்பிராய்.

*கணேசபதி,*
*கற்பகப்பிள்ளையார் வீதி,*
*உரும்பிராய் வடக்கு,*
*உரும்பிராய்.* (25329)(11-16)

(25329) (32-11-18)


## நடமாடும் இலவச கண்பரிசோதனை முகாம்

" உங்கள் கண்களை நாம் காப்போம்"
அநேக மக்களின் வேண்டுகோளுக்கிணங்க
இன்று 02.12.2003 செவ்வாய்க்கிழமை
காலை 9.00 மணிமுதல் 2.00 மணி

உடுவில் Y.M.C.A

மிகப்பெறுமதியான கண்ணாடிகளை 750 ருபாய்க்கு பெற்றுக்கொள்ளலாம். கொழும்பில் இருந்து வருகை தந்த வைத்திய நிபுணர்களால பரிசோதனை செய்யப்படும். மேலும் சில விசேட சலுகைகளும் உண்டு.

விளம்பர அனுசரணை:

உடுவில் மகளிர் கல்லூரிக்கு முன்பாக சகல விதமான றேடியோ, மணிக் கூடுகளையும் ஒரே இடத்தில் திருத்திக் கொள்ள...

நாதன் வோச் வேக் சென்றர்
உடுவில்

(சி-31579)



## இலங்கை கணக்காளர் சேவையின் வகுப்பு II தரம் II இற்கான ஆட்சேர்ப்புக்கான போட்டிப் பரீட்சை 2003

மேற்படி போட்டிப் பரீட்சைக்கான வழிகாட்டல் விரிவுரைகள் 14.12.2003இல் ஆரம்பமாகின்றன.

விரிவுரைகள் அனுபவம் வாய்ந்த கணக்காளராலும் திறமை வாய்ந்த விரிவுரையாளர்களாலும் நடத்தப்படும்.

பதிவுகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன.

விவரங்களுக்கு,
பட்டப்படிப்புகள் கல்லூரி,
57/13, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

(25315) (32-11-18)


# மரண அறிவித்தல்கள்

## மரியநாயகம் அன்ரன் யோசேப்பு

(C.T.B. மெக்கானிக் கோண்டாவில், டிப்போ)

மிருசுவிலைப் பிறப்பிடமாகவும் தற்காலிகமாக அளவெட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட அன்ரன் யோசேப்பு நேற்று (01.12.2003) திங்கள் காலமானார்.

அன்னார் றெஜினா அரியமலரின் அன்புக் கணவரும் மெடோனா அமுதா சினியின் (யாழ். தி.கு.க.பாடசாலை), பாசமிகு தந்தையும் ஜேக்கப் மரியநாயகம், மரியம்மா ஆகியோரின் மூத்த புதல்வனும் பிரான்சிஸ், மரியநாயகி, யேசுதாசன் ஆகியோரின் சகோதரனும் SR.மேரிபொஸ்கோ (தி.கு.க. பேசாலை) SR.M.ஹென்றியல் (கார்மேல் மடம் கரவெட்டி), Rev.FR. திருச்செல்வம் O.M.I (இறையியல் கல்லூரி அம்பிட்டியா), Rev.Fr நீக்கிலஸ் (குருமுதல்வர், ஆயர் இல்லம், யாழ்ப்பாணம்) ஆகியோரின் பெறாமகனும் அன்ரனி பீற்றரின் (ஆசிரியர், உருப்பிராய் இந்துக் கல்லூரி) மைத்துனரும் யோண்போலின் பெரியப்பாவும் அமல நிரோசன், மரிய நிலக்ஷி, ஆன்றிலோஜினி, ஆருண்நிஷாந்தினி ஆகியோரின் பாசமிகு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 04.12.2003 வியாழன் காலை 9 மணிக்கு இல.10, தியோகு வீதி, மத்தியுஸ் வீதி, (கியூடெக் அருகில்) இல்லத்தில இருந்து யாழ் பேராலயத்திற்கு இரங்கல் திருப்பலிக்கு எடுத்துச்செல்லப்பட்டு பின்னர் புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறிவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*10, தியோகு வீதி,*
*மத்தியுஸ் வீதி,*
*யாழ்ப்பாணம்.*
(சி-31582)
தகவல்:
ம.மரியம்மா (தாய்).

## கணபதிப்பிள்ளை அருந்தவராசா (கண்ணன்)

மறவன்புலோவைப் பிறப்பிடமாகவும் திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் தற்போது இந்தியாவில் வசித்து வருபவருமான அருந்தவராசா 30.11.2003 அன்று இந்தியாவில் அகாலமரணமானார்.

அன்னார் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை (சிவபுண்ணியம்) - நாகேஸ் வரியின் அன்பு மகனும் பிறேமா, கதிர்காமநாதன் (சுவிஸ்), செந்தில்நாதன் (கிளிநொச்சி), அமரதாஸ் (ருபன் - பிரான்ஸ்) குமாரதாஸ் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார். இறுதிக்கிரியைகள் பற்றி பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

*இல.131,பாற்பண்ணை வீதி,*
*திருநெல்வேலி வடக்கு.*
(25331)(36-11-18)
தகவல்:
ச.சிறிகாந்தா (மாமனார்)
(யாழ். தபால் திணைக்களம்)

## ஜனாதிபதிக்கு கடிதம்

கொழும்பு,டிசெ.2

திருகோணமலை கிண்ணியா பிரதேசத்தில் முஸ்லிம் மக்களுக்கு எதிராகத தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வரும் வன்முறைகளை முடிவுக்குக் கொண்டுவரவும், அங்கு ஏற்பட்டுள்ள பதற்றத்தை தணிக்கவும் நாட்டின் ஜனாதிபதி என்ற வகையிலும் பாதுகாப்பு அமைச்சர் என்ற முறையிலும் நடவடிக்கை எடுக்கக் கோரி அமைச்சா அதாவுல்லா, ஜனாதிபதி சந்திரிக்கா குமாரதுங்கவுக்கு கடிதம் எழுதியுள்ளார்.

கிழக்கில் தொடரும் வன்முறைகளால் முஸ்லிம் மக்கள் மத்தியில் பதற்றமான சூழ்நிலை நிலவி வருகிறது. இது சொல்ல முடியாத சூழ்நிலையை அங்கு ஏற்படுத்தியுள்ளது. இந்த நிலை தொடர அனுமதிக்கக் கூடாது என்று அமைச்சர் அதாவுல்லா தமது கடிதத்தில் கேட்டுள்ளார்.

## எய்ட்ஸ் தடுப்பு வாரம்

சர்வதேச எய்ட்ஸ் தடுப்புதினமான நேற்று முதல் எதிர்வரும் 7 ஆம் திகதி வரை எய்ட்ஸ் தடுப்பு வாரமாக மானிப்பாய் றோட்டரக் கழகம் அனுஷ்டிக்கிறது. இதனையொட்டி எய்ட்ஸ் நோய்த் தடுப்பு குறித்த விழிப்புணர்வுக் கருத்தரங்குகளையும் சுவரொட்டிப் பிரசாரங்களையும் கழகம் நடத்த உள்ளது. (ஒ)


ஈசன் கல்வி நிலையம்
கணக்கீடு
A/L DAY, 2004, 2005
D.SAM
நேர அட்டவணைகளை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளவும்
(25310) (30-11-18-36) - நிர்வாகி.

### விற்பனைக்கு

கட்டட வேலைக்குத் தேவையான ஒட்டுப் பலகைகள் (fly wood), பனை மரங்கள், முட்டு மரங்கள், மாமபலகைகள் என்பன விற்பனைக்கு உண்டு.

தொடர்பு -
132,கச்சேரி நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம.
☎ 2226105,
077 6078888

(25318)(36-11-18)

ராஜா யாழ்ப்பாணம்
சிலம்பரசன் (சிம்பு), ஷார்மி நடித்த
காதல் அழிவதில்லை
காட்சிகள்: 10.30,2.30,6.30 (பி.நே.)

நிறைஞ்சனாஸ் சங்கானை
விஜய், ஜோதிகா நடித்த
திருமலை
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பி.நே.)
2 FAST 2 FURIOVS
(C-31619)(12)

லிபேட்டி அச்சுவேலி
விக்ரம், ஜோதிகா, ரீமாசென், விவேக் நடித்த
தூள்



காட்சிகள்.: 3.00, 7.00. (பி.நே)
(C/31621)

நாகம்ஸ் சுன்னாகம்
ஆஞ்சநேயா

லஷ்சுமி சினிமா இணுவில்
விஜய், பூமிகா, விவேக், மோனல் இன்னும் பலர் நடிப்பில்
பத்ரி



காட்சி நேரம் : 10.30, 2.30, 6.30. (பி.நே.)


# மரண அறிவித்தல்கள்

## தம்பு கந்தசாமி

அல்வாய் வடக்கைச் சேர்ந்த தம்பு கந்தசாமி நேற்று (01.12.2003) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பு - பொன்னம்மாவின் புத்திரரும் காலஞ்சென்ற (தலைவர்) கிருஷ்ணபிள்ளை - லக்சுமி ஆகியோரின் மருமகனும் பாக்கியத்தின் அன்புக் கணவரும் ஸ்ரீவனஜா, வரதராஜன் (பருத்தித்துறை ப.நோ.கூ.சங்கக் கிளை முகாமையாளர்), வாமதேவன் (யாழ்.போதானா வைத்தியசாலை), விஜயலட்சுமி, தயாபரன், பாமினி, கலைஅரசி, வாகீசன், கந்தசபேசன் (லண்டன்), பாக்கியநாதன் ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற கணேசலிங்கம் மற்றும் ஐங்கரன், ஞானசோதி (தாதிய உத்தியோகத்தர், போதனா வைத்தியசாலை யாழ்ப்பாணம்), நடராசா, சுரேஷ்குமார் (டோகா) ஆகியோரின் அன்பு மாமானாரும் காலஞ்சென்றவர்களான பார்வதி, சரஸ்வதி மற்றும் பாலசிங்கம், கனகரத்தினம் (ஓய்வுபெற்ற அதிபர்), சின்னராசா ஆகியோரின் சகோதரரும் காலஞ்சென்ற பவளம் மற்றும் தருமலிங்கம், இரத்தினசிங்கம் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.12.2003) செவ்வாய்க் கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று, பிற்பகல் 2 மணிக்கு சுப்பர் மடம் மயானத்திற்கு தகனக்கிரியைகளுக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*மஹாத்மா வீதி,*
*அல்வாய் வடக்கு,*
*அல்வாய்.*
(சி/31667)(36-11-18)
தகவல்:
குடும்பத்தினர்.

## திருமதி தவமணி செல்லத்துரை

இருபாலையைச் சேர்ந்தவரும் தற்போது 42/1 1/1 றொபேட் குணவர்த்தன மாவத்தை, கிருலப்பனையில் வசித்தவருமான திருமதி தவமணி செல்லத்துரை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லத்துரையின் அன்புப் பாரியாரும் இரட்ணசிங்கம் (SLRC), காலஞ்சென்ற பாலசிங்கம், தவச்செல்வராணி, ஜெயராசசிங்கம், சற்குணசிங்கம் (லீலா EXPORTS & IMPORTS), அருளராஜசிங்கம (கனடா), செல்வசிங்கம் (கனடா), ஜெயராணி(கனடா), குலசிங்கம் (அமெரிக்கா), சுரேஸகுமார் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் ரட்ணேஸ்வரி, காலஞ்சென்ற டொரின், Dr.சரவணபவன், ஜெயராணி, விஜயமலர், செல்வமணி (கனடா), பவானி (கனடா), லோகநாதன் (கனடா), பத்மா(தேவி) (அமெரிக்கா), கௌரி (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியாரும் சிவபாக்கியவதி (ஜேர்மனி), காலஞ்சென்ற கனகரத்தினம் ஆகியோரின் சகோதரியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் அஞ்சலிக்காக 01.12.2003 இரவு 6.30 மணி முதல் 03.12.2003 வரை கொழும்பு மலர்ச்சாலை களுபோவிலையில் வைக்கப்பட்டு பின் தகனக்கிரியைகள் மு.ப 10.00 மணிக்கு கல்கிசை (MT.LAVANIA) மயானத்தில் நிகழும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

42/1 1/1, *றொபேட் குணவர்த்தன மாவத்தை,*
*கிருலப்பனை, கொழும்பு-06.*
*தொ.பே: இல.2512231*
(சி-31666)(36-11-18)
தகவல்:
மகன்மார்.

## நாகலிங்கம் சின்னத்துரை

(ஓய்வுபெற்ற யாழ். பலநோக்கு கூட்டுறவுச் சங்க களஞ்சியப் பொறுப்பாளர்)

யாழ்ப்பாணம், நீராவியடி, பிறவுண் வீதியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட முன்னாள் யாழ்.பலநோக்கு கூட்டுறவுச் சங்க களஞ்சியப் பொறுப்பாளரும், நீராவியடி சனசமூக தலைவரும் கோம்பையன் மணல் மயான உப தலைவருமான நாகலிங்கம் சின்னத்துரை 27-11-2003 அன்று இறைவனடி சேர்ந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற நாகலிங்கம் - அன்னப்பிள்ளையின் அன்பு மகனும் காலஞ்சென்ற நாகமணி - அன்னலட்சுமியின் அன்பு மருமகனும் சாந்தநாயகியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம், செல்லத்துரை, சின்னராசா மற்றும் ராசமணியின் அன்புச் சகோதரனும் மனோகரன்(பிரான்ஸ்),மனோரஞ்சிதன்(பிரான்ஸ்), ஜெயச்சந்திரன்(பிரான்ஸ்), மதிரூபன்(பிரான்ஸ்), ஜெயமதி, ஜெயசுதா ஆகியோரின் அன்புத் தந்தையும் சுமதி(பிரான்ஸ்), ஜெகதீஸ்வரி(பிரான்ஸ்), சந்திரகலா (பிரான்ஸ்), யசோதரா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும் மனோஜ்( பிரான்ஸ்), டினேஸ்(பிரான்ஸ்), நிசாந்(பிரான்ஸ்), மிதுலன்(பிரான்ஸ்), நந்தாஷா(பிரான்ஸ்), ஜெனிக்(பிரான்ஸ்), ஜெனுஷன்(பிரான்ஸ்), மயூரன்(பிரான்ஸ்) யதுஷன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புப் பேரனும் ராஜனின் அன்புப் பெரிய தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02-12-2003) செவ்வாய்க்கிழமை காலை 8.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக கோம்பையன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*10, 2ஆவது ஒழுங்கை,*
*பிறவுண் வீதி,யாழ்ப்பாணம்.*
(25330)(11-18-36)
தகவல்:
குடும்பத்தினர்.

## இரத்தினேஸ்வரன் சுகுமார் (நிறஞ்சன்)

மண்டைதீவு, 8 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இரத்தினேஸ்வரன் சுகுமார் (நிறஞ்சன்) அவர்கள் காலமானார்.

அன்னார் இரத்தினேஸ்வரன் - கலைவாணி ஆகியோரின் அன்புப் புதல்வனும் நிமலன், சுமன், ராசன் ஆகியோரின் பாசமிகு சகோதரனும் காலஞ்சென்ற இரத்தினம் - காசுவதி, காலம் சென்ற நடராசா - கோணேஸ்வரியின் அன்புப் பேரனும் ஸ்ரீவரதராசா - தனேஸ்வரி (கனடா), காலஞ்சென்ற நாகரெத்தினம் - இரத்தினேஸ்வரி (இந்தியா), கனகலிங்கம் - புவனேஸ்வரி ஆகியோரின் மருமகனும் விஸ்வரெத்தினம் - சிட்டு, லலிதா - சபாநாயகம், ரஞ்சினி - தவராசா, சறோயாதேவி - விக்னேஸ்வரன் (கனடா), சுசிலாதேவி - மயில்வாகனம், யமுனாதேவி - காந்தகுமார் ஆகியோரின் பாசமிகு பெறாமகனும் சியாமளன், தர்சினி, கஜனி (கனடா), காலஞ்சென்ற ராசன், சிறி (லண்டன்), காலஞ்சென்ற ஈசன், ஈஸ்வரி (ஜேர்மனி), பேபி, குமார் (லண்டன்), காலஞ்சென்ற கலா, தயா, வாசுகி, காந்தரூபன், காலஞ்சென்ற செல்வி, செல்வன் இவர்களது மைத்துனரும் குயிலினி, பிரியா, தர்ஸ்சினி, வேணுஜா, தேனுஜா, சதா, உதயகாந், கஜிதா- மனோ (கனடா), ராதிகா, தேவிகா, கார்த்திகா (போராளி), தர்ஷன் - ஜீவரூபன், சோபிதன் (கனடா), சுகந்தினி, அஜந்தினி, நிரோஜன், கயந்தினி, யதுர்சன் - கஜலக்ஷ்சி, லக்சியா, சங்கரன், கிருஷிகன் இவர்களது பாசமிகு உடன்பிறவா சகோதரனும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் நாளை (03.12.2003) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மண்டைதீவு இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளும்படி அன்புடன் அறியத்தருகின்றேன்.

*8 ஆம் வட்டாரம்,*
*மண்டைதீவு.*
(25328)(36-11-18)
தகவல்:
இ.இரத்தினேஸ்வரன்
(தந்தை).

# திருமலையில் குழப்பத்தை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) உபாலி ஹேவகே, 22ஆவது படைப் பிரிவு அதிகாரி ஜாலியா ஜயசேகர மற்றும் பலர் கலந்துகொண்டனர்.

இங்கு தருமன் பேசுகையில் தெரிவித்ததாவது:-

'சமாதான முயற்சிகளில் ஈடுபட்டுள்ள நாம், சமாதானத்தை உருவாக்குவதற்கான நடவடிக்கைகளையே மேற்கொண்டு வருகின்றோம். அண்மைக் காலத்தில் திருகோணமலை மாவட்டத்தில் குழப்பத்தினை உருவாக்கும் ஒருசில சக்திகளே கலவரத்தை மேற்கொண்டு வருகின்றன.

ஆலங்கேணியில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உணவுப் பொருள்கள் கொண்டுசெல்லப்பட்டவேளை, அதனை ஒரு குழுவினர் தடுத்து நிறுத்த முனைந்துள்ளனர். இதேபோன்று கடந்த வெள்ளியன்று பாதிக்கப்பட்டவர்களுக்கு படகு மூலம் கொண்டு செல்லப்பட்ட உணவுப் பொருள்களும் தடுத்து நிறுத்தப்பட்டன. மறுநாளே அவற்றை அங்கு கொண்டு செலல முடிந்தது. இவை இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில் இடம்பெற்றுள்ளன. சாரதா வீதியில் தாக்கப்பட்டவர்கள் சம்பந்தப்பட்ட நபர்களை இனங்கண்டுள்ளனர். எனவே, இத்தகைய சக்திகளை இனங்காண நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டும்' - என்றார் தருமன்.

அங்கு பேசிய மாவட்ட போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் பிரதித் தலைவர் கோர்ட் கூறியதாவது:-

கடந்த 22மாத காலத்தில் நடைபெறாத சம்பவங்கள் தற்போது இடம்பெற்றுவருகின்றன. இவை தொடர்பாக நாம் அவதானத்துடன் செயற்பட்டு சம்பவத்துக்குப் பொறுப்பான சக்திகளை இனங்காணவேண்டும். சமாதான முயற்சிகளைத் தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்லவேண்டும் - என்றார்.

(ஒ-9)

# கட்சியின் தலைவர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) கொழும்பு செய்தி ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய பேட்டியில் இவ்வாறு தெரிவித்திருக்கிறார்.

கட்சியின் தலைவர் எம்.சிவசிதம்பரத்தின் மறைவை அடுத்து, அந்த இடத்துக்கு வீ.ஆனந்தசங்கரியைத் தெரிவு செய்த அதே மத்திய குழு தான் இப்போது அவர் மீது நம்பிக்கையை இழந்து, நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை நிறைவேற்றி, அவரைப் பதவியிலிருந்து அகற்றுகின்றது. என்றும் அவர் கூறியிருக்கின்றார்

ஆனால், கட்சி யாப்புப்படி கட்சியின் பொதுச்சபையைத் தவிர வேறு எவரும் தன்னைக் கட்சியின் தலைவர் பதவியிலிருந்து விலக்க முடியாது என்று ஆனந்தசங்கரி தெரிவித்திருக்கின்றார்.

கட்சியின் செயலாளர் நாயகம் கூறுவது போல மத்திய செயற்குழு அப்படி ஒரு தீர்மானத்தை எடுத்துள்ளது என்று வைத்தாலும் கூட, அதனை ஏற்கமுடியாது. ஏனென்றால் மத்திய செயற்குழுவுக்கு அத்தகைய அதிகாரம் ஏதுமில்லை என்றும் ஆனந்தசங்கரி கூறுகின்றார்.

*(மற்றொரு செய்தி 10ஆம் பக்கத்தில்)*

(ஒ)

## மலிக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) யில் பிரதமரின் காரியாலயத்தில் ஒன்றுகூடியது.

இருதரப்பினருக்கிடையில் இணக்கப்பாட்டை ஏற்படுத்துவதற்குரிய விடயங்கள் சம்பந்தமாக ஆராய்வதற்காக தொடர்ந்தும் நடவடிக்கை மேற்கொள்ளவேண்டுமென முடிவு செய்யப்பட்டது. முரண்படும் விடயங்கள் சம்பந்தமாக தீர்மானத்துக்கு வருவதற்கு இன்னும் கால அவகாசம் தேவை எனவும் தீர்மானிக்கப்பட்டது.

ஏற்கனவே திட்டமிட்டிருந்தவாறு ஜனாதிபதியும் பிரதமரும் இவ்விடயம் தொடர்பாக இவ்வார இறுதியில் சந்திப்பதற்கு திட்டமிட்டுள்ளனர்.

- இப்படி அதில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

## ஆபிரிக்க...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) ளாளர் நாயகம் ஆகியோரைப் புலிகளின் அரசியல் குழுவினர் மரியாதை நிமித்தம் சந்திக்க இருந்தனர்.

அவர்கள் தென்னாபிரிக்காவின் மனித உரிமை ஆணைக்குழு, சுயாதீன தேர்தல் ஆணைக்குழு மற்றும் அரசமைப்பு நீதிமன்றம் ஆகியவற்றின் பிரதிநிதிகளையும் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளனர்.

ஆபிரிக்க தேசிய காங்கிரஸின் கவஸூலு நாட்டால், மேற்கு கேப் ஆகிய மாகாணங்களின் தலைவர்களையும் அவர்கள் சந்தித்துக் கூட்டமைப்புப் பங்களிப்புத் தொடர்பாக அந்தத் தலைவர்களின் அனுபவங்கள் குறித்து உரையாடினர்.

ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் இன்று இலங்கை வெளிவிவகார அமைச்சர் டிரோன் பெர்னாண்டோவையும் சந்தித்துப் பேசவிருக்கின்றது.

# ஓட்டோவில் கிரனேட்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) கிலோமீற்றர் தூரத்துக்கு அப்பாலுள்ள கண்டலூற்றுப் பகுதியிலுள்ள வீடு ஒன்றின் மீது கைக்குண்டு வீசப்பட்டது. இதில் அந்த வீட்டிலிருந்த முகம்மது சுல்தான் சங்கரியா (வயது-55) என்பவர் உயிரிழந்தார்.

மேலும் இருவர் காயமடைந்து கிண்ணியா அரசினர் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

மற்றொரு சம்பவத்தில் கிண்ணியா அரை ஏக்கர் பகுதியில் வைத்து நேற்று திங்கட்கிழமை பகல் 12.30 மணியளவில் ஜலீல் ஹப்பர் நைனார் எனபவர் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி காயமடைந்தார். காயமடைந்தவர் திருகோணமலை அரசினர் பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கிண்ணியா நடு ஊற்றுக் கிராமத்தல் இரவு நேரவயல் காவலுக்குச சென்ற மூன்று முஸ்லிம்கள் கடந்த வெள்ளிக்கிழமை இரவு இனந்தெரியாதோரால் வெட்டிக் கொல்லப்பட்டனர் என்பதும் - இதனால் அங்கு பதற்ற நிலை உருவாகியுள்ளமையும் - தெரிந்ததே

(ஒ-9)

# கூட்டணி மத்திய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) தலை வீ.ஆனந்தசங்கரிக்கு கட்சித் தலைவர் என்ற வகையில் இல்லாமல் மத்திய குழு உறுப்பினர் என்ற முறையில் மட்டுமே அனுப்புவது என்றும் -

கட்சியின் உயர் வட்டாரங்கள் தீர்மானித்திருப்பதாக அறியவந்தது.

அடுத்த மத்திய செயற்குழுக் கூட்டத்துக்கான அறிவித்தலில் இடம்பெறும் நிகழ்ச்சி நிரலின் விவரமும் கசிந்துள்ளது.

அதன்படி -

★ வீ.ஆனந்தசங்கரியின் செயற்பாடு மற்றும் அவருக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் குறித்து விசாரித்து பொதுச் சபை உரிய சிபார்சை செய்வதற்காக ஒழுக்காற்று(நடவடிக்கை) குழு ஒன்றை அமைத்தல்.

★ கட்சியின் தேர்தல் நியமனக் குழுவை நியமித்தல்.

★ கட்சிக் கிளைகளைப் புனரமைத்தலும் பொதுச் சபையைக் கூட்டலும்.

★ கடந்த மத்திய செயற்குழுக் கூட்டத்தை ஒட்டி வன்முறைப் போக்கில் நடந்துகொண்ட உறுப்பினர்கள் சிலருக்கு எதிரான முறைப்பாடு குறித்து ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்தல்.

- இவைபோன்ற விடயங்கள் அடுத்த கூட்டத்தின் நிகழ்ச்சி நிரலில் இடம்பெறவுள்ளன.

"கொழும்பில் மத்திய செயற்குழுக் கூட்டம் நடைபெறும் சமயங்களில் அதில் உறுப்பினர்களாக இல்லாத வெளியாள்கள் மற்றும் ஆதரவாளர்களைக் கூட்டி வந்து குழப்பம் செய்யும் நடவடிக்கை அடுத்த கூட்டம் அம்பாறையில் நடக்கும்போது அங்கு இடம்பெறுமா என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும் என்றார் கட்சி முக்கியஸ்தர் ஒருவர்.

# பாதுகாப்பு விவகாரம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) கொலைகள் குறித்து சபையில் விவாதித்தார். முஸ்லிம் மக்களுக்கு தகுந்த பாதுகாப்பு வழங்கும்படி அவர் கண்ணீர் மல்க கோரிக்கை விடுத்தார்.

மஹ்ரூப் எம்.பி. பேசும்போது -

இச்சம்பவங்கள் தொடர்பாக ஜனாதிபதியும் முப்படைத்தளபதிகளும், பாதுகாப்பு அமைச்சும் எமக்கு பதில் அளிக்கவேண்டும். அவர்களை இந்தச் சபைக்கு அழைத்து எமது மக்களின் பாதுகாப்புத் தொடர்பாக அவர்களிடம் உத்தரவாதம் பெறப்படவேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

இதேவேளை, இச்சம்பவம் தொடர்பாக ஒத்திவைப்பு விவாதம் ஒன்றுக்கு இடமளிக்கவேண்டும். இந்தச் சபையில் உள்ள எல்லா முஸ்லிம் உறுப்பினர்களும் தலா ஐந்து நிமிடங்களாவது பேச இடமளிக்க வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

மஹரூப் எம்.பியின் கூற்றை தொழில் அமைச்சர் மஹிந்த சமரசிங்கவும் வலியுறுத்தியதோடு, முஸ்லிம்களின் இந்த நிலைக்கு பாதுகாப்பு அமைச்சே பதில் கூறவேண்டும் என்றார்.

இதேவேளையிலேயே ஆளும் தரப்பினருக்கும் எதிர்கட்சியினருக்கும் இடையே பலத்த சர்ச்சை ஏற்பட்டது.

கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம்களுக்கு ஏற்படும் அச்சுறுத்தல்களுக்கு ஜனாதிபதி பதில் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை. ஜனாதிபதிக்கும் இதற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்று வாதிட்டனர் எதிரணியினர்.

ஜே.வி.பி. உறுப்பினரான விமல வீரவன்ச, முஸ்லிம்களுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்புக்களுக்கு அரசும் புலிகளும் செய்துகொண்ட சமாதான ஒப்பந்தமே காரணம் எனக் கூறினார்.

இதனால், சபையின் இருபக்கங்களிலும் ஒரே கூச்சலும் குழப்பமும் எழுந்தன.

அமைதியை ஏற்படுத்த விபரீதங்களுக்கு காரணம் ஜனாதிபதியா அல்லது சமாதான ஒப்பந்தமா என்ற சர்ச்சை பலமடைந்தது.

இந்தக் கூச்சல் குழப்பங்களுக்கு மத்தியில் அரசதரப்பில் உள்ள மையோன் முஸ்தபா, பஷீர் சேகு தாவுத், நூர்தீன் மஷூர், எம்.எஸ் தௌபீக், எம்.ஏ.எம்.மஹரூப் ஆகியோர் தமது ஆசனத்தில் இருந்து எழுந்து சபாநாயகரின் ஆசனத்துக்கு அருகில் சென்றனர். தமது கோரிக்கையை பலத்த சத்தத்தோடு அவர்கள் முன்வைத்தனர்.

இவர்களுடைய கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்பட்டது. சபாநாயகர், இன்று ஒத்திவைப்புப் பிரேரணை விவாதம் ஒன்றை நடத்த அனுமதி வழங்கி சர்ச்சைக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது.

## பாதுகாப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) போதிலும் இதுவரை அதற்கான அனுமதி வழங்கப் படாமல் இருந்துவந்தது.

யாழ்.மாவட்ட இராணுவத் தலைமையத்திலிருந்து தமக்கு வழங்கப்பட்ட விசேட கட்டளைக்கமைவாகவே மேற்படி பகுதியில் மீளக்குடியமர்வதற்கு மக்கள் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்று நாவாந்துறை படை முகாம் பொறுப்பதிகாரி நேற்றுத் தெரிவித்தார்

இதேவேளை -

மேற்படி பகுதியில் மிதிவெடிகள் மற்றும் வெடிபொருள்கள் புதைக்கப்பட்டிருக்கலாம் என பொதுமக்கள் அச்சம் தெரிவித்துள்ளனர்.

அங்கு வெடிபொருள்கள் எதுவும் புதைக்கப்பட்டிருக்கவில்லை என்பதை சம்பந்தப்பட்ட பொது நிறுவனங்கள் உறுதிப்படுத்தித் தரவேண்டும் எனவும் - அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்திருக்கின்றனர். (ம-4-5)

## தமிழகத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) காந்த் ராஜா என்ற தவன் (வயது-38) என்பவரே கைதானவராவார்.

2000ஆம் ஆண்டு இலங்கை அகதியாக இந்தியா சென்ற தவன் அவரது விஸா காலம் முடிந்த பிறகும் இலங்கைக்குத் திரும்பாமல் சட்ட விரோதமாக திருச்சியில் தங்கியிருந்ததாக கூறப்பட்டது.


நீங்கள் விண்ணப் பித்துவிட்டீர்களா? இறுதிச் சந்தர்ப்பம்!!!

IIS IIS IIS IIS IIS IIS IIS



ஓட்டிப் பரீட்சையில் மிகத் திறமையாகச் செயற்படும் மாணவர் ஒருவருக்கு புத்தம் புதிய கணனி (PIV) ஒன்று பரிசளிக்கப்படும்.

கணனிக் கல்விக்கான புலமைப் பரிசில்திட்டம் - 2004

விண்ணப்ப முடிவு திகதி: 15/12/2003 வரை நீடிக்கப்பட்டுள்ளது.

மேலும் எக்காரணம் கொண்டும் நீடிக்கப்படமாட்டாது.

எமது புலமைப்பரிசில் திட்டத்தின்:
தெரிவுப் பரீட்சைக்கான அனுமதி அட்டைகள்
அனுப்பப்படும் திகதி : 16.12.2003
தெரிவுப் பரீட்சை நடைபெறும் திகதி : 21.12.2003
தெரிவுப் பரீட்சை முடிவுகள் வெளியாகும் திகதி : 24.12.2003
கல்வியாண்டு 2004/2005 இல் கற்கை நெறிகள்
ஆரம்பமாகும் காலப்பகுதிகள்: ஜனவரி, மார்ச், மே, ஜூன், ஓகஸ்ட், செப்ரெம்பர், நவம்பர்.

சந்தர்ப்பத்தை தவறவிடாதீர்கள்!
கணனிக்கல்விக்கு தனித்துவம் மிக்க IIS நிறுவனத்தில் இணைவதனூடாக
கணனி உலகில் நீங்கள் அங்கீகரிக்கப்படுகிறீர்கள்.

மேலதிக விவரங்களுக்கு:
IIS, # 100, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.

(சி-31609) (36)






சேவை

கொம்பியூட்டர் ரைப்செற்றிங் செய்து லேசர் பிறின்டிஸ் எடுத்துக்கொடுக்கப்படும். அத்துடன் கலர் பிறின்டிங், எஸ்கானிங், ரென்சில் கட்டிங், றோணியோ மற்றும் சகல விதமான புத்தகங்களும் பையின்டிங் செய்ய லாம்.

உங்கள் வெளிநாட்டு உறவுகளுடன் உங்கள் படங்களை இணைத்துத் தரப்படும்.

அனைத்துக்கும் நம்பிக்கையான இடம்:

ராஜ் கொம்பியூட்டர்
பிறின்டிங் & புக் பயின்டிங்
43, பலாலி றோட், கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
T.P : 077-6176794

பிறைற்றின் கல்வி நிலையம்
சங்கத்தானை
தென்மராட்சி மாணவர்களின் கலங்கரை விளக்கு
கல்வியாண்டு 2004
தரம் 5-11 வரையான வகுப்புகள்
ஆரம்பம் : 04.12.2003
வியாழன் 9 a.m.


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 02.12.2003இல் அச்சிட்டு வெளியீடப்பெற்றது.